# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 ■ கதிர்: 023 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 04, வியாழன் 19.12.2013

பக்கம் : 24

வன்னி : ரூபா.20

யாழ். : ரூபா.20

கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை

$29^{C}$ $24^{C}$



பக்கம் 06

**மக்களின் கருத்தை அறிந்தே டில்லியில் ஆட்சியமைப்போம்**



பக்கம் 22

**சென்.ஜோன்ஸ் கல்கிஸை தோமஸ் கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில்**



பக்கம் 23

**பாகிஸ்தான் வீரர்கள் ஆத்திரம்**

# இறுதிப்போரில் படை நகர்த்திய அதிகாரிகளுக்கு விசா மறுப்பு

## *சர்வதேச நாடுகளின் அதிரடியால் இலங்கைக்குச் சிக்கல்*

கொழும்பு, டிசெ. 19
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரில் இராணுவத்துக்கு தலைமை தாங்கிய படை அதிகாரிகளுக்கு, சர்வதேச நாடுகள் தமது நாடுகளுக்குள் நுழைவதற்கான நுழைவிசைவு (விசா) வழங்குவதற்கு மறுத்து வருகின்றன.

போர்க் குற்றங்கள் புரிந்ததாகக் கூறப்படும் 58 ஆவது படைப் பிரிவுக்கு தலைமை தாங்கிய சவீந்திர சில்வாவுக்கு நுழைவிசைவு வழங்கக் கனடா மறுத்துள்ளது. இந்த விடயம் சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்குப் பெரும் இராஜதந்திர நெருக்கடியைக் கொடுத்துள்ளது என்று தெரி



விக்கப்படுகிறது.
இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் 58 ஆவது படைப்பிரிவுக்குத் தலைமை தாங்கியவர் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா. இறுதிக் கட்டப் போரில் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலை

21 ஆம் பக்கம் பார்க்க

### இராமேஸ்வரம் மீனவர்கள் உணவு தவிர்ப்பு

இராமேஸ்வரம், டிசெ 19
தமிழகம், ராமேஸ்வரம் பகுதியில் உள்ள மீனவர்கள் சாகும் வரையான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.
இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 200க்கும் அதிகமான தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியே அவர்கள் இந்தப் போராட்

21 ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்க் கூட்டமைப்பை தடைசெய்ய வேண்டும்

## *நாடாளுமன்றில் பிரதியமைச்சர் வலியுறுத்து*

கொழும்பு, டிசெம்பர் 19
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசு தடை செய்ய வேண்டும். வடக்கில் கூட்டமைப்பு ஆட்சியிலிருக்கும் வரை அங்கிருந்து இராணுவத்தை அகற்றவே கூடாது" என்று நாடாளுமன்றில் நேற்று வலியுறுத்தினார் பிரதியமைச்சர் சரத் வீரசேகர.

புலிகளை அழித்த கையோடு கூட்டமைப்பையும் தடை செய்யாதது தாம் விட்ட தவறு என்றும் முன்னாள் போராளிகளைப்போல் இவர்களையும் கைதுசெய்து புனர்வாழ்வு அளித்திருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
பிரபாகரனைத் 'தேசிய வீரன்' என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தச் சபையில் பேசு கின்றார். குறிப்பாக, ஹிட்லர் அழிக்கப்




பட்ட பின்னர் நாசி கட்சி தடை செய்யப்பட்டது. எகிப்தில் முபாரக்கின் கட்சியும் தடைசெய்யப்பட்டது. புலிகளை அழித்த கையோடு நாமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. போர் முடிவடைந்த பின்னர்

21 ஆம் பக்கம் பார்க்க

### மேல், தென் மாகாண சபைகள் இரு வாரங்களில் கலைக்கப்படும்

கொழும்பு, டிசெ. 19
மேல் மற்றும் தென் மாகாண சபைகள் இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் கலைக்கப்பட்டு விடும். முடிந்தால் ஐ.தே.க. தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிக் காட்டட்டும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுச் சபையில் சவால் விடுத்தார்.
தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்ட சவாலை விடுத்தார்.
"ஐ.தே.க. தலைமைத்துவ சபையை உருவாக்கினாலும் எமது அரசைத் தோல்வியடையச் செய்ய முடியாது. எமது அரசு ஒன்றும் செய்வதில்லை என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. 2009களில் இலங்கைக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளே வந்தனர். ஆனால், அந்தத் தொகை இன்று ஒரு மில்லியனாக அதிகரித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் ஹோட்டல்கள் எதுவும் இருந்ததில்லை. இன்று ஆயிரம் அறைகளைக் கொண்ட ஹோட்டல்கள் கட்டப்படுகின்றது" என்றார். (த-சி)



*தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் தொண்டர்கள் தொடர்ச்சியான கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு ஆதரவாக நேற்று மருத்துவர்கள் முதல் சிற்றூழியர்கள் வரை அனைவரும் போராட்டம் நடத்தினர். (த-4)* *(செய்தி 2 ஆம் பக்கத்தில்)*

## ஆளுநரின் அனுமதிக்கு அனுப்பப்படாத 'பட்ஜெட்'

யாழ்ப்பாணம், டிசெ. 19
வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்னமும் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
கைதடியிலுள்ள வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் கடந்த 10, 11, 12 ஆம் திகதிகளில் வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் இடம் பெற்றது. இதன் பின்னர் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.
இவ்வாறு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட வரவு - செலவுத் திட்டம் ஆளுநருக்கு அனுப்பப்பட்டு அவரின் அனுமதி பெறப்பட்டாலே, அங்கீகரிக்கப்பட்டதாக அமையும்.

21 ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்குக்கு மக்கள் அனைவரும் திரும்பிய பின்பே போரழிவு மதிப்பீடு

### *பிரதேச சபை ஏகமனதாகத் தீர்மானம்*

யாழ்ப்பாணம், டிசெ. 19
வலி.வடக்குக்கு மக்கள் மீளத் திரும்பிய பின்னரே போர்க்கால இழப்பீடு தொடர்பில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அது வரை மேற்படி நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறும் வலி.வடக்குப் பிரதேச சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அதனை முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளது.
வலி.வடக்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.
இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் வே.சண்முகநாதனால் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

21 ஆம் பக்கம் பார்க்க

## 15,000 ஏக்கர் சம்பூரில் சுவீகரிப்பு

கொழும்பு, டிசெ. 19
சம்பூரில் மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு 500 ஏக்கர் நிலப்பரப்பே தேவையாக உள்ள நிலையில், அங்கு சுமார் 15ஆயிரம் ஏக்கர் காணியை அரசு சுவீகரித்துள்ளது எனத் தமிழ்த் தேசியக்

21 ஆம் பக்கம் பார்க்க

## இடம்பெயர்ந்தோர் குறித்து முற்றிலும் தவறான தகவல்

### *சபையில் கூறினார் அமைச்சர் முரளிதரன்*

*யாழ்ப்பாணம், டிசெ. 19*
*யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்கள் மீளத்திரும்புதல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனினால்(கருணா) தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் அறிக்கையில் மீளத்திரும்புபவர்கள் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைக்கும், நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கும் இடையில் பெரிய வேறுபாடு இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

21 ஆம் பக்கம் பார்க்க

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 19

ஊரெழு வடக்கில் கசிப்பு உற்பத்தி செய்த இருவரை கைது செய்ததோடு 60 லீற்றர் கசிப்பையும் பொலிஸார் மீட்டனர். மேலும் மூவர் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இன்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் திடீர் பரிசோதனையில் ஈடுபட்ட பொலிஸார் இவர்களைக் கைது செய்தனர்.

வீட்டின் பின் பகுதியில் வைத்து இவர்கள் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

ரகசியத் தகவலின் படி அங்கு சென்ற உபபொலிஸ்பரிசோதகர் ரம்புக்கல, பொலிஸ் கான்ஸ்டபிள்களான மயூரன், சதுரங்க ஆகியோர் 60 லீற்றர் கசிப்பு மற்றும் அவற்றை உற்பத்திசெய்யும் உபகரணங்கள் என்பவற்றையும் கைப்பற்றினர்.

அத்துடன் 65 மற்றும் 36 வயதுகளையுடைய இருவர் அங்கு மறைந்திருந்த போது பொலிஸார் கைதுசெய்தனர். மேலும் மூன்று பேர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர் என்று பொலிஸார் கூறினர். (த-4)

# மருத்துவர்கள் முதல் சிற்றூழியர்கள் வரை தொண்டர்களின் போராட்டத்துக்கு ஆதரவு

### வைத்தியசாலை வளாகத்தில் ஒன்று திரண்டு போர்க் கொடி



> “ போர்க்காலச் சூழலிலிருந்து கடுமையாகப் பணி புரிந்தவர்கள் இந்தத் தொண்டர்கள் 'லிப்ற்' இயங்காத காலங்களில் தோளிலும் கையிலுமாக நோயாளர்களை மேல் மாடிகளுக்கு இரவு பகல் பாராமல் காவிச் சென்றவர்கள். எனவே சுகாதார அமைச்சு இவர்களின் விடயத்தில் மீளாய்வு செய்து அவர்களைப் பணியில் இணைப்பது சிறந்தது.

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த 7 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு வலியுறுத்தி அங்கு பணிபுரியும் மருத்துவர்கள் முதல் சிற்றூழியர்கள் வரை அனைவரும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிப் போராட்டத்தை ஆரம்பித்து இன்றுடன் ஒரு வார காலம் பூர்த்தியாகின்றது. கடந்த வியாழக்கிழமை பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் மறுநாள் வெள்ளிக்கிழமை தொடக்கம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரியும், அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் வைத்தியசாலைச் சிற்றூழியர்கள், வைத்தியசாலை நிறைவு காண் மருத்துவ தொழில் வல்லுநர்களின் ஒன்றியத்தினர் நேற்று காலை 9 மணி முதல் கவனவீர்ப்புப் பேராட்டத்தில் ஈடுபட்டனர். முற்பகல் 11 மணி முதல் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுடன் சுகாதாரச் சாரதிகள் சங்கத்தினரும், வைத்தியசாலை நிர்வாகப் பகுதியைச் சேர்ந்த ஒரு பகுதியினரும் தொண்டர்களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொண்டர்களின் போராட்டம் காரணமாக வைத்தியசாலையில் கடும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. நோயாளர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிப்பதற்கான வழி வகைகளைச் செய்வது உட்படப் பல பணிகளில் தாமதமும் தடங்கலும் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மருத்துவர்களில் ஒருவரும் மருத்துவர் சங்கத் தலைவருமான எஸ்.நிமலன் கருத்துத் தெரிவிக்கையில்,

போர்க்காலச் சூழலிலிருந்து கடுமையாகப் பணி புரிந்தவர்கள் இந்தத் தொண்டர்கள் 'லிப்ற்' இயங்காத காலங்களில்-தோளிலும் கையிலுமாக நோயாளர்களை மேல் மாடிகளுக்கு இரவு பகல் பாராமல் காவிச் சென்றவர்கள். எனவே சுகாதார அமைச்சு இவர்களின் விடயத்தில் மீளாய்வு செய்து அவர்களைப் பணியில் இணைப்பது சிறந்தது. இந்தப் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் பிற மாவட்டத்தைச் சேர்ந்தவர்களையும் உள்வாங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பணிக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் 3 வருடங்கள் என்றாலும் இந்த மாவட்டத்தில் இருந்திருக்க வேண்டும். பல தொண்டர்கள் 9 வருடங்களாக நியமனம் இன்றிப் பணிபுரிந்து வருகின்றார்கள். எனவே இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும் - என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த தாதியர் சங்கத் தலைவர் நற்குணராஜா, தொண்டர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு பிரயாணச் செலவுக்குக் கூட போதாது. எனவே அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் - என்றார்.

சிற்றூழியர் சங்கத் தலைவர் குணரட்ணம் றமேஸ் தெரிவிக்கையில், கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாகப் பணிபுரியும் இந்தத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்க அதிகாரிகள் முன்வர வேண்டும் - என்றார்.

நிறைவு காண் மருத்துவ வியல் தொழில் வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கையில், மேல் மாடிகளுக்கு நோயாளர்களைத் தூக்கிச் சென்றதனால் பல தொண்டர்கள் முள்ளந்தண்டு நோய் உட்பட பல நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர். கல்வித்தகைமையை காரணம் காட்டினாலும் அதனை விட மனிதாபிமானத்துடன் கடந்த காலச் சேவை அனுபவங்களைக் கருத்திற்கொண்டு தொண்டர்களுக்கு நியமனம் வழங்க வேண்டும் - என்றார். (த-4)

## இரு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் ஒருவர் காயம்

வவுனியா, டிசெ.19

வவுனியா இறம்பைக்குளம் வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

சம்பவத்தில் வவுனியா பிரதேச செயலகத்தில் பணிபுரிபவரான எஸ்.நவாஸ் (வயது 40) என்பவரே படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

வவுனியா நகரில் இருந்து இறம்பைக்குளம் தபால் பெட்டி சந்தியை நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டன.

இதன்போது தபால்பெட்டிசந்தியை நோக்கிவந்தவர் தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்டுள்ளார்.

எனினும் பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்து அந்த நபரையும் தடுத்து நிறுத்தியுள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்து விசாரணை நடத்தினர்.

படுகாயமடைந்தவர் ஏற்கனவே விபத்து ஒன்றில் சிக்கி அதற்காக சிகிச்சை பெற்ற நிலையில் வீடு திரும்பும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-421)



சங்கானை மாவடி ஞான வைரவர் கோயில் வருடாந்த திருவெம்பாவை நிகழ்வின் இறுதி நாளான நேற்று மாவடி இந்து இளைஞர் மன்றத்தினரால் அலங்கரிக்கப்பட்ட மாணிக்கவாசகர் படம் தாங்கிய ரத பவனி இடம்பெற்றது.

## ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஏல விற்பனை

யாழ்ப்பாணம்,டிசெ.19

ஊர்காவற்றுறை நீதிமன்றில் உள்ள பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத பொருள்கள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஏலம் விடப்படவுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் எஸ்.சிவராம் அறிவித்துள்ளார்.

ஏலம் விடப்படவுள்ள பொருள்களை இன்று முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகத்தில் பார்வையிட முடியும் என்று பதிவாளர் மேலும் தெரிவித்தார். (த-4)

# ஈழவாதிகளின் தேவைக்கேற்ப வடக்கு ஆளுநரை நீக்கக்கூடாது

### சந்திரசிறிக்கு ஆதரவாக விமலின் கட்சி குரல் கொடுப்பு

கொழும்பு, டிசெ.19

ஈழவாதிகள், ஈழத்துக்கு தூண்டுகோலாக இருப்பவர்களின் அழுத்தத்திற்கு அல்லது தேவைக்கு ஏற்ப வட மாகாண ஆளுநரை எந்தச் சந்தர்ப்பத்திலும் நீக்கக்கூடாது என்று அரசின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல்குழு உறுப்பினரும் பிரதி அமைச்சருமான வீரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான வடக்கு ஆளுநர் சந்திரசிறியை நீக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி வருகின்றது. மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி.) அதனையே கூறிவருகின்றது. இலங்கை அரசை வீழ்த்தும் நோக்கில் ஈழவாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதற்குத் தூண்டுகோலாகவுள்ள ஜே.வி.பியும் இன்று இவ்வாறு கூறி வருகின்றனர்.

இலங்கை எனும் நாட்டை பற்கள் அற்ற வாயாக மாற்றுவதே அவர்களின் நோக்கம். ஒவ்வொன்றாகக் கழட்டினால் வாய் வலுவற்றுப் போய்விடும். அப்படியாயின் பொக்கை வாய் தான் மிஞ்சும்.

இலங்கையில் கற்றறிந்த சிறந்த இராணுவத்தினர் உள்ளனர். அவர்களுக்குத் தகுந்த பதவி வழங்கி அதில் இருந்து அகற்றுவது தவறு. உலகிலேயே ஒழுக்கமான இராணுவம் இலங்கை இராணுவமாகும். சிவில் பணிகளிலும் இலங்கை இராணுவம் ஈடுபடுகின்றது. இவ்வாறான இராணுவத்தினரை இழிவுபடுத்த ஈழவாத சக்திகள் முயற்சிக்கின்றன - என்றார்.

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.19

நீர் அருந்துவதற்குச் சென்ற சிறுவன் கிணற்றுக்குள் தவறி விழுந்து உயிரிழந்தார். இந்தப் பரிதாபகரமான சம்பவம் நேற்று முன்தினம் வவுனியா, கனகராயன் குளம் பகுதியில் இடம்பெற்றது.

கனகராயன்குளம் பெரியகுளம் அரசினர் வித்தியாலயத்தில் தரம் 2 இல் கல்வி கற்கும் விஜயன் ஆதித்தியன் (வயது 6) என்ற சிறுவனே பொதுக் கிணறு ஒன்றுக்குள் தவறி விழுந்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் பொதுக் கிணறு ஒன்றில் தண்ணீர் பருகுவதற்காகச் சென்றவேளையே தவறி அதற்குள் விழுந்ததாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (த-4-400-422)

# தண்டிக்கப்பட்டவர் மீண்டும் கைதானார்

### திருட்டுக் குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம்,டிசெ.19

திருட்டுக் குற்றத்துக்காக நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர் மீண்டும் ஒரு இலட்சத்து 71 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டது. திருட்டுப் பொருள்களும் மீட்கப்பட்டன.

நாரந்தனை தெற்கில் உள்ள வீட்டிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. வீட்டில் யாரும் இல்லாதவேளை வீடு புகுந்த சந்தேக நபர் நகைகள் மற்றும் கைத்தொலைபேசி ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் குறித்த நபரை பொலிஸார் விசாரணைக்குட்படுத்திய போதே திருட்டுப்போன பொருள்களும் அவரிடமிருந்து மீட்கப்பட்டன.

அவரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஆர். எஸ்.மகேந்திரராஜா உத்தரவிட்டார்.

இந்தச் சந்தேக நபர்களுக்கு முன்னரும் திருட்டில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் 6 மாதச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டு அது 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## டெங்கு நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்த வருடம் தை மாதம் தொடக்கம் இதுவரை 78 பேர் டெங்கு நோய்க்குரிய சிகிச்சையைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். இதைவிட இறப்புக்களும் நிகழ்ந்துள்ளன என வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் தரவுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
தற்போது டெங்கு நோய் விழிப்புணர்வு தொடர்பாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது. அதேவேளை தினமும் டெங்கு நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.
வவுனியா பொது மருத்துவமனையில் மட்டுமே 78 பேர் டெங்கு நோய்க்கான சிகிச்சையைப் பெற்றதுடன் இரண்டு இறப்புக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.
இதனைவிட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறாமல் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களின் விவரங்களை அறிய முடியாதுள்ளது.
டெங்கு நோய் அபாயம் பல இடங்களில் காணப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாக வவுனியா மாவட்ட மருத்துவமனையின் தரவுகளின் படி அறிய முடிகின்றது.
எனவே காய்ச்சல் காணப்படுபவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவ மனைக்குச் சென்று இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (க-421)

## அபராதம் செலுத்தத் தவறியவர் சிறைக்கு

தென்மராட்சி, டிசெ.19
கசிப்பு வைத்திருந்த கொடிகாமம், எருவன்வாசி அபராதம் செலுத்தத் தவறியதால் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.
கொடிகாமம் பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறித்த நபர் ஏற்கனவே நீதிமன்றில் இது போன்ற வழக்குகளில் தண்டிக்கப்பட்டவர் என்று பொலிஸார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்த னர்.
எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதால் ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தா ததால் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

# வடக்கில் வாழ்வாதார மேம்பாட்டுக்கு கொள்கை ரீதியான தீர்மானம் தேவை

## *மாகாண முதலமைச்சருக்கு மனு கையளிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.19
வடமாகாணத்தில் வாழும் தமிழ் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுக்கப்படல் வேண்டும். சரியானதும் மிகவும் அவசியமானதுமான தீர்மானங்களை எடுப்பதால் வருடாந்தம் இலங்கையில் போதைப் பொருள் பாவனையால் இறக்கும் 40 ஆயிரம் பேரில் எமது பிரதேச மக்களை மீட்டெடுப்பதற்கான பிரகடனங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மனு ஒன்று ஹெல் தி லங்கா மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணியில் வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.
அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
சமூக வாழ்வியல் விருத்திக்கு தடையாக இருக்கும் காரணிகளில் மதுசாரம், சிகரெட் உட்பட போதைப் பொருள்களின் பாவனையால் ஏற்படும் சமூகப் பொருளாதாரப் பாதிப்புக்களைக் குறிப்பிடலாம். அந்த வகையில் மது சாரப் பாவனையால் இழைக்கப்படும் அநீதிகளும் அதிகமாகவே உள்ளன. அத்துடன் அடுத்த தலைமுறையினரும் பிழையான வழிகளைப் பின்பற்றுகின்றனர்.
மதுசாரம், சிகரெட் நிறுவனங்கள் பல உத்திகளைக் கையாண்டு எமது சமூகத்தில் அவற்றைப் பரப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை இல்லா தொழிக்கவும் வருடாந்தம் கிராமத்திலிருந்து மதுசாரம், சிகரெட் பாவனைக்காக பறித் துச் செல்லப்படும் சுமார் ஒரு கோடி ரூபாவை கிராமத்தின் விருத்திக்காகப் பயன்படுத்தவும் மதுசாரப் பாவனையால் ஏற்படும் ஏமாற்றங்களுக்கும் துயரங்களுக்கும் அநீதிகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் - என்றுள்ளது. (வ-14)

## மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணியின் மாநாடு




மதுசாரம் , சிகரெட் பாவனையைத் தடுக்குமாறு மனு கையளிப்பு

'ஹெல்திலங்கா' மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளை ஞர் அணியின் வருடாந்த மாநாடு நேற்று யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெற்றது.
மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணியின் யாழ். மாவட்டத் தலைவர் பிரேமராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், ச.சுகிர்தன், ஹெல்திலங்கா நிறுவனத்தைச் சேர்ந்த தெ.உதயரூபன், மகேந்திர ஜெயசிங்க உட்படப் பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தமிழ் இளை ஞர் அணியால் யாழ்.மாவட் டத்தில் மதுசாரம், சிகரெட் பாவனையைத் தடுக்கும் நோக்குடன் வடமாகாண முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரனிடம் மனு கையளிக்கப்பட் டது. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (வ-14)

## ‘சதொச’வால் மகிழ்ச்சியில் உ.கிழங்குச் செய்கையாளர்

### *உரிய விலை கொடுத்து வாங்க சம்மதம்*

வலி.வடக்கு, டிசெ.19
யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக் கிழங்கை 'சதொச' நிறுவனம் உரிய விலை கொடுத்து கொள்வனவு செய்வதாக அறிவித்த நிலையில் யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



யாழ்.மாவட்டத்தில் இந்த முறை உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்கள் சங்கம் அமைத்து நன்கு திட்டமிட்ட முறையில் உருளைக்கிழங்கு உற்பத்தியை மேற்கொள்கின்றனர்.
கடந்த காலங்களில் உருளைக்கிழங்கு உற்பத்தி யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற போதிலும், உரிய விலையைப் பெற முடியாத துர்ப்பாக்கிய நிலை அறுவடை காலங்களில் காணப்பட்டது.
குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு அறுவடை காலத்தில் வெளிநாடுகளில் இருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி செய்தல் மற்றும் தென்னிலங்கை உருளைக் கிழங்கு வருகை எனப் பல காரணங்களாலும் விவசாயிகள் சந்தையில் உரிய விலையைப் பெற முடியாத பாதகமான நிலை மைக்கு உள்ளாகி வந்தனர்.
இந்த முறை இத்தகைய பாதகமான நடவடிக்கைகளைத் தவிர்க்கும் வகையில் விவசாயத் திணைக்களம் மற்றும் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் சங்கமும் நடவடிக்கைகளை மேற்கொண்டதால் 'சதொச' நிறுவனம் உருளைக் கிழங்கை கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது இதனால் இம்முறை விவசாயிகள் உரிய விலையைப் பெற முடியும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (வ-86)

# யாழ். தமிழர் கலாசாரத்தை அறிய வரும் தென்னிலங்கையர்

## *ஹெல்தி லங்கா நிறுவன அமைப்பாளர் கூறுகிறார்*

யாழ்ப்பாணம், டிசெ.19
யாழ்ப்பாணத்து தமிழ் மக்களின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் தென்னிலங்கை மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றனர் என்று ஹெல்தி லங்கா நிறுவனத்தின் அமைப்பாளர் மகேந்திர ஜெயசிங்க தெரிவித்தார்.
மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணியின் வருடாந்த மாநாடு நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கையில்:
நாட்டின் அபிவிருத்தி அனைத்து மக்களையும் சென்றடைந்தால் மட்டுமே ஒட்டுமொத்த அபிவிருத்தியை பெற்றுக் கொள்ளமுடியும். சாதாரணமாக குடும்பத்தில் கூட இதே நிலைமைதான். தனிப்பட்ட நபருடைய அபிவிருத்தி பின்னடைவையே பெற்றுத் தரும்.
மதுபாவனை தொடர்பாக தென்னிலங்கை பகுதியில் பரந்து பட்ட அறிவு காணப்படுவதால் அதன் நன்மையை அனுபவித்து வருகின்றனர். இதே நிலைமை வடக்குக்கு வராமல் இல்லை.
மதுசாரம், புகையிலைக்கு எதிராக சட்டம் கொண்டு வரப்பட்டதன் விளைவாகப் பொது இடங்களில் அவை தவிர்க்கப்பட்டுள்ளன. எனினும் மது பாவனை தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு கொண்டு வரப்பட வேண்டிய தேவை உள்ளது.
தென்னிலங்கை மக்கள் யாழ்ப்பாணத்தை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். கலாசாரத்தை மதிக்கின்றனர். இதற்காகவே யாழ்ப்பாணத்துக்கு வருகை தர ஆசைப்படுகின்றனர்.
எனவே யாழ்ப்பாணக் கலாசாரத்தை பாதிக்காத வகையில் நாம் செயற்பட வேண்டும்- என்றார். (வ-14)

# போதனா மருத்துவமனை தொண்டருக்கு நியமனம் வழங்குக

## *அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் சுகாதார அமைச்சருக்கு மனு*

அம்பாறை, டிசெ.19
"அரச நிர்வாக சுற்றறிக்கைகளின் விதிமுறைகளுக்கு அமைவாக, யாழ்.போதனா வைத்தியசாலை தொண்டர் சேவையாளர்களுக்கு சுகாதாரப் பணியாளர் சேவையின் கீழ் நியமனம் வழங்கப்பட வேண்டும்".
இவ்வாறு, அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.
தொண்டர் சேவையாளர்களைப் புறக்கணித்து, புதியவர்களை வெற்றிடங்களுக்கு நிரப்பவென 26.10.2013 இல் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை இரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் சார்பில் தலைவர் எஸ்.லோகநாதன், பொதுச் செயலாளர் எம்.எம். ஏ.வகாப் ஆகியோர் இணைந்து ஒப்பமிட்டு குறித்த மனுவை அனுப்பி வைத்துள்ளனர்.
அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
'யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நீண்ட காலமாகத் தொண்டர் சேவையாளர்களாகப் பணியாற்றி வருவோரின் சாத்வீக கவனவீர்ப்புப் போராட்டம் தொடர்பில் எமது தொழிற்சங்கமும் கவனம் செலுத்தியுள்ளது.
26.10.2013 இல் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் பணியாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கான செயற்பாடுகளுக்கு ஆட்சேபம் தெரிவித்தும்.இந்த நடவடிக்கையால் சுமார் ஐந்து வருடங்களுக்கு மேல் தொண்டர் பணியாளர்களாகக் கடமையாற்றி வருவோர் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்பதைச் சுட்டிக் காட்டியுமே குறித்த சாத்வீகப் போராட்டம் நடைபெறுகின்றது.
யாழ்.போதனா வைத்திய சாலையில் நிலவிய பணியாளர்களின் தேவை கருதி முறையான செயற்பாட்டின் அடிப்படையில் குறித்த பணியாளர்கள் தொண்டர் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு சுற்றறிக்கைகளின் பிரகாரம் பயிற்சிப் பணியாளர்களுக்குரிய வாழ்க்கைப்படி அலவன்ஸ் வழங்கப்பட்டு வந்துள்ளது.
தாபன விதிக்கோவை மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கைகளின் விதிமுறைகளுக்கு அமைவாக இந்தத் தொண்டர் ஊழியர்களை சுகாதாரப் பணியாளர் சேவைக்குள் உள்வாங்கி அமய, சமயாசமய, ஒப்பந்த சூகையினடிப்படையில் முதலில் நியமித்து நிரந்தர நியமனம் வழங்குவதே பொருத்தமான செயற்பாடாக அமையும்.
அதை விட்டு இதற்கு முற்றிலும் முரணாகப் புதியவர்களைக் கொண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமையை எமது தொழிற் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.
அத்துடன் இந்தச் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோருகின்றோம் - என்றுள்ளது. வ-30)

# இரணைமடு - யாழ்ப்பாணம் குடிதண்ணீர் திட்டத்துக்கு எதிர்ப்பு


## *கிளிநொச்சி விவசாயிகள் சம்மேளனத் தலைவர்*

கிளிநொச்சி, டிசெ.19
இரணைமடு- யாழ்ப்பாணம் குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தை முழுமையாக எதிர்ப்பதாக கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனத் தலைவர் செ.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

இரணைமடு- யாழ்ப்பாணம் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் தொடர்பாக பல்வேறு கருத்து மோதல்கள், இடம்பெற்று வரும் நிலையில் நேற்றையதினம் முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனம், இரணைமடுக் குளத்தின் கீழான உபதிட்டக் குழுக்கள் என்பன ஏற்பாடுசெய்த பத்திரிகை யாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு சம்மேளனத் தலைவர் கருத்து வெளியிடு கையில்:

கிளிநொச்சிமாவட்டத்தைச்சேர்ந்த 21ஆயிரம் விவசாயக் குடும்பங்கள், இரணைமடுக் குளத்தை நம்பியே வாழ்கின்றனர். இங்கு 21ஆயிரம்ஏக்கருக்குஅதிகமான நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் இரணைமடு- யாழ்ப்பாணம் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் எதிர்காலத்தில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தும். எனவே இதனைத் தாம் முழுமையாக எதிர்ப்பதாகத் தெரிவித்தார்.

மேலும்இந்தக்கூட்டத்தில்ஊடகங்களுக்கான அறிக்கையொன் றும் வெளியிடப்பட்டது. (க-6-426)



# கழிவகற்றும் வாகனங்களால் போக்குவரத்து நெருக்கடி

யாழ்ப்பாணம், டிசெ. 19
கல்லுண்டாய் வெளியூடாகச் செல்லும் யாழ். மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்களின் நேரத்தை மாற்றுமாறு காரைநகர் பிரதேச சபையின் உப தலைவர் ச.துர்க்கேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

யாழ். நகருக்குரிய பிரதான போக்குவரத்து மார்க்கமாக கல்லுண்டாய் வீதியுள்ளது. இவ் வீதியூடாக அரச ஊழியர் முதல் பாடசாலை மாணவர்கள் வரை தினமும் காலை 7 மணி முதல் 9 மணி வரை பெருமளவில் பயணம் செய்கின்றனர். இந்த நேரத்தில் இந்த வீதி சன நெரிசல் மிகுந்ததாகக் காணப்படும்

மாநகர சபைக்குச் சொந்தமான கழிவகற்றும் வாகனங்கள் இந்த நேரத்தில் இவ் வீதியூடாக வேகமாகப் பயணம் செய்வதால் பொதுமக்களுக்கு இடையூறாக அமைவதுடன் அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

எனவே யாழ். மாநகர சபை இவ் விடயம் தொடர்பாக கவனம் எடுத்து இவ் வீதியில் பொது மக்கள் நடமாட்டம் குறைந்த நேரங்களில் கழிவகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (த-17-400)

# சாகும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டம்

## *நாகை மீனவர்கள் தீர்மானம்*

சென்னை, டிசெ.19
இலங்கைச் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி, நாகை மீனவர்கள், சாகும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள் ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நாகை தாலுகா, அக்கரைப் பேட்டை கிராமத்தில், மீனவர்களின் கூட்டம், நேற்றுமுன்தினம் நடைபெற்றதாகவும் இந்தக் கூட்டத்தில், இலங்கைக் கடற் படையால் கைது செய்யப்பட்டுள்ள, தமிழக மீனவர்கள் மற்றும் விசைப்படகுகளை விடுவிக்க வலியுறுத்தி நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் நாகை தலைமைதபால் அலுவலகம் முன் சாகும்வரை உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபடுவது, மீனவர்கள் விடுதலையாகும் வரை உண்ணாவிரதத்தை கைவிடுவதில்லை என்பவை உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
12 . 06 . 1936



இறைவன் அடியில்
19 . 11 . 2013

### அமரர் அன்னலக்சுமி சுப்பிரமணியம்

திங்களொன்று ஓடிச்சென்றதுவோ – எம்
அன்புத் தெய்வம் எமை விட்டகன்று
இணையில்லா நல்வாழ்வை எமக்களித்து
நீங்கள் இறையடி சேர்ந்தீரே
கண்களில் கண்ணீர் வழிந்தோட – சென்ற
திசைதனைப் பார்த்து ஏங்கி நிற்கின்றோம்
மீண்டும் எப்போது எமை நாடி வருவீர் என்று....

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று (19.12.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

32/1, ஆசிரியர் வீதி,
சாவகச்சேரி

குடும்பத்தினர்.

# கல்நாட்டிய குளத்தில் புதியகலையரங்கு

கல்நாட்டியகுளம் பகுதியில் புதிய கலையரங்கு ஒன்று அமைக்கப் படவுள்ளது.

நீண்ட காலமாக கல்நாட்டிய குளம் முத்தமிழ் கலாமன்றத் துக்கு அந்தப் பகுதியில் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஒரு கலையரங்கு இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் கலை ஆர்வம் உள்ளவர்கள் பெருமளவில் இருந்த போதிலும் அவர்கள் தமது திறமைகளை வெளிப் படுத்த முடியாத நிலையில் உள்ளனர். இதற்கு இங்கு ஒரு அரங்கு இல்லாமையே முக்கிய காரணமாகும்.

தற்போது இங்கு 11 லட்சம் ரூபா செலவில் அரங்கு ஒன்றை அமைக்கும் வேலைத் திட்டம் இடம்பெற்று வருகின்றன. இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் அண்மையில் நட்டு வைத் தமை குறிப்பிடத்தக்கது.

(க-421)

## தவறிவிட்டது

அடிவேஸ் ஸன்டைது NIC, CAMPAS IC, லைசன்ஸ், ஆகிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் திரு நெல்வேலி தபாற்பெட்டி ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும் (சன்மானம் வழங்கப்படும்) T.P:- 077 3812942

## மரண அறிவித்தல்

### திருமதி ஈஸ்வரி சந்திரா

நீர்வேலியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பெருமாள் கேயிலடியை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி சந்திரா நேற்று (18.12.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணிய ஐயர் சந் திராவின் அன்பு மனை வியும், நீர்வேலி தியாகராஜக்குருக் கள்-ராஜலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், பாலசுப்பிரமணிய ஐயர்- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காமாட்சி அம்மா - கருணாகரேஸ்வரக் குருக்கள், இராசாத்தி அம்மா- பஞ்சாட்சரசர்மா, நடன சபாபதிசர்மா, பாலசுப்பிர மணியக்குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாம்பாள், ஸ்ரீபதிக் குருக்கள், நீலாம்பாள், கிரிசாம்பாள், ரகுபதிசர்மா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்த மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சந்திரா ஸ்ரீபதிக்குருக்கள் (மகன்)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா பாலசிங்கம்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பாலசிங்கம் நேற்று (18.12.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை, செல்லத்துரை, சரவணமுத்து, வேலம்பிராசா, வைரமுத்து மற்றும் அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரபாலா (கணக்காளர், பிரதேச செயலகம், நெடுங்கேணி), யோகானந்தம் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வடமாகாணம்), உதயராணி (பெண்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு மாமனும், மயூரிகா, சங்கீர்த்தனன் ஆகியோரின் பாசமிகு பேரனும், கதிரிப்பிள்ளை, சபாரத்தினத்தின் (சட்டத்தரணி-கொழும்பு) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2013) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல் லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 6218144, ஆவரங்கால்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி சிங்கராசா



பலாலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி சிங்கராசா நேற்று (18.12.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிங்கராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னையா -செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், கிருஷ்ணர்-காலஞ்சென்ற சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், சிவரூபன் (லண்டன்), காலஞ்சென்ற செல்வரூபன், சசிரேகா ஆகியோரின் பாசமிகு தாயும், கஜிதா (லண்டன்), றேச்சல் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், கருணாகரன், மனோகரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சுதாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சசிகலா, நற்குணநாயகி, மனோகௌரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், லெனன், லியம், நவீனா, மதுசனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பத்தமேனியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (19.12.2013) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீர்த்தங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல் லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தமேனி , அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## போர்க் கால கணக்கெடுப்பில் சிங்களக் குடும்பங்களும்

*நாவற்குழியில் அத்துமீறி குடியேறியவர்கள்*

*யாழ்ப்பாணம், டிசெ. 19*
*நாவற்குழியில் அத்துமீறிக் குடியமர்ந்துள்ள சிங்களக் குடும்பங்களும், தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் போர்க்கால இழப்பீடு தொடர்பான கணக்கெடுப்புகளில் பதிவு செய்துள்ளனர். தமது வெதுப்பகங்கள் (பேக்கரிகள்) அழிக்கப்பட்டதாக அவர்கள் கணக்கெடுப்புகளின் போது தெரிவித்துள்ளனர்.*
*நாடளாவிய ரீதியில் போர்க்கால இழப்பீடுகள் தொடர்பில் கணக்கெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பகுதிக்குமுரிய கிராம சேவையாளர்களால் அவை முன்னெடுக்கப்படுகின்றன.*
*நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியமர்ந்துள்ள சிங்கள குடும்பங்களும் இதன் போது கணக்கெடுப்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட சிங்கள குடும்பங்களுக்கு காணிகள் பங்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், பன்னிரண்டு குடும்பங்களே கணக்கெடுப்புக்குத் தகவல்களை வழங்கியுள்ளன.*
*1982 ஆம் ஆண்டு யாழ். நகரிலிருந்த தமது வெதுப்பகங்கள் அழிக்கப்பட்டதாகவும் அத்துடன் வாகனங்கள் சூறையாடப்பட்டதாகவும் அவர்கள் கணக்கெடுப்பின் போது தகவல் வழங்கியுள்ளனர். (வ-5)*

## வாசகர்கள் பயன்படுத்தும் கணினிகளுக்கு இணைய வசதி

*சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட நூலகங்களில்*



தென்மராட்சி, டிசெ.19
சாவகச்சேரி நகர சபையின் மீசாலை, நுணாவில், சாவகச்சேரி ஆகிய பொது நூலகங்களில் வாசகர்களால் பயன்படுத்தப்படும் கணினிகளுக்கு இணையத்தள வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.
நேற்று முன்தினம் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் த.சுதர்சனால் கொண்டுவரப்பட்ட தனிநபர் பிரேரணை தொடர்பாக ஆராய்ந்து மூன்று நூலகங்களுக்கும் சபை நிதியில் இணைய வசதி ஏற்படுத்திக் கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் நூலக சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் தொலைபேசி இணைப்பு வசதிகளும்வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## வன்புணர்வு முயற்சி; குற்றவாளிக்குச் சிறை

யாழ்ப்பாணம்,டிசெ.19
போலித் துப்பாக்கியைக் காட்டி சிறுமியைப் பயமுறுத்தி வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.
நெடுந்தீவில் சில வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்தது. நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.
நெடுந்தீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராகவே பொலிஸார் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.
சிறுமிக்கு போலித் துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தியமை மற்றும் போலித் துப்பாக்கியைக் காட்டி வன்புணர்வுக்கு உட்படுத்தமுயன்றமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்கள் சந்தேகநபர் மீது சுமத்தப்பட்டிருந்தன.
இது தொடர்பில் விசாரணை இடம்பெற்று வந்தது. அதன் போதே கந்தசாமி கேதீஸ்வரன் என்ற நபர் குற்றவாளியாக மன்றினால் இனங் காணப்பட்டார்.
அதன்படி முதலாவது குற்றத்துக்காக ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அதனைச் செலுத்தத் தவறின் ஒரு மாத காலச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற குற்றத்துக்காக ஒரு வருடச் சிறைத் தண்டனையைக் கட்டாயம் அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டதோடு 6 மாதச் சிறைத் தண்டனை விதித்து அதனை 5 வருடங்களுக்கு ஒத்தி வைத்தது நீதிமன்று. குற்றவாளி மீண்டும் அதே குற்றத்தைப் புரிவாராயின் 6 மாத கால சிறைத் தண்டனையையும் அவர் அனுபவிக்க வேண்டிவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கிளாலிக்கு வீசுமா வசந்தத்தின் ஒளி?

*அரசின் ஆசை வார்த்தையை நம்பி மீள்குடியமர்ந்தோர் ஏமாற்றம்*

வலி.தென்மேற்கு, டிசெ.19
வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தரப்படும் என்ற அரசின் ஆசை வார்த்தையை நம்பிக் கிளாலிப் பகுதியில் குடியமர்ந்தவர்கள் இரு வருடங்களுக்கு மேலாகியும் மின்சார வசதி கிடைக்காமல் ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர். இந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங் கள் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு விரைவாக தமக்கு மின்சார வசதியை வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளன.

> “ ” *மீள்குடியேறிய குடும்பங்கள் தமது பிள்ளைகளின் எதிர் காலத்தையும் கல்வி வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு விரைவாக மின்சார வசதியை ஏற்படுத்தித் தரக் கோருகின்றன.*

போர் காரணமாக கிளாலிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்கள் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் சகல அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தமைக்கமைய 19 வருடங்களுக்குப் பின் 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சொந்த இடங்களில் மீள்குடியேறினர்.
வாழ்விடங்கள் அனைத்தும் அழிக்கப்பட்ட நிலையில் வெறுங்கையுடன் மீள்குடியேறிய 250 குடும்பங்களில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 172 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. 'சோ ஆ' நிறுவனம் 20 குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுத்துள் ளது.
இந்த நிலையில் அந்தப் பகுதிக்கு மின்சார வசதி இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படாததால் மண்ணெண்ணெய் விளக்கின் உதவியுடன் இருள் சூழ்ந்த நிலையிலேயே இவர்கள் வாழ்கின்றனர். எனவே தமது பிள்ளைகளின் எதிர்காலத் தையும் கல்வி வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு விரைவாக மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை இந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (வ-115)

## மேடைப் பேச்சாளர்களால் சிதைக்கப்பட்ட கலைவிழா

*கல்விச் சமூகம் கவலை*

*தென்மராட்சி, டிசெ. 19*
*தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் சமூகத்தால் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட மார்கழித் திங்கள் முழுநிலா கலைவிழா நிகழ்வுகள் மேடைப் பேச்சாளர்களால் சிதைக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்களாலும் கல்விச் சமூகத்தினராலும் கவலை தெரிவிக்கப்பட்டது.*
*அனைவரையும் கவரக் கூடிய வகையில் அமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி பவனிகள், வீதிகளில் நடத்தப்பட்ட மயில் ஆட்டம், கரகாட்டம், கோலாட்டம், காவடி ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம் போன்றவையும் விழா மேடையில் மாணவர்கள், ஆசிரியர்களால் நடத்தப்பட்ட ஒவ்வொரு நிகழ்வுகளும் மக்களைக் கவர்ந்திருந்தன.*
*எனினும் மேடைப் பேச்சாளர்களின் உரைகளே ஊடகங்களில் மாறி மாறி வெளிவருவதால் இந்த விழாவை நடத்தியவர்கள் கலந்துகொண்ட மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், விழா மண்டபத்தில் நிறைந்திருந்த மக்கள் ஆகியோர் விசனம் வெளியிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.*
*மக்களால் கைவிடப்பட்ட பாரம்பரிய கலை நிகழ்வுகளை மக்களுக்கு மீண்டும் நினைவு படுத்தும் வகையில் நீண்ட காலத்துக்குப் பின்னர் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் தென்மராட்சி கல்வி வலயத்தால் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.*
*எனினும் ஊடகங்கள் அவை தொடர்பில் செய்தி வெளியிடுவதைத் தவிர்த்து மேடைப் பேச்சாளர்களின் உரைக்கே முக்கியம் கொடுத்து செய்திகள் வெளியிடுகின்றன. இது அனைவரின் மனங்களையும் புண்படுத்துவதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.*
*(வ-9)*


## கழிவு நீர் தேங்கிய நிலையில் கால்வாய்



கொழும்புத்துறை, டிசெ.19
யாழ்.முனியப்பர் வீதியில் புல்லுக்குளத்துக்கு அருகில் உள்ள கழிவு நீர்க் கால்வாயில் கழிவு நீர் தொடர்ச்சியாகத் தேங்கி நின்று சுகாதாரச் சீர்கேட்டையும் மக்களுக்கு அசௌகரியங்களையும் ஏற்படுத்துவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.
புல்லுக்குளத்தில் வந்து சேரும் நகரக் கழிவு நீரை குளத்தில் கலக்கவிடாது கடலுக்குக் கொண்டு செல்லும் நோக்குடன் அமைக்கப்பட்ட நிலக் கீழ் கழிவு நீர் அகற்றும் குழாய் உயரமாக அமைந்திருப்பதும் அதன் உட்பகுதியில் ஏற்பட்ட தடை காரணமாகவுமே நீர் தேங்கி நிற்கின்றது.
அத்துடன் குழாய்கள் பொருத்தும்போது தோண்டப்பட்ட பெரிய குழி நிரப்பப்படாமையால் அங்கு பெருமளவு கழிவு நீர் தேங்கி நிற்கிறது. இவ்வாறு தேங்கி நிற்கும் கழிவு நீரில் இருந்து நுளம்புப் பெருக்கம் ஏற்படுவதுடன் துர்நாற்றம் வீசி மக்களுக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்துகிறது.
தொடர்ச்சியாக டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுவரும் நிலையில் பொதுமக்கள் நடமாட்டம் மற்றும் வர்த்தக நிலையங்கள் நிறைந்த நகரப் பகுதியில் இவ்வாறு டெங்கு நுளம்பு உற்பத்திக்கு சாதகமான நிலை காணப்படுவது பொது மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக அமையும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.
எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடி நடவடிக்கை எடுத்து அவற்றைநிவர்த்திசெய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)

## வலி.வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பெருமளவில் பாதீனிய ஆக்கிரமிப்பு

அளவெட்டி, டிசெ.19
வலி.வடக்கு பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளான தெல்லிப்பழை, கட்டுவன், கொல்லங்கலட்டி, அம்பனை, மாவைகலட்டி, குரும்பசிட்டி, மாவிட்டபுரம், தந்தை செல்வாபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் பாவனையற்ற தரிசு நிலங்களில் பெருமளவில் பாதீனியச் செடிகள் காணப்படுகின்றன. இந்தச் செடிகளுக்கு அண்மித்ததாக விவசாய விளை பயிர்கள் செய்கை பண்ணப்படுகின்றன. பயிர்ச் செய்கையாளர்கள் கூட இதனை அழிப்பதாக இல்லை.
"தெல்லிப்பழை சந்தியிலிருந்து கட்டுவன் வீதியோரம் இருமருங்கும் நன்கு செழித்தும் பூத்தும் பாதீனியச் செடிகள் காணப்படுகின்றன. தற்போது வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் பணிப்பின் பேரில் அவற்றை ஒரு சில பிரதேசங்களில் அழிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று



வருவது வரவேற்கத்தக்க நிலையில் எமது பிரதேசத்தில் இன்னமும் எந்த வித நடவ டிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.
இந்த நிலையில் எமது பிரதேசத்தில் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் அரச அலுவலகங்கள் விரைவாக இதனை அழிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட முன்வர வேண்டும்" என்று அந்தப் பகுதி விவசாய சம்மேளனத்தின் உறுப்பினர் ஒருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ-36)

## மக்கள் பணி தொடரும்: சோனியா தெரிவிப்பு



புதுடில்லி, டிசெ.19

சட்டசபைத் தேர்தல் முடிவுகள் அதிருப்தி அளிக்கின்றன. ஆனால் மக்களுக்கான எமது பணிகள் தொடரும் என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி.

புதுடில்லியில் நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

"சட்டசபைத் தேர்தல் முடிவுகள் எமக்குப் பெரும் அதிருப்தியை அளித்துள்ளன. ஆனால் மக்கள் அளித்த தீர்ப்பை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஏற்பட்டுள்ள தோல்வியை மனதில் இருத்தி இன்னமும் சிறப்பான பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். காங்கிரஸ் கட்சியின் மக்கள் பணி தொடரும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மோடியின் கனவு நிறைவேறாது

## ஆருடம் கூறுகின்றார் லாலு



பாட்னா, டிசெ.19

பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி ஒரு போதும் இந்தியாவின் பிரதமராக முடியாது என்று தெரிவித்துள்ளார் ராஷ்ட்ரிய ஜனதாதளக் கட்சியின் தலைவர் லாலு பிரசாத் யாதவ்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

"நரேந்திர மோடி இந்தியாவின் பிரதமராக வருவதை ஒரு போதும் நான் அனுமதிக்கப் போவதில்லை. மக்களிடம் பிரிவினையை ஏற்படுத்தி அதன் மூலம் மோடி பிரதமர் பதவியைக் கைப்பற்ற முயற்சி செய்கின்றார். நரேந்திர மோடி நினைப்பது போன்று அவரது பிரதமர் கனவு ஒன்றும் இலகுவானதல்ல" என்று தெரிவித்துள்ளார்.

நடைபெற்றுமுடிந்த சட்ட சபைத் தேர்தல்கள் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஆம் ஆத்மி கட்சி பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி அரசியலில் நுழைந்து விட்டது. ஆம் ஆத்மியின் உண்மையான முகத்தை மக்கள் விரைவில் புரிந்து கொள்வர். தற்போது நான் அரசியலுக்குள் மீண்டும் நுழைந்துள்ளேன். எனக்கு அங்கு பெரும் கடமைகள் காத்திருக்கின்றன. நாடாளுமன் றத் தேர்தலில் போட்டியிடும் தகுதி எனக்கு உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

கால்நடைத் தீவனம் கொள்வனவு தொடர்பான ஊழல் வழக்கில் குற்றம் நிரூபிக்கப் பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட லாலு, அதை எதிர்த்து மேன்முறையீடு செய்ததை அடுத்துத் தற்போது பிணையில் வெளிவந்துள்ளார். (ற)

# மக்களின் கருத்தை அறிந்தே டில்லியில் ஆட்சியமைப்போம்

## ஆம் ஆத்மி கட்சி அறிவிப்பு



புதுடில்லி, டிசெ.19

புதுடில்லியில் ஆட்சி அமைப்பது குறித்து மக்கள் கருத்தைக் கேட்டு முடிவெடுக்கத் தீர்மானித்துள்ளது ஆம் ஆத்மி கட்சி.

புதுடில்லி சட்ட சபைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு 31 இடங்களும், ஆம் ஆத்மி கட்சிக்கு 28 இடங்களும், காங்கிரஸ் கட்சிக்கு 8 இடங்களும் கிடைத்தன. ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை எந்தக் கட்சிக்கும் கிடைக்கவில்லை. அதனால் பா.ஜ.க. ஆட்சி அமைக்க மாட்டோம் என்று தெரிவித்துவிட்டது.

இந்நிலையில் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு தரும் கட்சி மக்கள் நலன் தொடர்புடைய 18 முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒத்துழைப்புத் தருவதாக உறுதியளித்தால் மட்டுமே, ஆட்சி அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று ஆம் ஆத்மி கட்சி அமைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்திருந்தார்.

அந்தப் பிரச்சினைகள் தொடர்பாக பா.ஜ.க. எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்காத நிலையில், அவை குறித்த தமது நிலைப்பாட்டை ஆம் ஆத்மி கட்சிக்கு காங்கிரஸ் தெளிவுபடுத்தியிருந்தது.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால்.

"காங்கிரஸ் கட்சியின் பதிலைப் பொதுமக்களிடம் தெரிவிப்போம். அக்கட்சியுடன் சேர்ந்து ஆட்சி அமைக்கலாமா? என்பது குறித்து புதுடில்லி வாழ் மக்களிடம் கருத்துக் கேட்கத் திட்டமிட்டுள்ளோம். டிசெம்பர் 17 ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை மக்களின் கருத்துகளை கேட்க இருக்கிறோம்.

மக்கள் ஆம் ஆத்மி கட்சிக்குத் தொலைபேசி, பேஸ்புக், டுவிற்றர் போன்ற சமூக வலைதளங்கள், மின்னஞ்சல், குறுஞ்செய்தி, கடிதங்கள் போன்றவற்றின் மூலம் கருத்துகளைத் தெரிவிக்கலாம். அதற்காக 25 லட்சம் கடித நகல்களை பொது மக்களிடம் விநியோகிக்கவுள்ளோம். அவர்களது கருத்துக்களைக் கேட்டு ஆராய்ந்த பின்னர் எதிர்வரும் 23ஆம் திகதி புதுடில்லி ஆளுநரைச் சந்தித்து ஆம் ஆத்மி கட்சியின் முடிவைத் தெரிவிப்போம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## அமெ. கப்பல் விவகாரம்: பிணை வழங்க நீதிமன்றம் மறுப்பு

மதுரை, டிசெ.19

சட்டத்துக்குப் புறம்பான வகையில் இந்தியக் கடற்பரப்பில் தரித்து நின்றது என்று தெரிவித்து தூத்துக்குடியில் இந்தியக் கடற்படையால் கைப்பற்றப்பட்ட அமெரிக்க கப்பலின் ஊழியர்கள் 35 பேரின் பிணை மனுக்களை மதுரை உயர் நீதிமன்றக் கிளை தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி இந்தியக் கடற்படையால் கைப்பற்றப்பட்ட 'சீமேன் கார்ட்' என்ற அந்தக் கப்பலில் ஆயுதங்கள் இருந்ததோடு, அத்துமீறி இந்திய எல்லைக்குள் நுழைந்தது என்றும் குற்றஞ் சாட்டப்பட்டது. அதையடுத்து அந்தக் கப்பலில் இருந்த 35 பேர் கைது செய்யப்பட்டு இந்தியச் சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

தற்போது புழல் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அவர்கள் தாக்கல் செய்திருந்த பிணை மனு தொடர்பான விசாரணைகள் நேற்று நடைபெற்றன. விசாரணைகளின் பின்னர் அவர்களின் பிணை மனுக்களைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது நீதிமன்றம். (ற)

# இந்தியா - அமெ. உறவில் விரிசல்

## இந்தியத் தூதரக அதிகாரி கைதானதால் சிக்கல்

புதுடில்லி, டிசெ.19

அமெரிக்காவில் உள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரி தேவயானி கோப்ரகடே பொது இடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு, இழிவாக நடத்தப்பட்டமைக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள இந்திய மத்திய அரசு, அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

பணிப்பெண்ணுக்கு உரிய ஊதியம் வழங்காதமை மற்றும் பணிப்பெண்ணுக்கு முறைகேடாக விசா பெற்றுக் கொடுத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் நியூயோர்க் நகரில் இந்திய துணைத் தூதர் தேவயானி கோப்ரகடே கடந்த வார இறுதியில் கைது செய்யப்பட்டார். பெண் அதிகாரியான அவர் கைவிலங்கிட்டுக் கைது செய்யப்பட்டமை இந்தியாவில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் அமெரிக்காவின் செயலுக்குப் பதிலடியாக இந்திய மத்திய அரசு நேற்று முன்தினம் முதல் பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் அனைவரும் தங்களிடம் உள்ள அடையாள அட்டைகளை உடனடியாகத் திருப்பி வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்களின் விமான நிலைய அனுமதிச்சீட்டுகளைத் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தூதரகங்களில் பணியாற்றும் இந்திய ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் போன்ற முக்கிய தகவல்களையும் உடன் வழங்குமாறு மத்திய அரசு கோரியுள்ளது.

இந்த நடவடிக்கைகளைத் தவிர, மதுபான வகைகள் உள்பட பல்வேறு பொருள்களை இறக்குமதி செய்து கொள்வதற்கு அமெரிக்கத் தூதரகத்துக்கு வழங்கப்பட்ட அனுமதியையும் இரத்துச் செய்துள்ளது. அதனால் இரு நாட்டு உறவுகளிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. (ற)

# இந்தியாவின் ஏழை முதலமைச்சர்

புதுடில்லி, டிசெ.19

இந்திய முதலமைச்சர்களில் மிகவும் ஏழ்மையானவராக விளங்குகின்றார் திரிபுரா மாநில முதலமைச்சர் மானிக் சர்க்கார்.

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் மானிக். அதைத் தொடர்ந்து நான்காவது முறையாகவும் அவர் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தேர்தலில் வேட்பு மனுத் தாக்கல் செய்தபோது அவர் தனது சொத்து விவரங்களை தேர்தல் ஆணையத்துக்கு வழங்கியிருந்தார். அப்போது அவரின் கையிருப்பு ரூபா ஆயிரத்து எண்பது மட்டுமே. வங்கிக் கணக்கில் மட்டும் ரூபா 9 ஆயிரத்து 720 இருந்தது. அவற்றை விட அவரது தாய்க்குச் சொந்தமான வீடு மற்றும் அரச பணியாளராக அவரது மனைவி ஓய்வு பெற்ற போது கிடைத்த பணம் மற் றும் 20 கிராம் தங்கம் ஆகிய னவே இருந்தன.

அவரது அசையா சொத்து மற்றும் பண இருப்பு மொத்தம் 24,52,395 ரூபாவாகும்.

வேட்புமனு தாக்கல் செய்த போது மானிக்கின் மாதச் சம்பளம் ரூபா 9,200. அதையும் அவர் அப்படியே கட்சியிடம் அளித்துவிடுவார். கட்சி அவருக்கு மாதாமாதம் ரூபா 5,000 அளித்து வருகின்றது.

இதுகுறித்து அவர் கூறுகையில், "என்னுடைய பொருளாதார நிலை குறித்த செய்திகளை ரசித்துப் படிக்கிறேன். என்னை ஏழை முதல்வர் என்று அழைப்பதில் பெருமை கொள்கிறேன். நான் எளிமையாக இருக்க கட்சி தான் காரணம்" என்று அடக்கமாகத் தெரிவிக்கின்றார். (ற)


# மரண அறிவித்தல்

## அருணாசலம் நமசிவாயம்

**(இளைப்பாறிய ஆசிரியர்- புல்லாங்குழல் வித்துவான்-கலாபூஷணம், வேணுகானமணி)**



யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் நமசிவாயம் 17-12-2013 செவ்வாய்க்கிழமை தெகிவளையில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நமசிவாயம் சிவமுத்து அவர்களின் அன்புக் கணவரும், சிவசுந்தரி சிங்கராஜா, கலாவதி தியாகராஜா (பிரான்ஸ்), வாசஸ்பதி (பிரான்ஸ்), தயாபரசுந்தரி மகேஷரட்ணம், தயாபரன் (கனடா), தர்மவதி சிவகுமார் (ஐக்கிய அமெரிக்கா), ஸ்ரீசத்திய நாராயணன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கமணி வேலாயுதபிள்ளை, கதிரமலைநாதன், கலைவாணி திருநாவுக்கரசு, காலஞ்சென்ற பொன்னம்பலநாதன் ஆகியோரின் மூத்த சகோதரரும், சிங்கராஜா, தியாகராஜா, கந்தராஜி, மகேஷரட்ணம் (சிங்கர்), சுதர்சினி, சிவகுமார், சாந்தி ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம், கனகரட்ணம், மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸாரங்கன், லலிதரூபன், அபிராமி, ராகவன், மனோசாந், நிருசாந், ஆரபி, பிரணவி, சுஜீவன், வைஷ்ணவி, மேதா, மயூரன், பிரார்த்தனா, சந்தரஸ் ஆகியோரின் பாசமிகு அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20-12-2013) வெள்ளிக்கிழமையிலிருந்து (21-12-2013) சனிக்கிழமை வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 8 மணி வரையிலும் 22-12-2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையிலும் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் கல்கிசை மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே.
011 271 4755, 011 273 3084,
077 603 8860, 077 507 6082, 077 314 7961

(தி/10247)
(2.6.3)

தகவல்:
**குடும்பத்தினர்**

## ஆப்கனில் நேட்டோ ஹெலி விபத்து: 6 பேர் சாவு

காபூல், டிசெ.19
ஆப்கனின் தெற்குப் பகுதியான ஷஜாவ் மாவட்டத்தில் நேற்று நேட்டோ படைகளுக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில் 6 நேட்டோ படையினர் உயிரிழந்துள்ளனர்.
விபத்து இடம்பெற்ற பகுதியில் தீவிரவாதிகளின் ஆதிக்கம் இல்லை என்பதால், ஹெலி மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்று ஆப்கனில் உள்ள நேட்டோ இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.
தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னரே விபத்துக்கான காரணம் தெரியவரும் என்றும் இராணுவத் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)

# முறியடிக்கப்பட்டது இராணுவப் புரட்சி

## தெற்கு சூடானில் 500 பேர் சாவு

ஜுபா, டிசெ.19
ஆபிரிக்க நாடான தெற்கு சூடானில் ஏற்பட்ட இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. அந்தச் சம்பவங்களில் சுமார் 500 பேர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென ஏற்பட்ட இராணுவப் புரட்சி இருநாள்களின் பின்னர் முறியடிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
முன்னாள் துணை ஜனாதிபதி ரியக் மாசாரின் ஆதரவு இராணுத்தினரே புரட்சியில் ஈடுபட்டனர் என்று தெரியவருகின்றது.
புரட்சி முறியடிக்கப்பட்டு தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகக் கூறும் அந்த நாட்டு அரசு, புரட்சியில் ஈடுபட்டனர்என்றுதெரிவித்துமுன்னாள் நிதி அமைச்சர் கோஸ்டி மானிப், முன்னாள் நீதித்துறை அமைச்சர் ஜோன் லக் ஜோக், முன்னாள் உள்துறை அமைச்சர் ஜியர் சங் அலங் உட்பட 10 முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.
புரட்சி ஏற்பட்டதை அடுத்து சுமார் 20 ஆயிரம் பேர் தலைநகர் ஜுபாவில் உள்ள ஐ.நா. வளாகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.
தலைநகர் ஜுபாவில் தற்போது ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

## பாதுகாப்பை பலப்படுத்தும் முயற்சிகளில் ஜப்பான்

டோக்கியோ, டிசெ.19
ஜப்பானின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நிதியை அதிகரிப்பதற்கான அனுமதியை ஜப்பான் அமைச்சரவை வழங்கியுள்ளது.
சீனாவின் அத்துமீறல் நடவடிக்கைகள் காரணமாகவே இந்த நிதி அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டு அமைச்சரவை விளக்கமளித்துள்ளது.
அதற்கமைய எதிர்வரும் ஐந்து வருட காலப்பகுதியினுள் அதி நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட இராணுவத்தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஜப்பான் தீர்மானித்துள்ளது.
அவை தவிர ஜப்பானில் நீரியல் பிரதேசத்தில் விசேட இராணுவப் பிரிவொன்றும் உருவாக்கப்படவுள்ளது. அந்த இராணுவப் பிரிவை ஆரம்பிப்பதன் நோக்கம் ஏனைய நாடுகளில் இருந்து தமக்குச் சொந்தமான தீவுகளைப் பாதுகாப்பதே என்று அந்த நாட்டு இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
கிழக்கு சீனா கடற்பிராந்தியத்திற்கு அப்பால் உள்ள ஜப்பானுக்குச்சொந்தமானது என்று கருதப்படும் பல தீவுகளை இரு தரப்புகளும் பரஸ்பரம் உரிமை கோரி வருகின்றன. அதனால் அந்தப் பிராந்தியங்களில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (ற)

## மீண்டும் ஜேர்மனியின் பிரதமரானார் மேர்கெல்

பெர்லின், டிசெ.19
ஜேர்மனியின் பிரதமராக 59 வயதான ஏஞ்சலா மேர்கெல் மீண்டும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
அவரது தலைமையிலான கென்சர்வேடிவ் கட்சி கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நான்காவது முறையாக தனிப்பெரும்பான்மை பெற்றிருந்தபோதும், ஆட்சி அமைப்பதற்குரிய அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை.
அதனைத் தொடர்ந்து கென்சர்வேடிவ் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட சோஷியல் டெமோக்ராட்ஸ்' கட்சியுடன் நடத்திய மிக நீண்ட பேச்சுக்களின் பின்னர் தற்போது ஒரு கூட்டணி அரசு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
அதையடுத்து நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பிரதமர் தெரிவுக்கான வாக்கெடுப்பில் மேர்கெலுக்கு ஆதரவாக 462 வாக்குகளும், எதிராக 150 வாக்குகளும் பதிவாகின. 9 பேர் நாடாளுமன்றத்துக்குச் சமூகமளிக்கவில்லை. அதையடுத்து அவர் மீண்டும் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.
ஜேர்மனியின் வரலாற்றில் பிரதமர் பதவிக்கு மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஏஞ்சலா மேர்கெல் ஜேர்மனியின் முதல் பெண் பிரதமராவார். (ற)

## சீனாவின் கடற்பரப்பில் அமெ. போர்க் கப்பல்

பீஜிங், டிசெ.19
தென் சீன கடற்பகுதியில் சீன கடற்படைக் கப்பல் ஒன்றும் அமெரிக்கப் போர்க் கப்பல் ஒன்றும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டன என்று தெரிவித்துள்ளது சீனா. அந்தப் பகுதியில் அமெரிக்கப் போர்க் கப்பல் பயணம்மேற்கொள்வது குறித்து தனது அதிருப்தியையும் அந்த நாடு வெளியிட்டுள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து அமெரிக்க இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அமெரிக்க ஏவுகணைகளை வழிநடத்துவதற்காக அந்தப் பகுதியில் அமெரிக்கப் போர்க்கப்பல் தரித்து நின்றது. சீனப் போர்க் கப்பலை அது சந்தித்துக் கொண்ட போதும் மோதல் ஏற்படுவதைத் தவிர்த்தது" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
எனினும் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சீனப் பாதுகாப்பு அமைச்சகம், "அமெரிக்காவின் இந்தச் செயற்பாடு அதிருப்தி அளிக்கின்றது. சீனக் கடற்படைக் கப்பல் அமெரிக்கப் போர்க் கப்பல் மீது கடுமையான நெறிமுறைகளைக் கையாளத் தொடங்கியதும், அமெரிக்கா மழுப்பலான பதிலைத் தெரிவித்துள்ளது" என்று கூறியுள்ளது.
ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையே சர்ச்சைக்குரிய தீவுகள் தொடர்பான எழுந்துள்ள பதற்ற நிலையில், அமெரிக்கா தனது நட்பு நாடான ஜப்பானுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றது. (ற)

## தீவிரவாத செயற்பாடுகளை ஐ.நா. கண்காணிக்கும்

### புதிய உடன்படிக்கை உருவாக்கம்

நியூயோர்க், டிசெ.19
பயங்கரவாத அமைப்புகளின் இணைய பயன்பாட்டை கண்காணிப்பதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபை புதிய உடன்படிக்கை ஒன்றை உருவாக்கியுள்ளது.
அந்த உடன்படிக்கையின்படி பயங்கரவாத அமைப்புகளும் பயங்கரவாதிகளும் இணையத்தைப் பயன்படுத்தி பயங்கரவாத நடவடிக்கைகளைத் தூண்டிவிடுவது, ஆள்சேர்ப்பது, உதவிச் செய்வது, சதித்திட்டம் தீட்டுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஐ.நா. பயங்கரவாத தடுப்பு நிறுவனம் பல்வேறு நாடுகளுடனும் தொடர்புடைய சர்வதேச அமைப்புகளுடனும் இணைந்து தடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த உடன்படிக்கையின்படி பாதுகாப்புச் சபையின் பயங்கரவாத தடுப்பு ஆணையத்தின் பதவிக்காலம் 2017ஆம் ஆண்டு டிசெம்பர் வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஒட்டுக்கேட்பது சட்டத்துக்கு முரணானது

### அமெரிக்க நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

நியூயோர்க், டிசெ.19
அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனம் (என்.எஸ்.ஏ) பெருமளவில் தொலைபேசி உரையாடல்களை இரகசியமாக ஒட்டுக் கேட்டமை அரசியலமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளித்துள்ளது அந்த நாட்டு நீதிமன்றம்.
என்.எஸ்.ஏ. உலகநாடுகளைச் சேர்ந்த பல்வேறு தலைவர்கள், பிரமுகர்களின் தொலைபேசி உரையாடல்களை இரகசியமாக ஒட்டுக் கேட்டு வருகின்றது என்று வெளியான தகவல்களை அடுத்து அதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது அந்த நாட்டு நீதிமன்றம்.
என்.எஸ்.ஏயின் முன்னாள் பணியாளரான எட்வேர்ட் ஸ்நோடன், அமெரிக்கா பல்வேறு நாடுகளின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கின்றது என்ற தகவலை வெளியிட்டதோடு, அதற்கான ஆதாரங்களையும் பகிரங்கப்படுத்தியிருந்தார். அதையடுத்து அமெரிக்காவுக்கு எதிராகப் பல்வேறு நாடுகளில் இருந் தும் கடும் எதிர்ப்பலைகள் கிளம்பின.
இந்தநிலையில் அமெரிக்காவின் உளவுச் செயற்பாட்டுக்கு எதிராக அந்த நாட்டில் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பளித்துள்ள நீதிமன்றம், "இரகசியமாகத் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்பது அரசியல் அமைப்புக்கு முரணானது. உளவு நிறுவனத்தின் இந்த நடவடிக்கை ஒரு தலைப்பட்சமான தலையீடு" என்றுசுட்டிக்காட்டியுள்ளது. (ற)

## நல்லூர் பிரதேச சபை
## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2014

சபையானது 2014 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருள்கள்**

01. காகிதாதிகள் எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. நூலகங்களுக்கான நூல்கள்
05. துணி வகைகள்
06. கட்டட பொருள்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
07. கற்கள், மணல்
08. தீந்தைகள் வகைகள் (paints) நிறந்தீட்டும் பொருள்கள்
09. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருள்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள்
11. மின் வழங்கு பொருள்கள், மின் பாவனைப் பொருள்கள்
12. எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள்
13. இரும்புப் பொருள்கள்
14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
15. பனை மரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின் கலங்கள்
17. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப் பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருள்கள், கிருமிநாசினிகள்
19. பாதணிகள், தோற்பொருள்கள்
20. அலங்காரப் பொருள்கள்
21. இலத்திரனியல் பொருள்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தல்
03. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரம் திருத்தல்
04. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
06. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
07. மின் சாதனங்கள் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
08. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல்
09. வாகனங்கள் சுத்திகரிப்பு
10. கோலவுடை தைத்தல்
11. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
12. இறப்பர் முத்திரை தயாரித்தல்
13. கழிவகற்றல் சேவை (Gully emptier service)

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களைச் சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2014"** எனக் குறிப்பிட்டுப் பதிவுத்தபால் மூலம் **"தலைவர், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, இல.14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் 03.01.2014 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு 021 222 2700 அல்லது 021 320 2207 எனும் தொலைபேசி இலங்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**ப.வசந்தகுமார் தலைவர்,**
**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.** (சி/10618)(0.2.3)

**பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்-2013**
**யா/ கலாநிதி ஆ. தியாகராசா மத்திய ம.வித்தியாலயம்**
**(காரைநகர் இந்துக் கல்லூரி)**

தலைவர்: திருமதி வா.தவபாலன் (அதிபர்)
காலம்: 21.12.2013 பி.ப. 2.00 மணி
இடம்: கல்லூரி மண்டபம்

யா/கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் (காரைநகர் இந்துக் கல்லூரி) பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் மேலே குறிப்பிட்டவாறு நடைபெறவுள்ளது. கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

திருமதி வா.தவபாலன்
தலைவர்

இ.திருப்புகலூர்சிங்கம்
செயலாளர்.

(சி/10361)(4.6.3)

இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல்,சளி,இளைப்பு மற்றும் நுரையீரல்,சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும்,கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா (R)
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 222 2567

(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்)

(சி/14237)(7.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**த. அஜீபன்** (J.P)



மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த தம்பிமுத்து அஜீபன் 11.12.2013 அன்று யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சாவகச்சேரி நீதிமன்றில் மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவரை மேன்மேலும் பல பதவிகள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**சின்னத்தம்பி செல்லம்மா குடும்பத்தினர்,**
**சி.அமிர்தலிங்கம் குடும்பத்தினர், அசோ - டெய்சி குடும்பத்தினர்**

(33044)(45.3.6)

**சேவைநலன் பாராட்டு**

**என்.சிவசீலன்** (J.P)



(பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை யாழ்ப்பாணம்)

எங்கள் அலுவலகத்தில் 41 வருடங்களாக நற்பணியாற்றி ஓய்வுபெற்று செல்பவரைப் பல்லாண்டுகாலம் சுகமே வாழ வாழ்த்துகின்றோம்.

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,**
**அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள்,**
**இலங்கை சமூக பாதுகாப்பு சபை,**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**

(42717)(45.3.6)

**யாழ் ஆயரின் குருத்துவ பொன்விழா**




எமது யாழ் மறைமாவட்ட ஆயர்
**அதிவணக்கத்துக்குரிய மேதகு**

**இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**

தமது குருத்துவ அபிஷேகத்தின்
50 ஆவது ஆண்டினை
எதிர்வரும்
21.12.2013 (சனிக்கிழமை)
நினைவு கூருகின்றார்.
எமது மறைமாவட்ட ஆயரின்
இந்த மகிழ்வான நாளில் ஆயர்
தலைமையில்
ஒப்புக்கொடுக்கப்படும் நன்றித்
திருப்பலியில்
கலந்து சிறப்பிக்க இறைமக்கள்
அனைவரையும்
அன்புடன் அழைத்து
நிற்கின்றோம்.

இடம் : யாழ் மரியன்னை பேராலயம்
நேரம் : 9.30 a.m
காலம் : 21.12.2013 (சனிக்கிழமை)

**குருமுதல்வர்,**
**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

# உளவியல் தகுதி எம்.பிக்களுக்கு கட்டாயம் அவசியம்

*ஹெரான் தெரிவிப்பு*



கொழும்பு.டிசெ.19

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏதாவது ஒரு தகுதி இருக்கவேண்டும். அதிலும் குறிப்பாக உளவியல்ரீதியான தகுதி அவர்களுக்கு நிச்சயமாக இருக்கவேண்டும். இவ்வாறு ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.


நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இடர் முகாமைத்துவ அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எந்தத் தகுதியும் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் அரசியல்வாதிகள் இருக்கின்றனர். எனது கருத்தின்படி நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வருக்கு நிச்சயம் ஏதாவது ஒரு தகுதி இருக்க வேண்டும். ஏனெனில் காலையிலிருந்து இந்தச் சபையில் இடம்பெற்ற விவாதங்களை நான் நன்றாக அவதானித்தேன். சில நாடாளு மன்ற உறுப்பினர்கள் சிறுபிள்ளைத் தனமாகச் செயற்படுகின்றனர்.

எனவே, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவருக்கு கல்வித் தகைமை, அனுபவம் முதலான தகுதிகளுடன் உளவியல் ரீதியான தகுதியும் நிச்சயமாக இருக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு உளவியல் ரீதியான தகுதி இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும் - என்றார். (ச-சி)

# பிடிபட்டது யானை



மட்டக்களப்பு.கல்லடி, 6ஆம் கட்டைப் பிரதேசத்தில் அட்டகாசம் புரிந்து வந்த காட்டு யானைகளில் ஒரு காட்டு யானையை வனவிலங்கு அதிகாரிகள் நேற்று முன்தினம் பிடித்துக் கட்டியுள்ளனர்.

கல்லடி, கொட்டுக்கச்சி, பளுகஸ்வெவ, தங்கஸ்வெவ, கட்டுவ உட்பட பல பிரதேசங்களிலும் பிடிக்கப்பட்டுள்ள இந்த யானையுடன் சுமார் 10 யானைகள் கூட்டமாகச் சென்று கடந்த 3 மாதங்களாக அட்ட காசங்களைப் புரிந்து வந்துள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

சுமார் 600 தென்னை மரங்களையும், மாமரங்களையும் இந்த யானைகள் முறித்துச் சேதப்படுத்தியுள்ளன என்று பிரதேச மக்கள் கூறினர்.

இந்த நிலையிலேயே வன விலங்கு அதிகாரிகள் குறித்த காட்டு யானையை மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் பிடித்துள்ளனர். (ச)

**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நல்லூர், வைமன் வீதியில் 2¾ பரப்புடன் 5 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொ.பே. 077 347 7498

(சி/10336)(7.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




நேற்று (2013.12.18) கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை உயர்தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் (SLIATE) 10 ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் உயர் தேசிய தகவல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (HNDIT-Higher National Diploma in Information Techonology) பட்டம் பெறும் எமது நண்பன்

**விக்னேஸ்வரன் தயாபரன்**
(MA (PDS), B Com., HN Dip.in.Acc., AMA, HNDIT)

அவர்களை மேலும் பல பட்டங்கள், உயர்வுகள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

**நண்பர்கள்:**
**சோ.சிவசுந்தரம், சோ.யசோதரன்**

(42666)(3.6.4)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




40 வருடங்களுக்கு மேலாக
தனது கான மழையினால்
மக்களை மகிழ்வித்த
அளவையூர் நாதஸ்வர வித்துவான்

**அ.பாலச்சந்திரன்**
**(சுதந்திரன்)**

அவர்கள் **"கலாபூஷணம்"** விருது பெற்றமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேன்மேலும் விருதுகள் பல பெற இறைவனை வேண்டுகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**சிங்கம்ஸ் பார்மஸி, கோண்டாவில்.**
**கோண்டாவில் மேற்கு,**
**கந்தர்வளவு மகா கணபதிப் பிள்ளையார் (காளிகோயில்)**
**ஐந்தாம் திருவிழா உபயகாரர்.**

(42722)(3.6.4)




யாழ்ப்பாணம் அச்சகவீதியைச் சேர்ந்த
**திரு. திருமதி மரியதாஸ் மனோகரன்** தம்பதியரின்
கனிஷ்ட புதல்வி

**மகிழினி மடோனா**

அவர்கள் இன்று (19.12.2013) வியாழக்கிழமை மூன்று உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்கின்றார்.

இவர் இலங்கை சட்டக்கல்லூரியின் மூன்று வருட பரீட்சைகளிலும் உயர்தரத் தேர்ச்சி எய்தியதுடன், நிர்வாகச் சட்டப்பரப்பில் இலங்கை சட்டக்கல்லூரிப் பரீட்சையில் முதலாம் இடத்தைப் பெற்றதுடன், சட்ட மாணவர்களுக்கிடையேயான சேர்.பொன் இராமநாதன் ஞாபகார்த்த அறங்கூறும் அவையத்துரைப் போட்டியிலும், குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த பேச்சுப் போட்டியிலும் தங்கப்பதக்கங்களை வென்றதுடன், மேலும் பல விருதுகளைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் இலங்கை சட்டக்கல்லூரி சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் (2012ஆம் ஆண்டு) தலைவியும், யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தின் பழைய மாணவியும் ஆவார்.

இவர் மேலும் சட்டத்துறையில் பல பட்டங்கள் பெற்று அத்துறையில் மேன்மேலும் பிரகாசிக்க புனித கொஞ்சேஞ்சி மாதாவின் அருள்வேண்டி மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**மரியா (அக்கா)-அல்றின், அத்தார் மாமா**
குடும்பத்தினர் (ஹொலண்ட்),
**அப்பன்ரா-றீற்றா** (ஹொலண்ட்),
**பெரியப்பா-கமலாகரன்** குடும்பம் (ஹொலண்ட்)
**சித்தப்பா மகேந்திரன்** குடும்பம் (ஹொலண்ட்)

(C/10248)(10.6.3)

# தற்காலிக கடைகளுக்கு மன்னார் நகரசபை அனுமதி

*பண்டிகைக் காலத்தை முன்னிட்டு*

மன்னார், டிசெ.19
எதிர் வரும் பண்டிகைக் காலங்களை முன்னிட்டு மன்னார் நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இது வரை 137 தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;
எதிர் வரும் நத்தார், புதுவருட பண்டிகைக்காலங்களை முன்னிட்டு தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க மன்னார் நகர சபை இடங்களை ஒதுக்கீடு செய்து வருகின்றது.
இந்த வியாபார நிலையங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மட்டுமே இயங்க முடியும்.
இந்தநிலையில் மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதி தொடக்கம் மன்னார் பிரதேச செயலகம் வரை குறித்த வியா பார நிலையங்கள் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது.
இது வரை 137 வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒரு வியாபாரநிலையம் அமைப்ப தற்கு நில வாடகையாக 12 ஆயிரம் ரூபா அறவீடு செய்யப்படுகின்றது.
சிறு நிலப்பரப்பைக் கொண்ட கடைகளுக்கு இடங்களுக்கு ஏற்ப வாடகை அறவீடு செய்யப்படுகின்றது. இதுவரை பண்டிகைக்கால வியாபார நிலையங்களை நடத்த விருக்கும் வியாபார நிலை யங்களின் உரிமையாளர் களிடம் இருந் து மொத்தமாக 15 லட்சம் ரூபா அறவீடு செய்யப்பட்டுள்ளது.
இன்னமும் 20 வியாபார நிலையங்களை அமைக்க இடங்கள் வழங்கப்படவுள்ளன.
இதில் கிடைக்கும் நிதி மூலமாக மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்வதற்கு மன்னார் நகர சபை தீர்மானித்துள்ளது.
மன்னார் நகர சபையின் தலைவர், உப தலைவர்,நகர சபை செயலாளர்,உறுப்பினர் களின் ஆதரவோடு குறித்த வேலைத் திட்டம் இடம் பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

## மோதிக் கொண்ட மோட்டார் சைக்கிள்கள்

வவுனியா கல்நாட்டியகுளம் வேப்பங்குளம் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி இரண்டு மோட்டார்சைக்கிள்கள்ஒன்றுடன்ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.
இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-
கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் உமா மகேஸ்வரன் வீதியூடாக கல்நாட்டிய குளம் பகுதியை நோக்கி ஒன்றன் பின் ஒன்றாகச் சென்ற இரண்டு மோட்டார் சைக்கிள் கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன.
இந்த விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் சிறு சேதத்துக்கு உள்ளாகின. இதன்போது இருவர் சிறு காயத்துக்கு உள்ளாகினர்.
இந்தப் பகுதியில் இரவு வேளைகளில் அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. . (க-421)

## பாடசாலைக்கு வந்த பொருள்கள் வவுனியா கடைகளில் விற்பனை

*தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை*

*வவுனியா, டிசெ.19*
*பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட உலக உணவுத் திட்டப் பொருள்கள் வவுனியாக் கடைகள் சிலவற்றில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.*
*உலக உணவு திட்ட நிறுவனத்தினால் (W.F.P.) பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் பொருட்டு பருப்பு, மரக்கறி எண்ணெய், அரிசி, மீன்ரின் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. வவுனியாவில் நகர்ப் புறத்தைச் சார்ந்த சில பாடசாலைகளைத் தவிர ஏனைய பாடசாலைகளுக்கு இவை வழங்கப்படுகின்றன. இந்த உணவுப் பொருள்கள் சில பாடசாலைகளில் இருந்து கடந்த காலங்களில் திருடப்பட்டுள்ளன. இதேவேளை பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் இத்தகைய உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.*
*இதனால் மாணவர் களுக்கு வழங்க வேண்டிய உணவுப் பொருள்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக பாடசாலைகளின் நலன்விரும்பிகளும் பெற்றோரும் கவலை தெரிவித்துள்ளனர்.*
*மாணவர்களின் கற்றல் மேம்பாட்டுக்காக கல்வி அதிகாரிகள், உலக உணவுத் திட்டத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் எனப் பலரும் அடிக்கடி பாடசாலைகளுக்கு வருகை தந்து நிலைமைகளை ஆராய்ந்து வந்தாலும் இந்த நடவடிக்கைகள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.*
*இவை தொடர்பான துல்லியமான தகவல்களை நலன் விரும்பிகள் தெரிவிக்கும் பட்சத்தில் இதனைத் தடுத்து நிறுத்த முடியுமெனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர். (க-402)*

# செயலகத்தில் ஒட்டப்பட்ட 'டெங்கு' ஸ்ரிக்கர் மாயம்

*சுகாதார ஆர்வலர்கள் பெரும் விசனம்*

வவுனியா, டிசெ.19
வவுனியா மாவட்டச் செயலகத்தில் 'டெங்கு' விழிப்புணர்வு தொடர்பாக ஒட்டப்பட்ட 'ஸ்ரிக்கர்' அகற்றப்பட்டமை சுகாதார ஆர்வலர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.
வவுனியா மாவட்டத்தில் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வவுனியா மாவட்ட சுகாதார திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.
கடந்த மாதம் தொடக்கம் இடையிடையே மழை பெய்வதால் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக 'டெங்கு நோய்' பொது மக்கள் மத்தியில் ஏற்படாதிருக்கவும், அதனை மட்டுப்படுத்தும் நோக்கிலும் இங்கு 'டெங்கு வாரம்' அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் வவுனியா மாவட்டச் செயலகத்தில் டெங்கு நுளம்புகளின் தாக்கம் உள்ளதை அறிவுறுத்தும் 'சிவப்பு நிற' ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டது.

> "_"
> அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கடந்த வருடம் இதனை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தது.

ஆனால் இந்த ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட அன்றே அகற்றப்பட்டுள்ளது. பொலிஸாரின் பாதுகாப்புக்கு உட்பட்ட மாவட்டச் செயலகத்தில் வெளியாள்கள் இந்த ஸ்ரிக் கரை அகற்றுவதற்கு முன் வந்திருக்க மாட்டார்கள் என்பதே இங்குள்ள பலரதும் அபிப்பிராயமாக உள்ளது.
இதேவேளை டெங்கு அபாயமுள்ள வீடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிலையங்களில் சிவப்பு நிற ஸ்ரிக்கர்களும், பாதுகாப்பான மற்றும் சுத்தமான இடங்களில் பச்சை நிற ஸ்ரிக்கர் களும் ஒட்டப்பட்டுவருகின்றன. மேலும் டெங்கு நுளம்பின் பெருக் கத்துக்குக் காரணமானவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.
கடந்த சில வருடங்களாக டெங்கு நுளம்புகளால் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கடந்த வருடமாக இதனை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தது.
சுகாதாரப் பிரிவினர் டெங்கு நுளம்பு காணப்படும் இடங்களில் 'புகையடிக்கும்' தொழிற்பாட்டிலும் தற்போது ஈடுபட்டுள்ளனர். மழைகாலம் என்பதால் அனைவரையும் விழிப்பாக இருக்குமாறு துண்டுப் பிரசுரங்கள், விளம்பரப் பதாகைகள், நேரடி பரப்புரைகள் மூலமாக விழிப்பூட்டும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. (க-402)

## முல்லைத்தீவில் மடிச்சுக்கட்டி நோய்

முல்லைத்தீவு, டிசெ.19
முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற் பயிர்ச் செய்கைகள் மடிச்சுக்கட்டி நோயால் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளன. போதிய மழையும் இல்லாத நிலையில் இந்த நோயின் தாக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. விவசாயிகள் களை களைக் கட்டுப்படுத்துவதற்கும், கிருமிநாசினி தெளித்து பீடைகளைக் கட்டுப்படுத்து வதற்கும் அதிக பணத்தைச் செலவிட்டுள்ள நிலையில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த நோய் பரவி வருகின்றது. மடிச்சுக்கட்டி நோய் மாவட்டம் முழுவதும் உள்ள வயல்களில் காணப்படுகின்றது. இதனால் நெற் பயிர்களின் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டுள்ளது. (க-500)



வவுனியா வடக்கிலுள்ள ஒலுமடு லயன்ஸ் இளைஞர் கழகத்தினர் ஒலுமடு அ.த.க. பாடசாலையின் பொது மைதானத்தில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மைதானத்தில் புல், பூண்டு மற்றும் பற்றைகள் காணப்படுவதால் இவற்றை அகற்றித் துப்புரவு செய்யும்பணிகள் சிரமதான மூலம் போது இடம்பெற்று வருகின்றன. (க-435)

## மரக்கறிச் செய்கையில் ஈடுபட்ட முல்லை விவசாயிகளுக்கு பாதிப்பு

*உரிய விலைக்கு விற்க முடியாமையே காரணம்*

முல்லைத்தீவு, டிசெ.19
முல்லைத்தீவு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறி வகைகளை சந்தைப்படுத்த முடியாத நிலையில் மிகவும் குறைவான விலைக்கே விற்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
கத்தரிக்காய், பூசணிக்காய், கருணைக்கிழங்கு, மரவள்ளி ஆகிய மரக்கறி வகைகள் இங்கு அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன. நீர் இறைக்கும் இயந்திரம் மூலமாக நீரை இறைத்து அதிக கூலிகளைக் கொடுத்து பயிரிடப்பட்ட பயிர்கள் மூலமாக அதிக அறுவடை கிடைத்த போதிலும் அவற்றை நல்ல விலைக்கு விற்க முடியாத நிலையே காணப்படுகின்றது. ஒரு சில உள்ளூர் வியாபாரிகள் அவற்றை மிகக் குறைந்த விலைக்கு வாங்கிச் செல்கின்றனர்.

> "_"
> ஒரு சில உள்ளூர் வியாபாரிகள் அவற்றை மிகக் குறைந்த விலைக்கு வாங்கிச் செல்கின்றனர்.

இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தப் பகுதியில் உள்ள சிறந்த விவசாயியும் மரக்கறிச் செய்கையில் முழு நேரமாக ஈடு படுபவருமாகிய சி.மார்க் கண்டு என்பவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்;
நான் இந்த முறை கருணைக் கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபட்டேன். நல்ல அறுவடை கிடைத்தது. ஆனால் அதனை விற்பனை செய்ய முடியவில்லை. பயிர்ச் செய்கைக்கெனப் பட்ட கடனைக் கூட திருப்பிச் செலுத்த முடியவில்லை எனத் தெரிவித்தார். (க-500)

# சிறப்பாகச் சேவையாற்றுக; மேலதிக அரச அதிபர் அறிவுரை

*புதிதாக நியமனமான அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு*

கிளிநொச்சி, டிசெ.19
அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெறும் பட்டதாரிகள், சிறப்பான சேவையை மக்களுக்கு வழங்க வேண்டும்- இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன்.
கிளிநொச்சி மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர்களாகச் சேவையாற்றிய 381 பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டபோதே மேலதிக அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;
இன்று நியமனம் பெறுபவர்கள் சிறப்பான சேவையை மக்களுக்கு ஆற்ற வேண்டும். குறிப்பாக இந்த மாவட்டம் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்டதொரு மாவட்டமாகும். இங்குள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளனர்.
அவர்கள் சிறந்த சேவையை அதிகாரிகளிடமிருந்து எதிர்பார்க்கின்றனர்- என்றார்.
இந்த நிகழ்வில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பிரதேச செயலர்கள் மற்றும் அரச திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண் டனர். (க-6)

## தபால் அலுவலகத்தில் திருடுவதற்கு முயற்சி

அம்பாறை, நாவிதன்வெளி, சவளக்கடை உபதபால் கந்தோருக்குள் ஞாயிற்றுக்கிழமை உட்புகுந்து பணம் வைக்கும் பாதுகாப்புப் பெட்டகத்தை திறக்க எடுத்த முயற்சி பயனளிக்காததால் திருடர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று சவளக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

சவளக்கடை, கல்முனை வீதியில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள உப தபால் அலுவலகத்துக்கு தபால் அதிபர் காலை சென்ற போது கதவு உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்து பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்ற போது, கதவு உடைத்து அங்குள்ள பாதுகாப்புப் பெட்டகத்தை திருடர்கள் திறக்க எடுத்த முயற்சி பயனளிக்காத நிலையில் அவர்கள் தப்பிச் சென்றுள்ளமை கண்டறியப்பட்டது. (ச)



இடர் காலத்தில் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஒத்திகை திருகோணமலை பொது வைத்தியசாலையில் நடத்தப்பட்டது.

இடரொன்றின்போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை கிளையின் கட்டடம் இடிந்ததால் அதில் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டுவந்து சிகிச்சை அளிக்கப்படுவது போன்ற ஒத்திகை நடத்தப்பட்டது.

## இனந்தெரியாதோரால் வாகனங்கள் தீக்கிரை

### ரூ.95 லட்சம் நட்டம்

திருகோணமலை.டிசெ.19

திருகோணமலை, உப்புவெளி பிரதேசத்திலுள்ள வரலாற்றுப் பிரசித்திமிக்க வில்கம்வெஹர வாவியை புனர்நிர்மாணம் செய்வதற்காக எடுத்துவரப்பட்ட இரண்டு 'எஸ்கவேட்டர்' ரக வாகனங்கள், ஒரு டிப்பர் ரக வாகனம் ஆகியன திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இனந் தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன..

இந்த வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டதால் 95 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

ஏழு பேர் அடங்கிய இனந்தெரியாத குழுவினரே இந்த வாகனங்களைத்தீக்கிரையாக்கியுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

"–"

**தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தபோதும் அது பயனளிக்காத நிலையில் வாகனங்கள் மூன்றும் முற்றாக சேதமடைந்துள்ளன.**

பொலிஸாரும் கடற்படையினரும்இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தபோதும் அது பயனளிக்காத நிலையில் வாகனங்கள் மூன்றும் முற்றாக சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர் பில் உப்புவெளி பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## வாகன விபத்தில் ஒருவர் காயம்



மட்டக்களப்பு ,டிசெ.19

மட்டக்களப்பு, கல்முனை பிரதான வீதியின் புதுக்குடியிருப்பு பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்முனையிலிருந்து வந்த கார் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளில் சென்றவர் மீது மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த நபரே காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# தமிழரின் இருப்பைப் பறிக்க முஸ்லிம் பிரதிநிதிகள் முயற்சி

### கல்முனை மாநகரசபை உறுப்பினர் காட்டம்

கல்முனை.டிசெ.19

கல்முனைப் தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகம் சகல அதிகாரங்களுடனும் தரமுயர்த்தப்பட்டால் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே விரிசல் நிலை ஏற்படும் என்று முஸ்லிம் பிரதிநிதிகள் கூறுவது தமிழர்களின் இருப்பை இல்லாமல் செய்வதற்கே ஆகும்.

இவ்வாறு கல்முனை மாநகர சபை உறுப்பினர் அழகப்போடி விஜயரெட்ணம் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை அனைத்து அதிகாரமுடையதாக தரமுயர்த்துவதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக முஸ்லிம் பிரதிநிதிகள் ஊடகங்களில் விடுத்து வரும் அறிக்கைகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக பல துன்பங்களை அனுபவித்து வருகின்ற கல்முனைப் பிரதேச தமிழ் மக்கள் தங்களுக்குத் தனியான பிரதேச செயலகப்பிரிவு தேவை என்பதற்காக கல்முனை வாழ் மக்களும் மதப் பெரியோர்களும் இணைந்து உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டு வந்தனர். பிரகாரம் சகல அதி காரம் உடைய பிரதேச செயலகமாக தரமுயத்தப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப் பட்டது. முஸ்லிம் காங்கிரஸின் தலைமை மற்றும் அதன் பிரதிநிதிகள் இந்தத் தரமுயர்தலுக்குத் தடையாக இருப்பது வேதனையாகவுள்ளது.


"–"

**பிரதேச செயலகம் தர முயர்த்தப்பட்டால் தமிழ்- முஸ்லிம் மக்களிடையே விரிசல் நிலை எற்படும் என முஸ்லிம் தரப்புக் கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்று எவருக்கும் புரியவில்லை.**

தமிழ்ப்பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட்டால் தமிழ்- முஸ்லிம் மக்களிடையே விரிசல் நிலை எற்படும் என முஸ்லிம் தரப்புக் கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்று புரியவில்லை. அவர்களது கூற்றைப் பார்க்கும் போது தமிழ் மக்களின் இருப்பைப் பறிக்கும் செயற்பாடாகவே கருத முடிகின்றது

கல்முனையில் மட்டும் பிரிந்து வாழ்ந்தால் விரிசல் ஏற்படும். எனவே இணைந்துவாழவேண்டும் எனக்கூறுகின்றனர். முஸ்லிம் தலைமைகள். கிழக்கு மாகாண சபையில் இணைந்து தமிழரும் முஸ்லிம் மக்களும் ஆட்சியமைப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அழைப்புவிடுத்த போது அதை மறுத்த முஸ்லிம் காங்கிரஸ் கல்முனையில் இணைந்து வாழவேண்டும் என்று கூறுவது எதற்காக என்று புரியவில்லை. -என்றார். (ச)

## புதைபொருள் தேடும் கருவியுடன் நால்வர் கைது



மட்டக்களப்பு,டிசெ.19

புதைப்பொருள் தேடும் கருவிகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர்கள் திங்கட்கிழமை வாழைச்சேனை நகரில் வைத்து கைது செய்யப்பட்ட போது அவர்களிடம் இருந்து புதைபொருள் தேடுதலுக்குப் பயன்படுத்தப்படும் கருவிகளும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டோர் அம்பலாங்கொடை, வாழைச்சேனை, திருகோணமலை ஆகிய இடங்களை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினார்.

அம்பலாங்கொடையைச் சேர்ந்த நபர் அம்பாறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# அறிக்கை விடுவதுதான் ஒற்றுமையைப் பாதிக்கும்

### கிழக்கு மாகாணசபை உறுப்பினர் காட்டம்

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் அமைந்தால் தமிழ் - முஸ்லிம்மக்களிடையே முரண்பாடு வலுக்கும்; பிரிவினை ஏற்படும் என்றெல்லாம் பத்திரிகைகள் மூலம் அறிக்கைகள் விடுவதுதான், தமிழ்-முஸ்லிம் மக்களின்ஒற்றுமையைக் குலைக்கும் சதி நடவடிக்கை என்று எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராஜா தெரிவித்தார்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் அமைக்கும் முயற்சியை முஸ்லிம் பிரதிநிதிகள் எதிர்ப்பது குறித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசியலை வளர்க்கவேண்டும் என்று நினைத்து இனாங்களுக்கிடையில் பகையுணர்வை ஏற்படுத்தும் அறிக்கைகளை விடுவதை முஸ்லிம் அரசியல் வாதிகள் தவிர்க்க வேண்டும்.

தமிழ்- முஸ்லிம் மக்கள் இன்று நிம்மதியாக சந்தோசமாக வாழ்கின்றனர். அவர்களுக்கிடையில் எந்தவிதமான விரிசல்களும் இல்லை.

இந்த நிலையில் கல்முனையைப் பிரித்தால் முரண்பாடு வலுக்கும் என எச்சரிக்கும் முஸ்லிம் அரசியல் வாதிகளின் செய்திகளைப் பார்த்து அதிர்ந்து போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-31)

# வடிச்சல் திட்டத்தினால் நெற்பயிர்ச் செய்கை பாதிப்பு

### உதுமாலெப்பையின் செயலைக் கண்டிக்கிறார் நஸீர்

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள கோணாவத்தை ஆற்றை அபிவிருத்தி செய்தல் என்ற போர்வையில் சம்புக்களப்பு வடிச்சல் திட்டத்துக்கு பல லட்சக்கணக்கான பணத்தை செலவு செய்துவரும் கிழக்கு மாகாண அமைச்சர் உதுமாலெப்பையின் செயலால் சுமார் 1,200 ஏக்கர் காணிகளில் நெற்செய்கை பண்ண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர் குற்றம் சாட்டியுள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சம் புக்களப்பு வடிச்சல் மற்றும் கோணா வத்தை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஊடகவியலாளர் மாநாடு அட்டாளைச்சேனை பிரதேச



சபைக் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்புக்களப்பு வடிச்சல் திட்டத்தை பல வருடங்களுக்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசுகள் வெளிநாட்டு அரசுகளின் உதவியு டன் மேற்கொண்டும் அந்த முயற்சிகள் யாவும் இறுதியில்தோல்வியடைந்தன. களப்பினது நீர்மட்டத்தை விட கடல் மட்டம் உயர்ந்திருப்பதே அதற்கான காரணமாகும்.

இந்த வடிச்சலினூடாக வேறு பிரதேசங்களில் உள்ள நீரும் வருகின்றமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. -என்றார். (ச)

# அனைத்து மதங்களையும் பாதுகாக்க நடவடிக்கை

*பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு*

கொழும்பு,டிசெ.19

நாட்டிலுள்ள அனைத்துச் சமயங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பௌத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சு மீதான விவாதத்தில் உரை யாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த சிந்தனையினூடாக நாட்டிலுள்ள பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சபைகளைப் பாதுகாக்க நடவடிக்கை



எடுக்கப்படுகிறது. தற்போது இந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சமயத்தைப் பின்பற்றுகிறார்கள்.

அந்தச் சமயங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கொள்கை இருக்கிறது. அதற் கமைய அவை செயற்பட வேண்டும்.

நாட்டில் தற்போது 70.2 சதவீத பௌத்தர்களும், 12.6 சதவீத இந்துக்களும், 9.7 சதவீத இஸ்லாமியர்களும், 6.1 சதவீத கத்தோலிக்கர்களும் வேறு சமயத்தவர் என 1.3 சதவீதத்தினரும் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் தத்தமது சமயங்களை மிகவும் நல்லமுறையில் பின்பற்றி வருகின்றனர். இவர்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதற்காக இந்த வரவு - செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 4 ஆயிரத்து 571 மில்லியன் ரூபாவை எமது அமைச்சுக்கு ஒதுக்கித் தந்துள்ளார்.

இந்த நிதியினூடாக நாட்டிலுள்ள அனைத்துச் சமயங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார். (ச-சி)

> "-"
> மஹிந்த சிந்தனையினூடாக நாட்டிலுள்ள பௌத்த,இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சபைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

# நாட்டின் பல பகுதிகளில் கடும் காற்றுடன் மழை

*வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்*



கொழும்பு,டிசெ.19

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் குழப்பமான காலநிலையால் நாட்டின் பல பகுதிகளில் பலமான காற்றுடன் மழை பெய்வதுடன், கடற்பரப்பு கொந் தளிப்பாகக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் முதல் காலி வரையான கடற்பரப்பில் மழைபெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காற்றின் வேகம் அதிகரித்திருக்கும்போது நாட்டைச் சுற்றியுள்ள கடற்பகுதி கொந்தளிப்பாகக் காணப்படும்.

அதனால் மீனவர்கள் அவதானமாகஇருக்கவேண்டும்என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச)

# எரிவாயுவின் விலை உயர்த்தப்படாது

*கூறுகிறது நுகர்வோர் அதிகாரசபை*

சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பது குறித்து எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை என்று நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மஸ்ருக் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு விலையை அதிகரிக்க வேண்டும் என்று நிறுவனங்களிடம் இருந்து கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். பால்மா நிறுவனங்கள் மீதான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

சந்தையில் பால்மா தட்டுப்பாட்டை ஏற்படுத்த சில நிறுவனங்கள் முயற்சிக்கின்றன. அதன்மூலம் பால்மா வகைகளின் விலையை உயர்த்திக் கொள்ள அந்த நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

களஞ்சியசாலையில் பால்மாவை மறைத்து வைக்கும் நடவடிக்கையில் சில நிறுவனங்கள் முனைப்புக் காட்டுகின்றன. அதனைத் தடுக்கும் வகையில் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



சுகாதாரத்துறைக்கு புதிதாகத் தாதியர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடை பெற்றபோது தாதியொருவருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமனக் கடிதத்தைக் கையளித்தார்.

# அரச- தனியார் பஸ்களுக்கு ஒரே நேர அட்டவணை

*15 முதல் சேவைகள் என்கிறார் கெஹலிய*

கொழும்பு,டிசெ.19

எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் மற்றும் தனியார் பஸ்களை ஒரே நேர அட்டவணையில் சேவையில் ஈடுபடுத்த அமைச்சரவை அனுமதியளித்துள்ளது என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு முழுவதிலும் உள்ள 6 மில்லியன் பிரயாணிகளின் தேவைகளை நிறைவு செய்ய 4314 இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களும் 17129 தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பயணிகளுக்குச் சிறந்த சேவையை வழங்கவும் போட்டி களைத் தவிர்க்கவும் ஒரே நேர அட்டவணையில் சகல பஸ்களையும் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்றார். (ச)

# மூன்று பள்ளிவாசல்களை மூடுமாறு கொழும்பில் பொலிஸார் உத்தரவு

*முஸ்லிம் மக்கள் கொந்தளிப்பு*

கொழும்பு,டிசெ.19

கொழும்பிலுள்ள மூன்று பள்ளிவாசல்களில் தொழுகைகளை உடனடியாக நிறுத்துமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். தெஹிவளை அத்திடிய மஸ்ஜிதுல் ஹிபா, களுபோவில மஸ்ஜிதுல் தாருல் சாபீய், தெஹி வளை தாருல் அர்க்கம் ஆகிய பள்ளி வாசல்களுக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் குறித்த பள்ளிவாசல்களுக்குச் சென்ற பொலிஸார் தொழுகைகளை நடத்த வேண்டாம் என உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இதனால், அங்குள்ள முஸ்லிம் மக்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிய வந்துள்ளது.

இந்த உத்தரவு தொடர்பில் பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் கொழும்புப் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் கவனத்துக்கு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் கொண்டு வந்துள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் குறித்த மூன்று பள்ளிவாசல்களுக்கும் சென்ற பொலிஸார், தொழுகை நடத்தக் கூடாது என்று பள்ளி பாரிபாலன சபையினரிடம் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து பள்ளிவாசல் நிர்வாகத்தினர் இந்த விடயத்தை எனது கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்தச் சம்பவத்தைத் தெரியப்படுத்தியுள்ளேன் என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மதத் தலங்கள் மீது மீண்டும் ஆரம்பிக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகளால் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். இவ்வாறான மத விடயங்கள் தொடர்பில் பொலிஸார் தலையீடு செய்வதானது சட்டத்திற்கு முரணானதாகும் என்று அவர் கூறினார். (ச-சி)

# இராவணன் ஒரு சிங்கள வீரன்: மேர்வின் கண்டுபிடிப்பு

*விஷ்ணுவும் கதிர்காமக் கந்தனும் இலங்கையில்தான் பிறந்தார்களாம்*

கொழும்பு,டிசெ.19

"இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு. இராவணன் ஒரு சிங்கள வீரன்" என்று நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார் அமைச்சர் மேர்வின் சில்வா.

மகாவிஷ்ணுவும், கதிர்காமக் கந்தனும் இலங்கையில்தான் பிறந்தார்கள் என்றும் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தெரிவுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்



பட்ட அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறினார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ஓர் இந்து நாடு என இங்கு கூறப்பட்டது.இலங்கை இந்து நாடு அல்ல. இது ஒரு சிங்கள - பௌத்த நாடாகும். ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது அங்கு எஞ்சியிருந்த தமிழர்களையும் கடலில் தள்ளிவிடலாம் என அவரது படைச் சிப்பாய்கள் கூறினர். ஆனால், மன்னன் அவ்வாறு செய்யவில்லை. ஏனெனில், எமது பௌத்த தர்மக் கோட்பாடு அதுவல்ல.

இராவணன் ஒரு சிங்கள வீரன். அவர் இராமனுடன் போர் புரிந்தார். இராவணன் ஓர் இந்து என்று புத்தகங்களில் கூறப்பட்டிருக்கலாம். ஆனால், அவர் ஒரு சிங்கள வீரன்.

இந்துப் பெண்கள் வழிபாடு செய்வதற்காக இலங்கையில் இந்துக் கோயில்கள் கட்டப்பட்டன. இதற்காக இலங்கை இந்து நாடு எனக் கூறமுடியாது.

மகாவிஷ்ணுவை எடுத்துக் கொள்வோம். அவர் இலங்கையில் உப்பலவன்ன எனும் இடத்தில்தான் பிறந்தார். அது ஜனாதிபதியின் ஊருக்கு அருகிலுள்ள ஊராகும். அதாவது, நீலநிற மேனியனான மகாவிஷ்ணு தெய்வேந்திர முனையில்தான் பிறந்தார்.

அதுமட்டுமல்ல, கதிர்காமக் கடவுளான கந்தனும் கதிர்காமத்தில்தான் பிறந்தார்.

எனவே, இலங்கை ஓர் இந்து நாடு அல்ல. இது ஒரு சிங்கள பௌத்த நாடே.

இந்துக்களின் புனித நூலான பகவத் கீதையில் மாடறுப்பது தவறு. அவை தடைசெய்யப்படவேண்டும், உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

எனவே, மாடறுப்பதைத் தடுத்து நிறுத்த வடமாகாண சபையில் தீர்மானமொன்றைக் கொண்டுவந்து நிறைவேற்றுங்கள் -என்றார் (ச-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இனச் சண்டை மதச் சண்டைகளை மாள்விக்க வழிகள் இனி எப்போது...?

"மஹிந்த சிந்தனையினூடாக நாட்டிலுள்ள பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தற்போது இந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு மதத்தைப் பின்பற்றுகிறார்கள். அந்த மதங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கொள்கை இருக்கிறது. அதற்கமைய அவை செயற்பட வேண்டும். செய்தித் தாள்களை வாசித்துவிட்டு குரோதம், பொறாமை முதலானவற்றை வெளிப்படுத்தும் வகையில் இந்த உயரிய சபை செயற்படக்கூடாது. நர்ட்டின் 2 கோடியே 7 இலட்சம் மக்களை நல்வழி நடத்தக்கூடிய வகையில் நல்ல மனிதர்களாக புத்திசாலித்தனமாக செயற்படவேண்டும்."

பௌத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துகள் இவை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக மாற்ற முயற்சிப்பதாகவும், ஹெல உறுமய போன்ற பௌத்த தீவிரவாத அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன. பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள், பொதுபலசேனா போன்ற பௌத்த தீவிரவாத அமைப்புகள் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட்டமை ஆகியவற்றை அடிப்படையாக வைத்து இந்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. நேற்று முன்தினமும் தெஹிவளைப் பகுதியில் உள்ள மூன்று பள்ளிவாசல்களில் தொழுகை நடத்த பொலிஸார் தடைவிதித்துள்ளனர் என்ற செதி வெளியாகியுள்ளது.

பிரதமர் நாடாளுமன்றத்தில் மதங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும், மஹிந்த சிந்தனையூடாக மதங்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவது குறித்தும் உரையாற்றிக்கொண்டிருந்த வேளையில், நாடாளுமன்றத்திலிருந்து சில கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள தெஹிவளையில் முஸ்லிம் மக்களின் மத சுதந்திரம் பறிக்கப்பட்டமை மிகவும் வருந்தத்தக்க விடயமாகும். இனரீதியாகப் பிளவுபட்டுள்ள நாடு, தற்பொழுது மத ரீதியாகவும் பிளவுபட்டு வருவதற்கு பள்ளிவாசல்கள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல்களும் நடவடிக்கைகளும் முன்னுதாரணமாகும். சிங்கள பௌத்த நாடாக இலங்கையை மாற்றும் நடவடிக்கைகள் சிறுபான்மை இனங்களையும் சிறுபான்மை மதங்களையும் நசுக்குவதை இலக்காகக் கொண்டவை.

சில மாதங்களுக்கு முன் தெஹிவளைப் பிரதே சத்தில் பள்ளிவாசல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகங்களுக்கு விடப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பாக பாதுகாப்புத் தரப்பின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதனைப் புறந்தள்ளி, வக்புச் சபையில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஆதாரங்கள் இருந்தும் பதிவுசெய்யப்படவில்லை என்று குற்றம்சாட்டி மூன்று பள்ளிவாசல்களில் தொழுகைக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசல்களை நிர்வாகம் செய்வது வக்புச் சபை. நாடாளுமன்றச் சட்டங்களுக்கு அமைய வக்புச் சபை அமைக்கப்படுகிறது. தெஹிவளையில் உள்ள பிரஸ்தாப மூன்று பள்ளிவாசல்களிலும் தொழுகை நடத்துவதற்குப் போதுமான சட்ட ஆதாரங்கள் உள்ளன. அப்படியிருந்தும் பொலிஸார் தொழுகைக்குத் தடைவிதித்துள்ளனர். இவை இலங்கையின் கௌரவத்துக்கும் நன்மதிப்புக்கும் பங்கம் விளைவிக்கக்கூடியவை. வெளிநாடுகளிலும் அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடியவை.

அரபு நாடுகளில் இருந்து வெளியாகும் சஞ்சிகை ஒன்றில், சில மாதங்களுக்கு முன்னர், "முஸ்லிம் பெண்கள் மீது பௌத்த குழுக்கள் தாக்குதல்" என்ற தலைப்பில் இலங்கையில் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதற்கு பௌத்த தீவிரவாத அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்த செய்தி பிரசுரமாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இலங்கைக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான விமானங்களிலும் விமானப் பயணிகளின் பயன்பாட்டுக்காக இந்தச் சஞ்சிகைகள் வைக்கப்பட்டன. இது தொடர்பாக உடனடியாக செயற்பட்டு அந்த சஞ்சிகையின் புழக்கத்தைத் தடுக்கும்படி வெளிவிவகார அமைச்சரை ஜனாதிபதி பணித்திருந்தார். இது ஓர் உதாரணம்.

இலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள் இந்த நாட்டுக்கு உட்பட்டு மசிந்து போவதில்லை. அனைத்துலக நாடுகளை விரைந்து சென்று அடைகின்றன. இதனை மனதில்கொண்டு இலங்கை அரசு செயற்படுவது அவசியமாகும். மத சுதந்திரம் குறித்து பிரதமரால் நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள், மத விரோத நடவடிக்கைகள் காரணமாக கேலிக்கிடமாகி விடுகின்றன. இனரீதியாகவும் மதரீதியாகவும் நாட்டில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலமே நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்லமுடியும். அந்த இரண்டு பிரதான அலகுகளிலும் தீ பற்றுவதற்கு அனுமதித்துக் கொண்டு ஆட்சி நடத்துவதன் மூலம் இந்த நாட்டை முன்னேற்ற இயலாது. அதற்குப் ப[illegible] அது அதளபாதாளத்தில் விழும் நிலையே உருவாகும்.

# தமிழர்களை இனிமேல் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்



ராஜராஜன்

'தமிழர்களை இனிமேல் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' இந்த வார்த்தைகள் தந்தை செல்வாவின் வாயிலிருந்து வெளிவந்து 40 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் கடவுள் இங்குள்ள தமிழர்களை இன்றுவரை காப்பாற்றியதாகத் தெரியவில்லை. அவர்களது நிலை, சட்டியிலிருந்து அடுப்புக்குள் வீழ்ந்ததை ஒத்ததாகத் தற்போது காணப்படுகின்றது.

கடந்த 65 ஆண்டுகளாக இந்த நாட்டில் வாழுகின்ற தமிழர்கள் இன்னல்களையே அனுபவித்து வருகின்றனர். இலங்கை 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. ஆனால் தமிழர் களை அடிமைத்தளையில் பிணைக் கும் தினமாகவும் அது அமைந்து விட்டது. அந்நியரின் வருகைக்கு முன்னர் சுதந்திரமான தமிழர் அரசுகள் இங்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்தன. தமிழ் மன்னர்கள் தமது குடிமக்களை எந்த வித இன்னல்களும் ஏற்படாத வகையில் காத்து வந்தனர். ஆனால் அந்நியரின் வருகை இவை அனைத்தையும் தலைகீழாக மாற்றி அமைத்து விட்டது. தமது நிர்வாகக் கட்டமைப்பை இலகுவாக்கிக் கொள்ளும் பொருட்டு இந்த நாட்டின் அதிகாரம் ஒரே குடையின் கீழ் அந்நியரால் கொண்டு வரப்பட்டதால் தமிழர்களின் இறைமை முற்றாகவே இல்லாதொழிக்கப்பட்டது.

ஆனால் அந்நியர்கள் இந்த நாட்டை ஆண்டபோது தமிழ் மக்கள் சிறுபான்மை இனத்தவர் என்ற ரீதியில் ஒருபோதுமே புறமொதுக்கப்படவில்லை. அவர்களின் உரிமைகள் பேணப்பட்டன.

### உயர் பதவிகளில் தமிழர்கள்

பெரும்பான்மையினத் தலைவர்களைவிட தமிழர் தலைவர்கள் செல்வாக்கு மிகுந்தவர்களாகத் திகழ்ந்தனர். கல்வியறிவில் மேம்பட்டிருந்த தமிழர்கள் உயர் பதவிகளிலும் அமர்ந்து கொண்டனர். தமிழர்களின் செல்வாக்கு மேலோங்கிய நிலையிலும் பெரும்பான்மையின மக்கள் இதனை ஒரு பொருட்டாக அப்போது எண்ணியிருக்கவில்லை. இதனால் இனங்களுக்கிடையேயான உறவுகளில் விரிசல் தோன்றவில்லை. தமிழரான சேர் பொன்.இராமாதனை குதிரை வண்டியில் வைத்து குதிரைகளுக்குப் பதிலாக பெரும்பான்மையினத் தலைவர்கள் இழுத்துச் சென்ற வரலாறும் உண்டு.

ஆனால் அப்போதிருந்த தமிழ்த் தலைவர்கள் தீர்க்க தரிசனம் இல்லாதவர்களாகக் காணப்பட்டதால் அந்நியருக்குப் பிறகு தமிழ் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் எவற்றையும் இவர்கள் கேட்டுப்பெறவில்லை. இதன் விளைவுகளையே தமிழர்கள் இன்று அனுபவித்து வருகின்றனர்.

நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் பெரும்பான்மையினத் தலைவர்கள் தமது அடக்கி ஆளும் கொள்கையை முழு வீச்சில் நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பித்தனர். நாட்டின் முதலாவது பிரதமராகப் பதவி வகித்த டி.எஸ்.சேனநாயக்க தொடக்கம் இன்று பதவியிலுள்ள ஜனாதிபதிவரை பெரும்பான்மையின மக்களின் நலன்களுக்கே அவர்களால் முன்னுரிமை வழங்கப்பட்டது. ஏனைய சிறு பான்மை இனத்தவர்கள் வேண்டத் தகாதவர்களாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

### அடக்கியாளும் கொள்கையில் பெரும்பான்மை இனத்தவர்

இலங்கையின் வரலாற்றில் தமிழர்கள் ஒரு மிக மோசமான கட்டத்தைத் தற்போது கடந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் சகல வகையிலும் தோற்கடிக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில்தான் ஏனையவர்களால் நோக்கப்படுகின்றனர். சுருக்கமாகக் கூறினால் பரிதாபத்துக்குரியவர்களாக அவர்களின் நிலை மாற்றப்பட்டுள்ளது. இதிலிருந்து இவர்கள் மீண்டெழுவதென்பது இலகுவான காரியமாகத் தெரியவில்லை.

### சமஷ்டியை விரும்பாத தென்னிலங்கை வாதிகள்

ஒற்றையாட்சியின் கீழ் இந்த நாட்டின் சிறுபான்மையினராகிய தமிழ் மக்களுக்கு எந்தவித விமோசனமும் கிடைகாது என்பதை உணர்ந்த தந்தை செல்வநாயகம் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னரே சமஷ்டிக் கொள்கையை முன்வைத்தார். இவரது இந்தக் கோரிக்கை அப்போதைய ஆட்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்குக் காரணமாக இருந்த கொடிய போர் தவிர்க்கப்பட்டிருக்கும். பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும். அங்கங்களை இழந்து நடைப் பிணங்களாக உலாவுவோரைக் காண முடியாத நிலை உருவாகியிருக்கும். இதை விட மதிப்பிட முடியாத தமிழ் மக்களின் சொத்துக்களை அழிவிலிருந்து காப்பாற்றியிருக்க முடியும். இதற்கும் மேலாக பெரும்பான்மையின மக்களுக்கும், சிறுபான்மையினத் தமிழ் மக்களுக்கும் இடையே தற்போது காணப்படும் பெரும் விரிசலையும் தவிர்த்திருக்க முடியும். சமஷ்டி என்ற வார்த்தையைக் கேட்பதற்குக் கூட தென்னிலங்கை அரசியல் வாதிகள் விரும்பவில்லை. சமஷ்டி என்பது தனிநாட்டுக்குச் சமனானது என்ற வகையில் பெரும்பான்மையின மக்களுக்கு தவறான வியாக்கியானங்கள் வழங்கப்பட்டன. அந்த மக்களும் அவற்றை நம்பினார்கள். இதனால் தமிழர்களுக்கு எதிரான வெறுப்பும் கோபமும் அவர்களின் மனங்களில் குடிகொண்டன. இனக் கலவரங்களின் போது இதனைத் தெளிவாக அவதானிக்க முடிந்தது.

### இனபேதங்களுக்கு அப்பால் அனைவரையும்அரவணைத்தவர்

அண்மையில் மறைந்த உலக மக்களின் தலைவரெனப் போற்றப்படும் நெல்சன் மண்டேலா தமது நாட்டை ஆட்சி செய்த சிறுபான்மையின வெள்ளையர்களால் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். அவர், ஒன்றல்ல, இரண்டல்ல 27 ஆண்டுகள் சிறையில் வாடினார். உடல் இயலாத நிலையிலும் சிறைக் காவலர்களால் கடுமையாக நடத்தப்பட்டார். அவர் விடுதலையாகி தென்னாபிரிக்க நாட்டின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் இனிமேல் அந்த நாட்டில் வாழும் வெள்ளையினத்தவர்களுக்கு அழிவு காலம் தான் எனப் பலரும் எண்ணி யிருந்தனர். ஆனால் மண்டேலா இந்த எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் எதிர் மாறான வகையில் நடந்து கொண் டார். ஒரு வெள்ளையினத்தவர் கூட அவரால் பழிவாங்கப்படவில்லை. அவர்களும் அந்த நாட்டின் குடிமக்களே என அறை கூவல் விடுத்த அவர் அனைவரையும் அரவணைத்துக் கொண்டார்.

ஆனால் எமது நாட்டில் என்ன நடந்தது? என்ன நடந்து கொண்டிருக்கிறது? இதையெல்லாம் நினைக்கவே இதயம் வெடித்துவிடும் போன்றதொரு அச்சவுணர்வு எம்முள் பரவுகின்றது.

இந்தியாவின் மகாத்மா காந்தி தமது அகிம்சைப் போராட்டங்களால் அந்நியரை நாட்டை விட்டுத் துரத்தினார். நெல்சன் மண்டேலா தமது சகிப்புத் தன்மை, மன்னிக்கும் குணம் ஆகியவற்றால் சாதித்துக் காட்டினார். உலகில் உயர்ந்து நின்றார். இவரும் மகாத்மா காந்தியின் கொள்கைகளைப் பெரிதும் மதித்தார். இதனால் கறுப்புக் காந்தியெனவும் அழைக்கப்பட்டார். ஆனால் இன்னுமொரு காந்திய வாதியும், ஈழத்துக் காந்தியென அழைக்கப்பட்டவருமான தந்தை செல்வாவின் அரிய கொள்கைகளை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ் மக்களுக்கு மேன்மேலும் இன்னல்களே ஏற்படுத்தப்பட்டு வந்தன. இந்த நிலையில் இனிமேல் தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் எனச் சொல்வதைத் தவிர வேறொன்றும் அவருக்குத் தெரியவில்லை.


> கடந்த 65 வருடங்களாக இந்த நாட் டில் வாழுகின்ற தமிழர்கள் இன்னல் களையே அனுபவித்து வருகின்றனர். இலங்கை 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டது. ஆனால் தமிழர்களை அடிமைத் தளையில் பிணைக்கும் தினமாகவும் இது அமைந்து விட்டது.

# இலத்திரனியல் விளையாட்டுக்களில் கவனம் செலுத்தும் சிறார்கள்

அருவி

இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும் உலகில் நவீனத்துவத்தின் சிந்தனையும், போக்கும் உறுதியான தடங்களைப் பதித்து வருகின்றன. தொழில்நுட்பம் மனிதவாழ்வின் அனைத்துப் பரிமாணங்களிலும் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறது. இது மனிதனை இயந்திர வட்டத்தில் சேர்க்குமளவுக்கு ஆதிக்கம் பெற்றுள்ளது. விஷேடத்துவமடைந்த உயிரியாக மனிதன் நோக்கப்படுவதற்கு ஆதாரமாக அமையும் உளம், மனம் சார்ந்த இயல்பு நிலைகளிலிருந்து தூரப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறைக்கு தொழில்நுட்பம் மனிதனை இட்டுச் செல்வதை அடுத்தடுத்து உணர முடிகிறது.

மனிதனின் சமூகவாழ்க்கை மிகவும் முக்கியப்படுத்தப்படும் மைற்கல்லாக நோக்கப்படுகிறது. அரிஸ்டோட்டில் மனிதனை சமூகப்பிராணியாக அடையாளப்படுத்துகிறார். இதே போல சமூகவியல் மனிதனை சமூக உயிரியாகவே கணிக்கிறது. மனித வாழ்க்கை சமூகத்தின் அடித்தளத்தோடு இணைந்த சுழற்சி முறையான அமைப்பாகும். மனித இருப்பின் அனைத்து விடயங்களும் சமூகத்தோடு இயைந்த இறுக்கங்களைக் கொண்டிருக்கின்றன. ஒரு குழந்தை பிறந்தது முதல் இறக்கும் வரையான அனைத்து நிகழ்வுகளிலும் சமூகத்தின் உள்வாங்கல் தவிர்க்க முடியாத வகையில் இடம்பெறுகின்றது.



எந்த வீட்டுக்குச் சென்றாலும் சிறுவர் விளையாட்டுக்குரிய உபகரணமாக, கணினி விளையாட்டுக்களே காண்பிக்கப்படுகின்றன.



**விளையாட்டுப் பருவம் முதன்மைப் பகுதி**

இந்த அடிப்படையில் தான், மனித வாழ்வின் நெடுகிலும் சமூகத்துடனான தொடர்பு இருந்து வருகின்றது. ஒரு குழந்தை பிறந்து அவனது சமூகத்தொடர்பு ஆரம்பிக்கும் போது முதன்முதலில் அவன் குடும்பம் சார்ந்த சூழலைக் கற்கிறான். அதன் பின் சமூக அமைப்புக்குள்ளாகும் வகையில் பாடசாலை, அயற்சூழல், நண்பர் குழு, சமயம், விளையாட்டு, பொருளாதாரம், திருமணம் என அவனது தொடர்புகள் விரிவடையத் தொடங்குகின்றன. இந்தத் தன்மையானது, இடைத்தொடர்புடன் கூடிய சிறந்த தொடர்பாடலை வழிவகுத்து வந்துள்ளது. மனித வாழ்க்கையின் மிக முக்கிய பகுதியாக சிறுவயது, விளையாட்டுப்பருவம் கணிக்கப்படுகின்றது. மூதாதையர் காலம் தொட்டே விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். பாரதியார் மாலை முழுவதும் விளையாட்டு என்று உற்சாகமூட்டுகிறார். மாலை வேளைகளைப் பொறுத்தவரையில் விளையாட்டிற்குரிய பொழுதாகவே பெரும்பான்மையாக கணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விளையாட்டு என்பது குறிக்கப்பட்ட இடத்தை பெற்றுள்ள போதும் இன்றைய சூழலில் சிறுவர் விளையாட்டுக்களை நோக்கும் போது அவை ஆரோக்கியமான கருத்தை கொண்டிருக்கவில்லை.

**ஊமை விளையாட்டுக்களோடு காலம் கழிக்கும் சிறுவர்கள்**

இன்றைய சிறுவர்களுக்கு விளையாட்டுக்கள் என்றால் TV Games, Internet Computer Games, இது போன்ற இயக்கு விளையாட்டுக்கள் மாத்திரமே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சிறுவர்கள் தமது ஓய்வு நேரத்தை, விளையாட்டுக்குரிய பொழுதை இத்தகைய விளையாட்டுக்கள் ஊடாகவே கழிக்கும் நிலையை காண்கின்றோம். உண்மையில் விளையாட்டு என்பது உடல், உளம், மூளை மூன்றையும் ஒருமுகப்படுத்துவது மட்டுமன்றி, நெருக்கீட்டைத் தளர்த்துவதாயும், உடல் ஆரோக்கியத்தை தூண்டுவதாயும் அமைய வேண்டும்.

ஆனால் இன்றைய பொழுதில் விளையாட்டுக்கள் மனித மூளைச் சலவையை மேற்கொள்ளும் ஒரு திணிக்கப்பட்ட நெருக்கீட்டையே அளிக்கிறது என்று கூறலாம். நாம் விளையாடிய விளையாட்டுக்களையும், இன்றைய சிறுவர்களின் விளையாட்டுக்களையும் ஒப்புநோக்கும் போது காலத்தை நொந்துகொள்ளத் தோன்றுகிறது. இயற்கைச்சூழலில், அயலிலுள்ள பெரும் சிறுவர் பட்டாளத்தோடு, மனம் நிறைய மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும், குதூகலித்து விளையாடிய அந்தப் பொழுதுகளும் இன்றைய சூழலில் அடைபட்ட அறைக்குள் இயந்திரத்தோடு மட்டுமே பேசிக்கொள்ளும் ஊமை உறவு விளையாட்டுக்களைக் குறை கூறுவதா, தொழில்நுட்பத்தை திட்டித் தீர்ப்பதா என்று புரியாத தன்மையை உருவாக்கியுள்ளது.


**விளையாட்டுக்கள் ஆரோக்கியத்துக்கான ஊட்டம்**

எந்த வீட்டுக்குச் சென்றாலும் சிறுவர்கள் கணினி விளையாட்டுக்களில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. இந்த விளையாட்டுக்கள் எந்தளவு குழந்தைகளின் உள விருத்தியில், சமூக விருத்தியில், தொடர்பாடல் அபிவிருத்தியை ஏற்படுத்துகின்றன என்பது கேள்விக் குறியான அம்ச மாகவே உள்ளது. பல்லாங்குழி, மாபிள் அடித்தல், தெத்தியாட்டம், மாங்கொட்டை விளையாட்டு, சூழலிலுள்ள பொருள்களை சொல் லிக் கண்டுபிடித்தல், சூழலில் இருந்து கிடைக்கும் தாவரங்களிலிருந்து நிறம் பெறுதல், எண்ணெய் வடித்தல் இப்படி எவ்வளவோ ஆரோக்கியமான விளையாட்டுக்களை நாம் மறந்துவிட்டோம். மறக்கடிக்கப்பட்டு விட்டோம். விளையாட்டுக்கள் என்பது ஆரோக்கியத்திற்குரிய ஊட்டம். இது போன்ற விளையாட்டுக்கள் உடல், உள ஆரோக்கியத்தைத் தூண்டக்கூடியவை. ஆனால் இன்றைய காலகட்டத்தில் இத்தகைய விளையாட்டுக்கள் வெறும் கிராமிய விளையாட்டுக்களாக அடையாளப்படுத்தப்பட்டு விஷேட தினங்களில் உயிர் கொடுக்கப்படும் நிகழ்வுகளாகவே கணிக்கப்படுகின்றன.

மேகங்களைக் கண்டு உருவங்களை வார்ப்பதும், கற்பனைக் காட்சிகளை அடையாளப்படுத்துவதுமாகக் கழிந்த எமது சிறுவயது சந்தோஷங்களை இன்றைய சிறுவர்கள் இழந்து விட்டார்கள். உள ரீதியான விருத்திக்குரிய விளையாட்டுக்களும், தற்போதைய வளரிளம் சமுதாயத்துக்கு வழங்கப்படாத ஆதங்கம் ஆங்காங்கே பேசப்பட்டு வருகின்றது.

ஆரோக்கியம் தேடலில் முழுமூச்சாக இன்றைய சமுதாயம் அதனை ஆரம்பகட்டத்திலிருந்தே பழக்கப்படுத்த மறந்துவிட்டது. ஆரோக்கியம் என்பது வயது முதிர்ந்த நிலைக்கான தேடலல்ல. மாறாக ஒரு குழந்தையை எவ்வாறு ஆரம்பக் கட்டத்திலிருந்து தட்டிக்கொடுக்கிறோமோ அந்தக்காலத்திலிருந்தே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எனவே, இயந்திரமயமாகிக் கொண்டு வரும் வாழ்க்கையில் வளர்ந்து வரும் எமது இளம் தலைமுறையினரை ஆரம்பத்திலிருந்தே உடல், உள ஆரோக்கியம் கொண்டவர்களாக மாற்றுவதற்கான மாற்றீட்டு முறைகளைக் கையாள்வோம். விளையாட்டு நேரத்தில் கணினி விளையாட்டுக்களைத் தவிர்த்து உயிரோட்டமான, இடைத்தொடர்புகளை விருத்தி செய்யக்கூடிய, சமுதாயக் கூட்டுணர்வை ஏற்படுத்தக்கூடிய விளையாட்டுக்களுக்கு மீண்டும் உயிர் கொடுப்போம். எம் சிறார்களை இயந்திரத்தோடு ஊமை உறவாடுபவர்களாக அன்றி, சமூக சிந்தனை உள்ளவர்களாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்வோம்.



**மேகங்களைக் கண்டு உருவங்களை வார்ப்பதும், கற்பனைக் காட்சிகளை அடையாளப்படுத்துவதுமாகக் கழிந்த எம் சிறுவயதுச் சந்தோஷங்களை இன்றைய சிறுவர்கள் இழந்து விட்டார்கள்.**

# பிரச்சினைகளைக் கண்டு அஞ்சாதீர்கள் ...

ஒவ்வொருவருக்கும் நிறைய விடயங்கள் பிரச்சினையாகவோ, அன்றேல், சிக்கலாகவோ இருக்கலாம். ஆனால் அவற்றைப் போக்கச் சில முறைகளைக் கையாண்டால் நிச்சயம் நீங்கள்தான் வெற்றியாளராக இருப்பீர்கள்.

**சாதனையாளர்களைப் பின்பற்றுவோம்**

சாதனையாளர்கள் எல்லோருமே சாதனையாளர்களாகவே பிறப்பதில்லை. அவர்களும் எத்தனையோ தோல்விகளையும், அவமானங்களையும் சந்தித்துத்தான் சாதனையாளர்களாக உருமாறுகிறார்கள். எனவே, நீங்கள் அடையும் ஒவ்வொரு தோல்விகளையும், சறுக்கல்களையும் ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**தவறை ஒப்புக் கொள்வோம்..**

நண்பர்களுக்குள்ளோ, உறவினர்களுக்குள்ளோ, தம்பதிகளுக்குள்ளோ எந்த விதமான சண்டையோ கருத்து வேறுபாடோ ஏற்பட்டால், அது பெரிய பிளவை ஏற்படுத்த விடாமல் தடுக்க வேண்டியது அவசியம். பல நேரங்களில் நாம் அதனைத் தடுக்காமல் விட்டுவிடுகிறோம். தவறு என் பக்கம் இருந்தால் மன்னித்துவிடு என்று பிரச்னையை அதோடு நிறுத்திவிடுங்கள். மன்னிப்புக்கேட்பது மட்டும் நீங்களாக இருக்கமாட்டீர்கள், உறவிலும், அன்பிலும் வெற்றி பெறுவதும் நீங்களாகவே இருப்பீர்கள்.

**வடிகாலை ஏற்படுத்திக் கொள்வோம்**

பொதுவாக ஏதேனும் பிரச்சினையில் இருக்கும்போது அதனை மற்றவரிடம் கூறுவதால் அவர்கள் மன நிம்மதி அடைகின்றனர். இது பலவீனமல்ல. பலம்தான். இதனால், அவர்கள் ஒரு பிரச்சினையை சரியாக அணுக வழிவகை செய்கிறது. எனவே, நமக்கே நமக்கு என்று ஒரு வடிகாலை, சரியான தோழியை, நண்பரைப் பெற்றுக் கொள்வோம். எதையும் மனம் திறந்து ஒருவரிடம் பேசும் போது நமது குற்றம் குறைகளை நாமே உணர வழி ஏற்படும்.

**மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிப்போம்..**

பொதுவாக ஒருவரை நாம் புரிந்து கொள்ளாமல் போவதற்கு, அவர்கள் மீதான வெறுப்புத்தான் காரணமாக இருக்கும், அவர்களை வெறுக்கக் காரணமே அவர்களை நாம் புரிந்து கொள்ளாமல் போவதுதான். எனவே, நம்மைச் சுற்றியுள்ளவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்போம். அவர்கள் நிலையில் இருந்து ஒரு பிரச்சினையை ஆராய்ந்து பார்க்க முயற்சிக்க வேண்டும். இதுவே ஒரு பிரச்சினையை எளிதாகக் கையாள சரியான வழியாக இருக்கும்.

**பிரச்சினையில் இருந்து வெளியே வந்து சிந்திப்போம்**

ஒரு பிரச்சினைக்கு அதன் உள்ளேயே தீர்வு இருக்கிறது. ஆனால், பிரச்சினைக்கு உள்ளேயே இருந்து கொண்டு நாம் தீர்வைத் தேடக் கூடாது. அதை விட்டு வெளியே வந்து அதற்கான தீர்வைத் தேடினால் விரைவில் அதனைத் தீர்த்து விடலாம். எனவே, ஏதேனும் ஒரு மனக் குழப்பம் ஏற்பட்டால், உடனடியாக அதைப் பற்றியே சிந்தித்து மூளை குழம்பிப் போகாமல், அதில் இருந்து விடுபட்டு, சிறிது ஓய்வு எடுத்துவிட்டு பிறகு அதைப் பற்றி அமைதியாகச் சிந்தியுங்கள். உடனடியாக ஓர் ஆலோசனை தோன்றும். அதனைச் செயற்படுத்தினால் வெற்றி நிச்சயம்.



## உங்களுக்கு இன்றைய நாள் எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** தைரியமாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். பயணங்கள் மகிழ்ச்சியைத் தரும்.

**இடபம்:** எதிர்பாராத சந்திப்பு நிகழும். நட்பு வட்டம் விரியும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**மிதுனம்:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். சின்னச் சின்னப் பிரச்சினைகள் தலைத்தூக்கும். உத்தியோகத்தில் வேலைப் பளுவால் சோர்வடைவீர்கள்.

**கடகம்** : திட்டமிட்ட காரியங்கள் தாமதமாக முடியும். எதிர்மறை எண்ணங்கள் வரக்கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**சிங்கம்**:எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். பெற்றோரின் ஆதரவுப் அதிகரிக்கும். நம்பிக்கைக்குரியவர்களை ஆலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

**கன்னி:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**துலாம்:** நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** அநாவசிய பேச்சைத் தவிர்ப்பது நல்லது. விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்குழ்.

**தனுசு:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சியைத் தரும்.

**மகரம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

**கும்பம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்கு உரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சியைத் தரும்.

**மீனம்:** நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். அரச காரியங்கள் விரைந்து முடியும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.


# நிம்மதி சாத்தியம்

1. அழகு வருகிறது. திருப்தி வருகிறது. நிறைவு வருகிறது. உங்கள் வேலை அவை உங்கள் வீட்டைவிட்டுப் போகாமல் அவற்றை நிலை பெறச் செய்வதுதான். ஒரு தேனீயைக் கவரவேண்டுமென்றால் சர்க்கரை நீரை அல்லது ஏதாவது இனிப்பானதை வெளியே வையுங்கள். அமைதியைக் கவர வேண்டுமென்றால், விழிப்புணர்வின் முழுக் கவர்ச்சியையும் வெளியே வையுங்கள்.
2. அமைதி உங்கள் உள்ளே உள்ள ஒரு விளக்கு. புரிந்துணர்வின் விளக்கு. தெளிவின் விளக்கு. ஞானத்தின் விளக்கு. இருளை நீக்கும் சக்தியுடைய விளக்கு. ஞானம், அதுதான் அறிவதறிவது; ஊகிப்பதல்ல: விவாதிப்பதல்ல.
3. நான் உங்களிடம் ஒரு விடயம் சொல்கிறேன், உள்ளே சென்றவர்கள் எல்லோரும் மக்களுக்கு ஒரு அறைகூவல் விடுத்திருக்கிறார்கள். நீங்கள் இங்கே சென்று பாருங்கள். ஏனெனில் வீடு போல வேறெந்த இடமும் கிடையாது. அதுதான் உங்கள் வீடு. அது உண்மையாக இருப்பதால் அது வேலை செய்கிறது. சிறைக் கம்பிகளின் உள்ளேகூட அது ஒரு வெளித்தோற்றம் மட்டுமே. மனிதன் மனிதன்தான். மனிதர்கள் உயிர்வாழும்வரை விலைமதிக்கத் தக்க ஒன்று அவர்களுக்கு கிடைக்க முடியுமா?
4. இதயம் தான் அந்தக் குரல். அந்த அழைப்பு; அது சொல்கிறது. நிறைவைப் பெற்றுக் கொள். இந்தத் தாகத்தைத் தணித்துக் கொள். விழிப்புணர்வோடு வாழ். இந்த மூச்சுக் கொண்டு வரும் முழுவதையும் உன்னால் முடிந்தவரை பிழிந்தெடுத்துக் கொள்.
5. நம்பிக்கை கொள்வது சுலபம். நீங்கள் இஷ்டம் போல் எதை வேண்டுமானாலும் நம்பலாம். குறிப்பிட்ட விடயத்தைத்தான் அறிய முடியும். நீங்கள் எதை வேண்டுமானலும் அறிய முடியாது. எது உள்ளதோ, அதை மட்டும்தான் அறிய முடியும். எது உள்ளது? இந்த அழகான மூச்சு; இந்த அழகான உயிர் வாழ்க்கை.
6. உங்கள் புரிந்துணர்வின் நிலத்தைத் தயார் செய்யுங்கள். பிறகு உங்களுடைய இந்த வாழ்க்கையை எடுத்து அதில் விதையுங்கள். அதில் அறிவது என்ற நீரைப் பாய்ச்சுங்கள். நம்புவது அல்ல அறிவது. அதற்கு தெளிவின் வெளிச்சத்தைக் கொடுங்கள். அந்த விதை மலர்வதைப் பாருங்கள். அந்த மலர்ச்சி தான் "நிம்மதி" என்று அழைக்கப்படுகிறது.
7. நீ எங்கிருந்தாலும் அந்தத் தெய்வீகமும் அங்கே உள்ளது. அந்தத் தெய்வீகத்திலிருந்து நீ விலகிப் போவதற்கு இந்த அறிந்த, மற்றும் அறியாத பிரபஞ்சத்தில் எந்த இடமும் கிடையாது.

பிரேம் ராவத்

## ஸ்டெம் செல்களிலிருந்து சிறுநீரகம்

### ஆஸி விஞ்ஞானிகள் தெரிவிப்பு



ஸ்டெம் செல்களிலிருந்து சிறுநீரகத்தை உருவாக்கியுள்ளதாக ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இது சிறுநீரக நோய் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு மிகப்பெரிய தீர்வாக அமையும். மேலும், சிறுநீரகப் பாதிப்பால் உயிரிழக்கும் ஆயிரக்கணக்கானோருக்கு மறுவாழ்வு அளிக்கும் அற்புதமான கண்டுபிடிப்பாக இது கருதப்படுகிறது. இதுகுறித்து குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியியல் ஆய்வு நிறுவனப் பேராசிரியர் மெலிஸா லிட்டில் கூறியதாவது: ஸ்டெம் செல்கள் தம்மைத்தாமே சிறிய வடிவிலான சிறுநீரகமாக மாற்றிக் கொள்ளும் வகையிலான தொழில்நுட்பத்தை எங்களது குழு கண்டு பிடித்துள்ளது.

இந்தச் சுய அமைப்பின்போது பல்வேறு வகையான செல்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து ஒரு முக்கியமான உறுப்பாகத் தங்களைத் தாங்களே மாற்றிக் கொள்ளும். இந்த ஆராய்ச்சியில் 'அவை தங்களைச் சிறுநீரகமாக மாற்றிக் கொள்கின்றன. ஆய்வகச் சோதனைகளின் போது ஸ்டெம் செல்கள் இதுபோல தங்களை சுய வடிவமைப்பு செய்து கொள்ளுமேயானால் சேதமடைந்த மற்றும் பாதிக்கப்பட்ட உறுப்புகளையும் திசுக்களையும் திசு உயிரியியல் துறை மூலம் எதிர்காலத்தில் மாற்றி அமைக்க முடியும்.

மருந்துகளால் மனிதனின் சிறுநீரகம், இருதயம், கல்லீரல் ஆகிய மூன்று உறுப்புகள் அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றன. இதில் எந்த மருந்து சிறுநீரகத்தைப் பாதிக்கிறது என்பதை இந்த ஸ்டெம் செல்களிலிருந்து உருவாக்கப்பட்ட சிறுநீரகம் மூலம் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்து விடலாம். இதனால் தேவை யற்ற செலவுகள் தவிர்க்கப்படும். சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகும் நோயாளிகளில் நான்கு பேரில் ஒருவர் மட்டுமே உறுப்பைத் தானமாகப் பெறுகிறார். இதற்கும் ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் உள்ளன. மற்றவர்கள் ரத்தச் சுத்திகரிப்பு செய்கின்றனர். இந்தச் சிக்கலான சூழ்நிலையிலிருந்து நோயாளிகளை மீட்க வேண்டும் என்பதே எங்களது எண்ணம் என்று மெலிஸா லிட்டில் கூறினார்.

குயின்ஸ்லாந்து அறிவியல் துறை அமைச்சர் அயன் வாக்கர் கூறுகையில், மூலக்கூறு உயிரியியல் ஆய்வு நிறுவனக் குழுவின் கண்டுபிடிப்பு சிறுநீரக மருத்துவத் துறையில் ஒரு மைல் கல்லாகும்' என்றார்.

**நாளை**

மார்கழி-05
வெள்ளிக்கிழமை 20.12.2013
திதி: திருதியை மு.இ.09.04 வரை
நட்சத்திரம்: புநர்பூசம்
கா.06.29 வரை
சுபநேரம்:
06.24- 07.54 வரை
இராகுகாலம்:10.54 -12.24 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 7 | 5 | 8 | 1 |
| | | | 8 | | 2 | | | 6 |
| 8 | | 3 | 5 | | | | 7 | |
| 5 | 8 | | | 2 | | 3 | | |
| 7 | 3 | | | | | | 2 | 9 |
| | | 4 | | 8 | | | 1 | 5 |
| | 9 | | | | 3 | 2 | | 8 |
| 3 | | | 6 | | 4 | | | |
| 1 | 5 | 7 | 2 | | | | | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 2 | 1 | 6 | 4 | 7 | 9 | 3 |
| 6 | 1 | 7 | 9 | 2 | 3 | 5 | 4 | 8 |
| 9 | 4 | 3 | 7 | 5 | 8 | 1 | 6 | 2 |
| 4 | 6 | 1 | 5 | 9 | 2 | 8 | 3 | 7 |
| 3 | 9 | 5 | 8 | 7 | 6 | 2 | 1 | 4 |
| 2 | 7 | 8 | 3 | 4 | 1 | 9 | 5 | 6 |
| 8 | 2 | 9 | 4 | 3 | 5 | 6 | 7 | 1 |
| 7 | 3 | 6 | 2 | 1 | 9 | 4 | 8 | 5 |
| 1 | 5 | 4 | 6 | 8 | 7 | 3 | 2 | 9 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகாலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இலட்சியத்துக்காக....



வாழும் நாள்கள் குறைந்து வர
வாழ் நாள்கள் வீணே கரைகின்றன
கண்மூடித் திறப்பதற்குள்
வான் தொடும் பல சாதனைகள்
சிறகு விரிக்கின்றன
பிறகும் ஏன் தாமதம்?
மனித அடிச்சுவடுகள்
மாண்பு மிகு சாதனைகள் படைக்க...
சுவரைக் கடக்க சுவடுகள்
அவதானமாக வைத்திட வேண்டும்
கடக்கும் சுவடுகளை வழியில்-
கிடக்கும் முள்கள் பதம் பார்க்கத்தான் செய்யும்
வலி தாங்க முடியாமல்
விழுந்து விடுகின்றன சில இதயங்கள்
எழுந்து நடக்கட்டும் அவைகள்
வேதனைகள்தான் உனக்கு
சாதனைகள் மனிதா!
உன் இதயக் கீறல்களில்
உறுதியெனும்
குருதி சிந்தட்டும்
கடந்து செல்
உன் சாதனைகள் நோக்கி
சாதனைக்கு வேதனைகள் - பெரும்
போதனைகளல்ல
வெற்றியின் போதனைகள்- உன்
பாதச் சுவடுகளின் கீறல்கள்

*த. குணாஜினி,*
*யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.*

# தீமை தரும்

## முகப்புத்தக பாவனை



இன்றைய உலகம் பல்வேறு கட்டங்களாக வளர்ச்சி அடைந்தாலும், மறுபுறம் உலக கலாசாரத்தைச் சீர்கெடுக்கும் முகமாக இந்த முகப்புத்தகப் பாவனை இன்று சிறுவர் தொடக்கம் இளைஞர் வரையில் கையில் தவழும் ஒன்றாகவே காணப்படுகிறது.

சிறுவர் மத்தியிலே பிரபல்யமான இந்த முகப்புத்தகம், இவர்களது வாழ்க் கைக் காலத்தில் புத்தகங்களைப் படித்து வாழ்க் கையில் முன்னேற்றம் காண்பதற்குப் பதிலாக முகப் புத்தகத்தைப் பயன்படுத்தி கல்வி வாழ்க்கையை வீணடித்துக் கொள் ளவே வழி வகுக்கின்றது.

இதன் மூலம் அவர்களது வாழ்க்கை பல்வேறு கட்டங்களில் வீழ்ச்சி அடைந்து கொண்டே செல்கின்றது. இந்த முகப்புத்தகம் வைத்திருத்தல் என்பது இன்று மாணவர் கள் மத்தியில் ஒரு கௌரவப் பிரச்சினை யாகவே காணப் படுகின்றது.

இதனால் கஷ்டப்பட்ட குடும்பத்தில் வாழ் கின்ற ஒரு பிள்ளை முகப்புத்தக பாவனைக் காக ஒரு கைபேசியோ அல்லது கணி னியோ வாங்கித் தர வேண்டும் என பிடி வாதம் பிடிப்பதால் பெற்றோர் களும் பிள்ளைதானே கேட்கிறது என்பதால் வாங்கிக் கொடுத்து விடுவார்கள். இத னால் இந்தப் பிள்ளையின் கல்வி வீழ்ச்சி யடைந்து கொண்டே செல்கிறது. எனவே உலகெங்கிலும் முகப்புத்தகப் பாவனை தீமையையே ஏற்படுத்துகின்றது.

***அகல்யா, யா/ இந்து மகளிர் கல்லூரி.***

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

மாணவர்கள் உயர்கல்வித்துறையை தாமாகத் தெரிவு செய்வது

**நன்மையா?**
**தீமையா?**

உங்கள் காரணங் களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட் டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களை யும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-......................................................

முகவரி :-......................................................

......................................................


.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விலாசம்

நிலவைப் போல்
நீ தொலைவில் இருந்தாலும்
உன் நினைவுகள்
அருகில் இருந்தும்
என் காதலை மறந்து விட்டாயா?
உன் மீது கொண்ட காதலுக்காக
காகிதப் பேப்பர் கூட
கவிதையால் நனைகின்றது
நீ வரம் ஒன்றை பரிசளிப்பாய் என
நினைத்தேன் ஆனால்
உன் பிரிவை பரிசளித்து - என்னை
தனிமையில் விட்டாயே
நான் இப்போது கண்ணிழந்து
உணர்வுகளை
இழந்து தனிமையில் பிரிவு
என்று வலிகளில் உனக்காக
வாழ்கிறேன்....

கு. மதுர்சிகா, புத்தூர்,
மேற்கு, மருதடி.




## காத்திருந்தேன்.....

நீ இல்லாத நொடிகள்
மனதெங்கும் வலிகள்....

நீ என் உயிரிலும் - நான்
உன் உயிரிலும்- கலப்பதற்கு
மூச்சுக் காற்றை
அனுப்பினேன் தூது
வழியில் என்ன நேர்ந்ததோ..?
தெரியவில்லை...
இன்னும் பதில் வரவில்லை

உன் நிழலின் நிஜத்தை
தொடுவதற்கு ஏக்கத்துடனும்
பல கனவுகளுடனும்
காத்திருந்தேன்... இன்றும்
காத்துக்கிடக்கிறேன்



*சிந்து சிவதாஸ், சுதுமலை தெற்கு.*

## சொல்ல முடியவில்லையே....



அனைத்தையும் சொல்லும்
அன்னையிடம் கூட
சொல்லமுடியவில்லை
என் வலிகளை....
உயிராகப் பழகும்
தோழிகளிடம் கூட
சொல்லமுடியவில்லை
என் வேதனைகளை...
ஆறுதல் தரும்
கவிதைகளில் கூட
சொல்லமுடியவில்லை
என் கண்ணீரை.....

*மு. வேணுஹா,*
*வடமராட்சி மத்திய மகா வித்தியாலயம்.*

## அம்மா....

அன்புக்கு அம்மா நீ - என்
சொல்லுக்கு சொந்தம்
பண்புக்குள் பாசம் நீ - என்
நெஞ்சுக்குச் நேசம்
கண்ணுக்குள் தாய் தான் - அவள்
என் கண்ணையே காப்பாள்.



*எஸ். விஜயதாரணி*

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்
தலைமைக் காரியாலயம்

திறப்பு விழா

இடம்: கார்கில்ஸ் சதுக்கம் (முதலாம் மாடி)
530, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் சொந்த வளாகம்)
காலம்:நாளை(20.12.2013) வெள்ளிக்கிழமை
நேரம்: பிற்பகல் 1.00 மணி
பங்குதாரர்கள், முன்னைநாள் ஊழியர்கள்,
நலன்விரும்பிகள் அனைவரையும்
கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்
530, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(42751)(7.6.3)

நிர்வாக முகாமையாளரும்
இயக்குநர் சபையினரும்

வலி கிழக்கு தென் பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

பதவி வெற்றிடம்

**01.பதவி-கிளை முகாமையாளர்**
சம்பள குறியீட்டு இல:208/15(165/88)
சம்பள அளவுத்திட்டம்: 9450 (75X 10-80 X 10)11000
(66/2006 இன் படி)
வயதெல்லை: 18-45
பால்: ஆண்/பெண்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
அ) கூட்டுறவுப்பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது
ஆ)கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரணம்) கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**02.பதவி-எழுதுனர்**
சம்பள குறியீட்டு இல:302/14(165/88)
சம்பள அளவுத்திட்டம்: 9700 (80X10-85X10)11350
(66/2006 இன் படி)
வயதெல்லை: 18-45
பால்: ஆண்/பெண்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
அ) கூட்டுறவுப்பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது கூட்டுறவுப்பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது
ஆ)க.பொ.த.(சாதாரணம்) கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தியுடன்06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**03.பதவி-விற்பனை உதவியாளர்**
சம்பள குறியீட்டு இல:308/15(165/88)
சம்பள அளவுத்திட்டம்: 9450 (75X10-80X10)11000
(66/2006 இன் படி)
வயதெல்லை: 18-45
பால்: ஆண்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
அ)கூட்டுறவுப்பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்ட விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது
ஆ)கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரணம்) எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 30.12.2013**
* விண்ணப்பப்படிவத்தினை ரூபா.10/= செலுத்தி தலைமைக் கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.
* விண்ணப்பப்படிவத்துடன் பிறப்பு சான்றிதழ், கல்விச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.
* தபால் உறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.
* கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.
* கூட்டுறவுச்சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**
"பொது முகாமையாளர்,
வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்
நீர்வேலி"
(13.12.2013 ஆம் திகதிய இயக்குநர் சபை தீர்மானப்படி)

18.12.2013
(சி/10364)(3.6.4)

பொது முகாமையாளர்,
வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.

## எமக்குள்ளே ஆன்மிகத் தன்மை மாற்றத்தை எவ்வாறு நிறைவு செய்யலாம்?

சுவாமிகளது தெய்வீக சொற்பொழிவுகளிலே நாம் செவிமடுத்த பல விடயங்களுள் ஒரு சிலவற்றையாவது முறையாகச் செயற்படுத்தி வந்தால்தான் எமக்குள் ஆன்மிகத் தன்மை மாற்றத்தை நிறைவு செய்யலாம்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

## அதிபர் வெற்றிடத்தை நிரப்பக் கோரிக்கை

தென்மராட்சி, டிசெ.19
மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் வெற்றிடமாகக் காணப்படும் அதிபர் பதவியை நிரப்பக் கோருமாறு சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் அ.பாலமயூரனால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.
வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர் த.அம்பலவாணர் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகியும் நிரந்தர அதிபர் நியமிக்கப்படாததால் உப அதிபரே பதில் கடமையாற்றுவதாகவும் அதிபர் பதவியை நிரப்ப நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.
இந்த விடயம் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்புகொள்வதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## 2014 க்கான ஆதன வரி அறிவித்தல் வரியிறுப்பாளருக்கு விநியோகம்

தென்மராட்சி, டிசெ.19
சாவகச்சேரி நகர சபையினரால் அடுத்த வருடத்துக்கான கணினி மயப்படுத்தப்பட்ட ஆதன வரி அறிவித்தல்கள் வரியிறுப்பாளர்களுக்கு வரி அறவிடும் உத்தியோகத்தர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.
அறிவித்தல் ஆதனத்தின் வருடாந்தப் பெறுமதி, செலுத்த வேண்டிய கட்டணம் போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கட்டணங்களை நான்கு கந்தாயங்களாகச் செலுத்த முடியும் என்றும், எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் வருடத்துக்குரிய முழு வரியையும் செலுத்தினால் பத்து வீத கழிவும் நான்கு கந்தாயங்களுக்கும் முதல்வரும் மாதத்தில் அந்தந்த கந்தாயங்களுக்குரிய வரியைச் செலுத்தினால் ஐந்து வீத கழிவும் வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஆதன வரி தொடர்பான ஆட்சேபனைகளை ஒவ்வொரு ஆதனத்துக்கும் தனித்தனியாக எழுதி ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(வ-9)

## வலி.வடக்கு பிரதேச சபை ; 'பட்ஜெட்' நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 19
வலி. வடக்குப் பிரதேச சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் கடந்த 11 ஆம் திகதி வரையில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த வாரம் சபை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வரவு - செலவுத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதென உறுப்பினர் சா.தங்கராசா முன்மொழிய, உறுப்பினர் மா.கதிரமலைப்பிள்ளை வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (வ்-5)

## வர்த்தகர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.19
யாழ். மாவட்டத்தில் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் நிதிப் பிரச்சினைகளும் அதற்கு சாத்தியமான தீர்வுகளும் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். வணிகர் கழக பணிமனையில் நடைபெறவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் அரச மற்றும் தனியார் வங்கிகளின் அதிகாரிகள் மற்றும் மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-14)

## உயிரியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.19
ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கான உயிரியல் பாடம் தொடர்பான கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் நண் பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.
கருத்தரங்கில் சப்ரகமுவ பல்கலைக்கழக, சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் இனோகா 'உயிர் பல்வகைமை' குறித்து கருத்துரை வழங்கவுள்ளார்.
எனவே உயிரியல் பாடத்துக்குத் தோற்றவுள்ள மாணவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு தொண்டமானாறு வெளிக்கள நிலையம் கேட்டுள்ளது. (வ)

## கலை அரங்கு திறப்பு நிகழ்வு

தென்மராட்சி, டிசெ.19
அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் நுணாவில் தேவாலய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட கலை அரங்க திறப்பு விழாவும் நத்தார் இன்னிசை ஆராதனையும் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு இடம்பெறும்.
தேவாலய போதகர் வண பீ.தேவராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக திருச்சபைத் தலைவர் வண. ஈனோக் புனிதராஜா, சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

## சந்தேக நபர்கள் 18 பேருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

*நானாட்டான் தாக்குதல் சம்பவம் தொடர்பானது*

மன்னார், டிசெ.19
மன்னார் நானாட்டான் பிரதேச செயலகம் மீது தாக்குதல் மேற்கொண்டதாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 18 பேரையும் தொடர்ந்து எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நேற்று புதன் கிழமை உத்தரவிட்டார்.
நானாட்டான் பிரதேச செயலகம் மீது கடந்த 9 ஆம் திகதி தாக்குதல் மேற்கொண்ட தாகக் கூறிப் பொன்தீவுக் கண்டல் கிராமத்தைச் சேர்ந்த 65 பேரை முருங்கன் பொலிஸார் கைது செய்து கடந்த 15 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.
இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட பதில் நீதிவான் இ.கயஸ் பல்டானோ இந்தப் 18 பேரையும் நேற்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு ஏனைய 47 பேரையும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.
இந்த நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 18 பேரும் நேற்றைய தினம் புதன் கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் அவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.
பிணையில் விடுதலை செய்யப்பட்ட 47 பேரும் மன்றில் முன்னிலையாகி இருந்த நிலையில் அவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி மீண்டும் மன்றில் முன்னிலையாகுமாறு நீதிவான் உத்தர விட்டார்.
கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் உட்பட சட்டத் தரணிகளான பிரிலூஷ் சிறாய்வா, ஜோன்தாசன் துசித், எஸ்.ஜெபநேசன் லோகு ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். (க-12)

## தென்மராட்சி பிரதேச கிராம, மாதர் சங்கப் பிரதிநிதிகளுக்கு

தென்மராட்சி, டிசெ. 19
தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறும். கூட்டத்தில் 2014 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் ஒப்பந்த வேலைகள், வாழ்வாதாரக் கடன் திட்டங்கள், சங்கங்களின் சமாச செயற்பாடுகள் உட்படப் பல விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரில் எவராவது இருவர் வீதம் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் தங்கள் அமைப்பின் தேவைப்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கும் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றை அறிக்கையாகத் தயாரித்து பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலரிடம் கையளிக்குமாறும் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## வரணியில் அட்டூழியம்

வரணி, கரம்பைக் குறிச்சிப் பகுதி வீடொன்றில் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாதோர் அங்கிருந்த 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை அடித்து நொறுக்கி விட்டுச் சென்றுள்ளனர்.
இது தொடர்பாக வீட்டின் உரிமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (வ-9)

**கண்ணீர் அஞ்சலி**



இலங்கை வங்கி, திருநெல்வேலிக் கிளையில் பணிபுரியும் உத்தியோகத்தரான க. கஜீரன் அவர்களின் அன்புத் தந்தை

**கிருஸ்ணர் கமலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வ தோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
இலங்கை வங்கி, திருநெல்வேலி.
(42737) (7.8.3)

**இதய அர்ச்சனை**



சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜக்குருக்கள்
(பிரதம குரு - தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன்)
எமது ஆலயத்துக்கு ஆன்மீக ஒளியை நிறைவாகத் தந்த என்றும் எம்மதிப்பிற்கும் வணக்கத்துக்கும் உரிய
சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜக்குருக்கள்
ஐயா அவர்கள் சிவப்பேறு அடைந்தமையிட்டு, அவர்களை வணங்கி, எம் இதயக்கமலத்தால் அர்ச்சிக்கின்றோம்.

ஆலய நிர்வாகத்தினர்,
தொல்புரம் உடையார்வளவு சக்தி அம்பாள் தேவஸ்தானம்,
தொல்புரம் மேற்கு, தொல்புரம்.
(2.6.3)(42740)

**ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**

"கலைமாமணி" அண்ணாமலை மகாதேவன்
[இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், ஓவியர் - London Kensington Hons. Cert in Drawing
"அன்றொருநாள்" ஓரங்கச் சமூக நாடகப்புகழ் பிரபல நாடக இயக்குநர், தயாரிப்பாளர் - மதீஸ் புறொடக்சன்ஸ் மற்றும் ஸ்ரீ லக்ஷ்மீஸ் புறொடக்சன்ஸ், இசையமைப்பாளர், பரத நாட்டியக்கலைஞர்]



அன்னையிடம் 07.12.1930
அரனிடம் 14.12.2008

என்னையே அளித்தேன் கலைக்கே!
என்னுயிர் நிறைவே மலைக்கே!
பிற உயிர் வாழ்த்தினேன் சிலைக்கே!
என்னுயிர் வாழும் கலைக்கே!
என்ற தங்கள் பாடலுக்கு ஏற்றவாறு வாழ்ந்தீர்கள்.

"லக்ஷ்மி", வதிரி,
கரவெட்டி.
(42674)(12.3.6)
என்றும் தங்கள் நினைவுகளுடன் வாழும்:
குடும்பத்தினர்.

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**



அமரர் தம்பிப்பிள்ளை இராசரத்தினம்

அன்னை மடியில் 22.10.1921
இறைவன் அடியில் 19.11.2013

*எத்தனை பிறப்பு எடுத்தாலும் உங்கள் பாச நினைவுகள் எங்களைவிட்டு என்றுமே அகலாது*

கடந்த 19.11.2013 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்ப தெய்வம் தம்பிப்பிள்ளை இராசரத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (19.12.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அவரின் பிரிவுத்துயரில் பங்குகொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும், பலவித உதவி புரிந்தோருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
குடும்பத்தினர்
021 320 2924
(சி/10334) (7.6.3)

# கலை விழா

கொழும்பில் 11 வருட காலமாக இயங்கி வரும் நடேஸ்வராலயா நுண்கலைக் கல்லூரி தனது கிளை நிறுவனத்தை கடந்த ஜனவரி மாதம் மானிப் பாயில் ஆரம்பித்து இயக்கி வருகிறது.
இதன் முதலாவது வருடாந்தக் கலை விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. மாண வர்களின் இசை, நாட்டியம், மிருதங்கம், கீபோட், கிற்றார் ஆகிய பல நிகழ்வுகள் இதன்போது இடம் பெறும்.
ஒளி விழா சமய நிகழ்வுகளும், ஆராதனைகளும் மாணவர்களால் மேற்கொள்ளப்படவுள்ளன. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் கலந்து கொள்வார். (வ)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஊழியருக்கான போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.19
நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தால் நல்லூர் பிரதேசசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

கட்டுரைப்போட்டி
முதலாம் இடம்-ம.ராஜி (நல்லூர் உப அலுவலகம்), இரண்டாம் இடம்-பி.கஜேந்தினி (தலைமை அலுவலகம்), மூன்றாம் இடம்-சி.தயாபரன் (தலைமை அலுவலகம்)

பொது அறிவுப் போட்டி
முதலாம்இடம் - ம.ராஜி (நல்லூர் உப அலுவலகம்), இரண் டாம் இடம்-கே.அர்ச்சனா, வே.சுதன் (கொக்குவில் உப அலுவலகம்), மூன்றாம் இடம்-எஸ்.சிந்துஜா (கொக் குவில் உப அலுவலகம்), பி.கஜேந்தினி (தலைமை அலுவலகம்)

புதிர்ப் போட்டி
முதலாம் இடம்-வி.காயத்திரி (தலைமை அலுவலகம்), இரண் டாம் இடம்-ம.ராஜி (நல்லூர் உப அலுவலகம்)
சிறுகதைப் போட்டி
முதலாம் இடம்-ம.ராஜி (நல்லூர் உப அலுவலகம்). இரண் டாம் இடம்-சி.தயாபரன் (தலைமை அலுவலகம்)
(ந-14)

## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த திருமதி பார்த்தீபன் கவிநாயகி நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.
யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ள இவர் யாழ். மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டார். வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொருளாதார அபிவிருத்தி அலுவலராகக் கடமைபுரியும் இவர் புவியியல் சிறப்புக் கலைப்பட்டதாரியும் சிறந்த சமூக சேவகியுமாவார். (ந-11)

## விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், டிசெ.19
வீதியில் வாகனம் வரு வதை அவதானிக் காமல் தமது மோட்டார் சைக்கிளில் வீதி யைக் கடக்க முற்பட்ட பெண் மீது மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த பெண் காய மடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு அண்மையில் உள்ள சந்தியில் இடம்பெற்றது.
மீசாலை வடக்கைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரே காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க் கப்பட்டார். (வ-9)

**3ஆம் ஆண்டு நினைவலைகள்**



அமரர்
மயிலன் பொன்னன்
மண்ணில் 07.03.1933
விண்ணில் 23.12.2010

உயிராக இருந்து எம்மை
காத்த எமது தெய்வமே
உமைப் பிரிந்து இன்று
வருடங்கள் மூன்று முடிந்தாலும்
எம் நினைவுகள் என்றும்
உம்மையே சுற்றி வரும்.

இன்று [19.12.2013] வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'இராஜபுரி'
கைதடி கிழக்கு.
(சி/10363)(7.6.3)
குடும்பத்தினர்.

**ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி**



செல்வி
தபேந்திரராசா
ஈவிலின் சரோமினி
"இறைவன் அருகில் அடைக்கலம் புகுந்தாள்வோள்"

மலர்வு 21.10.1991
உதிர்வு 19.12.2004

அமைதியான தோற்றம்
அன்னம் போல நடை
மெல்லிய புன்சிரிப்பு
மென்மையான கதை - அத்தனையும்
அவனியில் நீர் தந்த
காலத்து நினைவலைகள்
என்றென்றும் அகலுமா எமைவிட்டு
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
அகலாது எமை விட்டு.

என்றும் உன் நினைவில்:
அப்பா, அம்மா, தம்பி.
பழைய பொலிஸ் நிலைய வீதி,
கோப்பாய் தெற்கு.
(42708)(12)(3.6)

**முதலாம் ஆண்டு நீங்கா நினைவினிலே**



அன்னை மடியில் 28 2 1938
இறைவன் அடியில் 30 12 2012

பளவத்தை வல்வெட்டியைச் சேர்ந்த
அமரர் பொன்னுத்துரை சின்னத்தம்பி
(இளைப்பாறிய கிராம சேவையாளர்)
திதி: துதியை 19.12.2013 வியாழக்கிழமை

எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டொன்று ஓடிச் சென்றதுவே
இணையில்லா வாழ்வை எமக்களித்து
குடும்பத்தில் யாவரையும் சிரிக்கவைத்து
இறுதியில் யாவர் கண்களிலும் நீர் மல்க
எத்திசையும் அறியாமல் எங்கு சென்றதுவோ
எப்பொழுது மீண்டும் உதிப்பீர்கள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் நீங்கா நினைவுடன்
மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பளவத்தை,
வல்வெட்டி.
(சி/10344)(3.6.4)

## ஆண்டுகள் இரண்டின் நினைவலைகள்

உள்ளக் கமலத்தில் உமை இருத்தி....



உதயம் * 24 * 08 * 1947

அஸ்தமனம் * 10 * 01 * 2012

### அமரர் இராஜா யோகராஜா (J.P)

திதி: மார்கழி மாத துதியை

யதார்த்தங்களின் புரிதல்களை
எமக்குப் புகட்டிய அன்பு அப்பாவே!
நிரந்தரமான பிரிவின் வலிகளைத்
தந்து சென்று ஆண்டுகள் இரண்டாகினாலும்
காவலின் தெய்வமாய்
எம் கணங்களோடு வாழ்ந்திருப்பீர்கள்
எனும் எண்ணங்களோடு.....

(C/1616)(10.6.3)

18A, முத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை மகேந்திரன்



காரைநகர், களபூமி சத்திரந்தையைப், பிறப்பிடமாகவும், கனகராயன்குளத்தில் வசித்தவரும், தற்போது கிளிநொச்சி குருகுலன் பல்பொருள் வாணிபம், குருகுலன் பந்தல் சேவை ஆகியவற்றின் உரிமையாளருமாகிய, ஐயாத்துரை மகேந்திரன் நேற்றுமுன்தினம் 17.12.2013 காலமானார்.

அன்னார் குலேஸ்வரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஐயாத்துரை -அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், குருகுலன், குயிலன், மனோசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கே.ரி.கனகசபை (தொப்பியர்) - மகேஸ்வரிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், கனகரத்தினம் (சிவா), காலஞ்சென்ற அரியரத்தினம், வரதலட்சுமி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பேரின்பராசா, பரமராசா, மனோகராதேவி, றஞ்சிதமலர், சந்திரமலர், அருணகிரிநாதன், யோககிரிநாதன், கனகராசா, சாந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2013) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் ஏ9 வீதி, குருகுலன் பந்தல் சேவை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிளிநொச்சி திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(29714) (45.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரகலா (கலா) நவரட்ணம்

(புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம்)



புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Villejuif தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சந்திரகலா நவரட்ணம் 15.12.2013 ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரெட்ணம்-இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சுப்பையா மற்றும் தனலட்சுமி (கனடா) தம்பதியரின் அன்பு மருமகளும், நவரட்ணம் அவர்களின் பாசமிகு மனைவியும், கொறின், மயூரிகா, மயூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமகள் (திரு-இலங்கை), சயாநிதி(தேவி-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணரெட்ணம் (இலங்கை), கணேஸ்வரன் (கணேஸ்-பிரான்ஸ்), சற்குணராசா(கனடா), பரமேஸ்வரி (கனடா), பத்மாசினி(சுவிஸ்) காலஞ்சென்ற கலாநிதி ஆகியோரின் அருமை மைத்துனியும், நிதர்சன்(கனடா), இலக்சனா (இலங்கை), பாகீஸ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17.12.2013 (செவ்வாய்) 18.12.2013 (புதன்) ஆகிய நாள்களில் பி.ப. 13.30 மணிமுதல் 15.30 மணிவரை Chambre Mortuaire Hopital Lapitie Salpetriere 22, rue Bruant-75013 PARIS (Metro Ligne-6 Chevaleret) என்னும் இடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு அதே இடத்தில் 19.12.2013 (வியாழன்) காலை 8.00 மணி முதல் 9.30 மணி வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் மு.ப. 10.30 மணிமுதல் 11.30 மணிவரை Crematorium dePere Lachaise, 71 rue Rondeaux-75020 PARIS (Metro Ligne-3 Gambetta) என்னும் இடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
நவரட்ணம்-கணவர் 0033156309158/திருமகள் 0094215686557
தேவி 0033156303807/நிதர்சன் 0016478641477
பகீதன் 0033652859242/நதீசன் 0033652194010

தகவல்:
குணரட்ணம் திருமகள்
புங்குடுதீவு-3

(42780)(8.6.4)

## வேலையாள் தேவை

நெல்லண்டை, பருத்தித்துறையில் உள்ள நமிலாஸ் ஸ்ரூடியோ விற்கு பெண் வேலையாள் தேவை.
தொடர்பு: 0778611912, 077 6151339

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. (42732) (12.3.6)

தொடர்பு: 077 711 1400

## தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
* சகல விதமான நெல்வகைகளும் கொள்வனவு செய்யப்படும்.

மாப்பியன் அரிசி ஆலை
சுதுமலை, மானிப்பாய்.
T.P: 077 772 2215

## மணமகள் தேவை

யாழ். இந்துகௌரவ குடும்பம், 1984ஆம் ஆண்டு பிறந்த (பூச நட்சத்திரம்) B.Sc பட்டம்பெற்ற லண்டன் பிரஜாவுரிமையுடைய மணமகனுக்கு நன்கு படித்த அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: 077 119 2289

## தவறிவிட்டது

வல்வெட்டித்துறை ஊறணி - வல்வெட்டிச் சந்திக்கும் இடையில் பேர்ஸ், லைசன்ஸ், இன்சூரன்ஸ் ரக்ஸ், ஐசி என்பன தவறிவிட்டன. இதனைக் கண்டு எடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 075 039 2720

## ரக்ரர் விற்பனைக்கு

மஹிந்ரா ரக ரக்ரர், றொட்டர், பெட்டி, கலப்பை உட்பட விற்பனைக்குண்டு.NP RC-xxxx.
தொடர்பு: 077 210 2380.
கிளிநொச்சி.
(29713)(4.6.3)

## TVகள் மலிவு விலையில்

மிக மிக மலிவு விலையில் SONY பனசோனிக் TV கள் 21"-14,000/=, 29" - 15,000/=, DVD - 3,000/= குளிர்சாதனப் பெட்டிகள், CD, ரேடியோ-கசெற் Box அம்பிளிபயர் என்பன.
தொடர்பு: 077 044 0570 (7.6.3)
ரேவி ரேற் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, K.K.S. வீதி, சுன்னாகம்.

## விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடர்புலத்தில் கடைக் கட்டடத்துடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(42733)(45.3.6) தொ.பே.076 609 4999

## Annai Nagaa Food City

### பதவிவெற்றிடம்

* காசாளர்
* விற்பனை உதவியாளர்கள்
* மற்றும் உதவியாளர்கள்

சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகமளிக்கலாம்.
காலம்: 19.12.2013-27.12.2013
நேரம்: காலை 9.00 - பி.ப. 1.00
இடம்: 175, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

மேலதிக விபரங்களுக்கு:
077 477 3485/021 739 0194
(சி/10366)(4.6.3)

## யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

### முக்கிய அறிவித்தல்

எமது பாடசாலையில் 2014 ஆம் ஆண்டு தரம் 6 இல் அனுமதி பெறவிரும்பும் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளுக்கு மேல் பெற்று இதுவரை பாடசாலைக்கு தகவல்கள் வழங்காதிருப்பின் ஞாயிற்றுக்கிழமை 22.12.2013 அன்று மு.ப. 10.00 மணிக்கு பாடசாலையில் அனுமதியைப் பெறலாம் என்பதனை அறியத் தருகிறேன்.

அதிபர்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
(சி/10360)(4.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி பொன்னம்பலம்



கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி பொன்னம்பலம் நேற்று (18.12.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லாச்சி-சபாபதி தம்பதி யரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி தங்கரத்தினம் (சரசு), காலஞ்சென்ற செல்லையா தம்பிராசா ஆகியோரின் அன்பு சகோதரியும், நடனசபா முத்துக்குமார் (ராசன்) பங்கையராணி, செல்வராணி, பரமராணி, குகராணி ஆகியோரின் தாயும், காலஞ்சென்றவர்களான அருந்தவநாதன் ஜெகநாதன் மற்றும் சண்முகநாதன், செல்வநாயகம், மதியானந்ததேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்துக்ககு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(42755) (10.6)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி அன்னலிங்கம்



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி அன்னலிங்கம் (16.12.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன்-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ராமன்-பொன்னி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்னலிங்கத்தின் பாசமிகு மனைவியும், ஞானசேகரம் (சுவிஸ்), குணசீலன், ஜெயசீலன் (ஜேர்மனி), ஈஸ்வரன் (லண்டன்), கலாராணி, ஜெயராணி தயாநிதி (சுவிஸ்), தயாநளினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சரஸ்வதி (சுவிஸ்), இராஜேஸ்வரி, குவதா (ஜேர்மனி), வினோஜா (லண்டன்), செனனானந்தம், கமலேஸ்வரன், தினகரன் (சுவிஸ்), சிறிகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், நீகன் (சுவிஸ்), கேலிசியா (சுவிஸ்), கனிசியா (சுவிஸ்), அஜீபன் (லண்டன்), டினேயா, பார்த்தீபன், கிஷாந்தி, கஜனி (ஜேர்மனி), தாருசன் (ஜேர்மனி), தமிழேந்தி (ஜேர்மனி), திருசிகா (லண்டன்), தனுஸ்கா (லண்டன்), தக்சயா (லண்டன்), நிதர்சன், கோபிகா, அபிமன், ஜீனுயா, கபிலன், சந்தியா (சுவிஸ்), வானதி (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், றியா (சுவிஸ்), றிசாரா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி றோட்,
விளான் ஒழுங்கை.

தகவல்:
ஞானம் (மகன்)
குடும்பத்தினர்.

# கிராமங்களில் மாடுகளை வளர்க்க அதிக ஊக்குவிப்பு வழங்க வேண்டும்

*அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை*

வவுனியா, டிசெ.19
வவுனியாவில் பாலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடான நிலையைத் தவிர்ப்பதற்கு கிராமப் புறங்களில் மாடு வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டுமென அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் பால் கொள்வனவு நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

விவசாய நிலங்களில் வீடுகள் அமைப்பது, வறட்சியினால் கோடை காலங்களில் மாடுகளுக்குத் தேவையான புல் கிடைக்காமை, கால்நடைகளை வெளியில் கட்டாக் காலிகளாகத் திரிய விடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் , கால் நடைத் திருட்டுக்கள் உட்படப் பல்வேறு காரணங்களால் மாடுகள், ஆடுகள், எருமைகள் ஆகிய கால்நடைகளை வளர்ப்பதில் பலரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். இதனால் இந்தக் கால்நடைகளை வளர்ப்பவர்களின் தொகை குறைந்துள்ளது. இதன் காரணமாகவே பாலுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் நடைமுறை உலக உணவுத் திட்டத்தினால் மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கும் பெருமளவு பால் தேவைப்பட்டது. தேவையான பாலைப் பெற முடியாத நிலையில் இங்குள்ள மாணவர்களுக்குப் பால் வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் மாடுகளை வளர்ப்பவர்கள் பாடசாலைக்கு பாலை வழங்காது தினமும் 'நெஸ்லே' போன்ற நிறுவனங்களுக்கு பாலை வழங்குவதிலேயே அக்கறை கொண்டுள்ளனர். பாடசாலை மாணவர்களுக்கும் கொள்வனவுசெய்யும் நிறுவனங்களுக்கும் தினமும் பாலை வழங்க வேண்டுமாயின் கிராமப் புறங்களில் அதிகளவு மாடுகளை வளர்க்கும் பொருட்டு போதிய உதவிகளைத் தாராளமாக வழங்க கால்நடைசார் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என பால் கொள்வனவு நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (க-402)

# அதிக விலையில் மானிய உரவகை

*நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் சாவகச்சேரி நகரசபைத் தலைவர்*

தென்மராட்சி, டிசெ.19
விவசாயத் திணைக்களத்தால் தென்மராட்சி நெற் செய்கையாளர்களுக்கென வழங்கப்பட்ட மானிய உரம் மற்றும் பால் மாடுகளுக்கான வழங்கப்பட்ட தவிடு, புண்ணாக்கு என்பவற்றை தனியார் கடைகளில் அதிகரித்த விலையில் விற்பனை செய்வது தொடர்பில் கமநல சேவை நிலையங்களில் பொறுப்பதிகாரிகளுக்கும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்படும் என்று சாவகச்சேரி நகரசபைத் தலைவர் தெரிவித்தார்.

மேற்கண்ட விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டன.

இந்த விடயங்கள் தொடர்பாக கைதடி, மீசாலை ஆகிய கமநல சேவைகள் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும், சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோருக்கும் அறிவிக்கப்படுமென்றும். அத்துடன் மாகாண அமைச்சருக்கும் அறிவிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

# வீதியைப் புனரமைக்க மக்கள் வேண்டுகோள்

வவுனியா, டிசெ.19
வவுனியாவிலுள்ள கோமரசங்குளம், சமளங்குளம், முருகனூர் ஆகிய இடங்களிலிருந்து கல்நாட்டியகுளம் அ.த.க. பாடசாலைக்குச் செல்லும் வீதியைப் புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்டி வீதியூடாக கல்நாட்டியகுளம் பாடசாலைக்குச் செல்லும் வீதி அண்மையில் தார் இட்டுப் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் மேற் குறித்த வீதி கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதி குன்றும் குழியு மாகக் காணப்படுவதால் தற்போது பெய்து வரும் மழை காரணமாக மேலும் சேதம டைந்தும், நீர் தேங்கி நின்றும் இடர்களை ஏற்படுத்தி வருகின் றது.

மேலும் இந்த வீதியின் மோசமான நிலை காரணமாகப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-402)

# ஏ-9 வீதியில் மேற்கொள்ளப்படும் சாரதியப் பயிற்சியைத் தவிர்க்கவும்

*பயணிகளும், வாகனச் சாரதிகளும் வேண்டுகோள்*

வவுனியா, டிசெ.19
வவுனியா ஏ-9 வீதியில் சாரதியப் பயிற்சிகளை நடத்த வேண்டாமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தனியார் சாரதியப் பயிற்சி நிறுவனங்களிடம் பயணிகள் மற்றும் வாகனச் சாரதிகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில்;
அதிகளவு வாகனப் போக்குவரத்து இடம்பெறும் இடமாக ஏ-9 வீதி காணப்படுகிறது. இதே வேளை அதிகமான வாகன விபத்துக்களும் இங்கு இடம் பெற்று வருகின்றன. இந்த நிலையில் வாகனம் செலுத்துவதற்கான பயிற்சியை இந்த வீதியில் வழங்குவது பொருத்தமற்றது. மேலும் சாரதியப் பயிற்சி பெறுபவர்கள் அச்சத்துடன் வானங்களைச் செலுத்துவதைக் காணமுடிகின்றது.

அத்துடன் இந்த வீதியில் செல்லும் ஏனைய வாகனங்கள் வேகக் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து தவிர்ப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. தற்போது இதுவொரு இடைக்கால ஏற்பாடாகவே உள்ளது. எனவே சாரதிகளுக்கு பயிற்சி வழங்கும்போது வாகன நெரிசல் இல்லாத இடங்களைத் தேர்வு செய்து அங்கு சாரதியப் பயிற்சிகளை வழங்குவது பொருத்தமானது. இதனால் தேவையற்ற விபத்துக்களைத் தவிர்க்கலாம் என பயணிகளும், வாகன சாரதிகளும் தெரிவித்துள்ளனர். (க-402)


## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## குத்தகைக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2014

05.11.2013 - 26.11.2013 திகதிகளில் செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் 2014ஆம் ஆண்டுக்கு பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கு மீள்கேள்வி கோரப்படுகின்றன.

| இல. | சந்தைகள், (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்) இறைச்சிக் கடைகள். | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 15000.00 | 15,900,000.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 200,000.00 |
| 3. | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச்சிக்கடை இல.1 | 500.00 | 5000.00 | 351,100.00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 100,100.00 |
| 2. | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 394,800.00 |

கேள்விப் படிவம் வழங்கப்படும் திகதி : 30.12.2013 திங்கட்கிழமை மு.ப 10.00 மணிவரை.
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 30.12.2013 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி வரை.
கேள்வி திறக்கும் திகதி : 30.12.2013 திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணி

குத்தகை தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
19.12.2013

(சி/10617)(7.6.3)

ப.வசந்தகுமார்
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.



யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்
அருள் ஒளிதர்ஷன மாலையும் சங்கட சதுர்த்தி விசேட பூஜையும்



இடம் :
திவ்வியஜீவன சங்க மண்டபம்,
சட்டநாதர் கோயிலடி, நல்லூர்
காலம் : 21.12.2013
சனிக்கிழமை
முற்பகல் 10.00 மணி

யாழ் தொடர்புக்கு:
077 699 3861, 077 982 5004

(42744)(2.6.3)



**சுஜீவா வைத்தியசாலை**
சுஜீவா தாய்மையின் பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
**விடுமுறை அறிவித்தல்**

தவிர்க்க முடியாத காரணத்தால்
இன்று (19.12.2013) வியாழக்கிழமை வைத் தியசாலை திறக்கப்படமாட்டாது. மீண்டும் சனிக்கிழமை முதல் வழமை போல் இயங்கும்.
வழமையான சேவை நேரம்
காலை 07.00 - 11.00 Dr.ஜெ.ஜெயலன்
மாலை 03.00 - 05.00 Dr.ச.ஜெயலன்
வெள்ளிக்கிழமை விடுமுறை TP - 077 559 4147

(42746)(12.6.3)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வரவு செலவுத்திட்டம்-2014
## மக்கள் பார்வைக்கு

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதனைக் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் 23.12.2013 ஆம் திகதி வரை பார்வையிடலாமென சபையின் தலைவர் அ.பொ. டொ.அன்ரன் தெரிவித்துள்ளார்.

* தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.
* பொது நூலகம், புலோப்பளை உப அலுவலகம், பளை
* பொது நூலகம், முள்ளிப்பற்று உப அலுவலகம், இயக்கச்சி.

அ.பொ. டொ.அன்ரன்
தலைவர், பச்சிலைப்பள்ளி, பிரதேசசபை

(சி/7810)(4.6.3)

நீங்களின்றி ஓர் திங்கள் ஆனது அப்பா......!



யாழ்ப்பாணம் வேலணையூர்

அமரர் சின்னத்துரை வதனகாந்தன்[வதனா]

விதையாக மண்ணில் — விழுதாக விண்ணில்

13.07.1955 திதி: பிரதமை 18.11.2013

ஈடு இணை இல்லாத தந்தை நீங்கள்
ஈகைப்பேரொளியாய் எமக்காக வாழ்ந்த உத்தமரே!
பாசமாய் எமை வளர்த்தெடுத்த பண்பாளன்
பண்பான வாழ்வுதனை பயிற்றுவித்த எங்கள் உயிரே!
நாளும் நாம் நலம் வாழ நல்லறிவு புகட்டிய நல்லாசான்
நல்லவராய் வல்லவராய் வையகத்தில் வாழ வழிசமைத்த வழிகாட்டியே!
நேர்மையின் நிஜத்தை நேரில் கண்டோம்
நேரிய வழிதனில் நாம் வாழும் வாழ்வின் ஆகர்ஷ புருஷரே!
கல்வியிலே மிளிர்ந்து கண்ணியமாய் வாழச் சொன்னவரே!
கலங்கரை விளக்கமாய் நின்ற எங்கள் அப்பா!
கடைசிவரை எம்மோடு வாழத்தான் நினைத்திரே!
காலனின் கண்பட்டு போனது ஏன் அப்பா!
அந்நிய தேசமதிலும் உங்கள் பிள்ளையெனும் பெயர் சொல்ல வாழ்ந்தேனே
அகிலமே அனைத்தும் நீங்களென்று அகமகிழ்ந்திருந்தோம்
பாரினில் எமை புகழொடு வாழவைத்த தெய்வமே
பட்டமரம் போலானோம் நாமிங்கு
தூண் இழந்து துணை இழந்து துடிக்கின்றோம்
துயர் போக்கி இருளகற்றி ஒளியேற்ற
தொழுகின்றோம் தினம் உம் பாதக்கமலங்கள்........
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*18/11/2013 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தையின் துயரில் கலந்து கொண்டு பல வழிகளிலும் எமக்கு துணையாய் தோள் நின்ற அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று 19/12/2013 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நாவலர் வீதி, TCT மண்டபத்தில் நடை பெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்த னையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டு கின்றோம்.*

28/2, விபுலாநந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு.

துயரில் தவிக்கும்
குடும்பத்தினர்.

(29303) (10.6.7)

## மரண அறிவித்தல்



### மணியம் நாகராசா (கண்ணன்)

பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மணியம் நாகராசா நேற்று (18.12.2013) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கண வரும், காலஞ்சென்றவர்களான சண்முகம் மணியம்-இலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், சசிகலா (இத்தாலி), நிமலன் (மின்சார நிலையம், சுன்னாகம்), சசிரேகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்யுதனின் (இத்தாலி) மாமனும், ஹரிகேசவன், கௌரங்கன் ஆகியோரின் பேரனும், நாகராணி, நல்லராசா, ரங்கநாதன் (சுவிஸ்), மகேந்திரன் ஆகி யோரின் சகோதரனும், வேலுப்பிள்ளை, விமலாதேவி, ஜெய கலா (சுவிஸ்), கலைவாணி, காலஞ்சென்ற செல்லத்துரை, காலஞ்சென்ற கந்தசாமி, கணேசமூர்த்தி, நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.12.2013) வியாழக்கிழமை பி.ப 4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
(..........)(10.14)

தகவல் :
நிமலன் (மகன்),
077 822 2508

# நத்தாரையொட்டி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



நத்தார் தின விழாவைக் கொண்டாடும் முகமாக மட்டக்களப்பு, ஜெயத்திபுரம் பிர தேசத்திலுள்ள 300 வறிய பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை ஜெயத்திபுரம் கெத்செமனே கொஸ்பல் கிறிஸ்தவ ஆலயத்தில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வில் எம்.ஜெ.எப். நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ்.கமலநாதன், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தனர். (ச)

# குச்சவெளி பிரதேச சபை 'பட்ஜெட்' நிறைவேற்றம்

மட்டக்களப்பு.டிசெ.19

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள குச்சவெளி பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் செவ்வாய்க்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வரவு - செலவு திட்ட வாசிப்பு குச்சவெளி பிரதேச சபை தலைவர் ஏ.முபாரக் தலைமையில் குச்சவெளிப் பிரதேசசபை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த வரவு-செலவு திட்டம் எதிர்க் கட்சிகளின் முன்மொழிவுடன் சபை உறுப்பினர்கள் 9 பேரும் அதற்கு ஆதரவாக வாக்களித்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தச் சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் 3 பேரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பி னர்கள் 2 பேரும், தமிழ்க்கூட் டமைப்பு உறுப்பினர்கள் 2 பேரும், அகில இலங்கை முஸ் லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒரு வரும் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவருமாக மொத்தம் 9 பேர் உள்ளனர்.

இந்த 9 பேரும் வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். (ச)

# மாதாந்த பௌர்ணமி நிகழ்வு

மட்டக்களப்பு.டிசெ.19

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் காந்தி பூங்காவில் மாவட்ட உதவிச் செயலர் தலைமையில் திங்கட்கிழமை மாதாந்த பௌர்ணமி நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலர் ஆர்.சுதர்சினி, மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எஸ்.மலர்ச்செல்வன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த விழாவில் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. மாதாந்தம் நடைபெற்றுவரும் இந்தக் கலை நிகழ்வில் மட்டக்களப்பு மண்ணின் பாரம்பரியத்தைப் பேணும் வகையிலான கலை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

**மலிவு விற்பனை**

கட்டில், மெத்தை, அலுமாரிகள், குசன் கதிரைகள்,
19இல் இருந்து 31வரை மட்டுமே விசேட விலைக்கழிவுடன்
சிவாஸ் தளபாட விற்பனை நிலையம்
சிவன்கோயிலடி சுன்னாகம். 077 6341119

**வேலை ஆள்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவ முள்ள, பழக விரும்பும் ஆண்/பெண் விற்பனையாளர் தேவை.
மேலும் சிட்டை எழுதுநர்
ஆண் - 40-55, பெண் - 18-30
தொடர்பு: 077 555 6904

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள Super cup90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
தொடர்பு:- 0750491310

## கண்ணீர் அஞ்சலி



வட்டுக்கோட்டை கற்பகச்சோலை ஞானவைரவர் ஆலய குருவும் ஆலய வளர்ச்சிக்கு தொண்டாற்றியவருமான

### சிவஸ்ரீ சு. சுப்பிரமணிய சுந்தரராஜக் குருக்கள்

(தொல்புரம்-வழக்கம்பரை)

அவர்கள் 15.12.2013 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைசக்தியை வேண்டுகின்றோம்.

கற்பகச்சோலை ஞானவைரவர் ஆலயம், வட்டுக்கோட்டை. (42764) (10.14)

ஆலய பரிபாலன சபையினரும், வழிபடுவோரும்.

## மரண அறிவித்தல்



### கந்தவனம் அருமைத்துரை

மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் அருமைத்துரை (16.12.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம்-முத்தம்மப தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் , காலஞ்சென்ற அருமைத்துரை அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், புவனபூபதி, பாலசுப்பிரமணி யம், இராசபூபதி, காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் புஸ்பராணி, இந்திராணி (ஜேர்மனி), பவளராணி, ரஜனி (ஜேர்மனி), பாலகிருஷ்ணன் ஆகியோரின் தகப்பனும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் பொன்னம்மா, நவரட்ணம், செல்லம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் மகாராணி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், ஜெயரட்ணம் மற்றும் யசோதன், ஜெயராசா, சிவரஜனி ஆகியோரின் மாமனும், வசீகரன் (பிரான்ஸ்), சுதாகரன், பகீரதன் (மலேசியா), சங்கரன், கலைவாணி, தர்சிகா, மயூரதி, மயூரதன், சுமதி, சுகந்தி, திருக்குமார், சுலக்சனா, காலஞ்சென்ற சுபாதாஸ் மற்றும் சுமித்திரா (லண்டன்), சுதாகரன் (லண்டன்), யாதவன் (மலே சியா), ஜனார்த்தனன் , ஜனனி இந்துஷா, யாழினி, ஜெயதீபன், சிந்துஜா, ஜெயதர்சன், ஜெனாத், ஜெயந், ஜெனுஷா, ஜெனுஷன் (ஜேர்மன்), அபிஷா ஆகி யோரின் பேரனும், திவாகரன், திவிசன், அயந்தன், அபிஷன், அட்சயன், அக்ஷ்சயா, லக்சிகா சிவாணன்,கிஷாணன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2013) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மருதனார்மடம், பூவோடை இந்து மயா னத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏறுக் கொள்ளவும்.

தகவல் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(42848)(7.6.3)

## மரண அறிவித்தல்



### அந்தோனி சுவானி

நாரந்தனையை சொந்த இடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி சுவானி நேற்று (18.12.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி-ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்காளான சந்தியோகு -அந்தோனியாள் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நிரோசாவின் அன்புக் கணவரும், ஞானசீலன் (சுவிஸ்), தேவதாஸ், இமெல்டா (செல்வதி), சகாயராணி (தேவி), யோண் டி பிறிற்றோ (இத்தாலி) ஆகி யோரின் பாசமிகு தந்தை யும், லீலிமலர் (சுவிஸ்), பெனடிக்றம்மா (பவா), அன் ரன் பாலதாஸ், கிறிஸ்ரி யன், றாஜினி ஆகியோரின் அன்பு மாமனும், கிளைமன் சியா (கனடா), கோ: வியா, டெரன்ஸ், நொவின்சியா, நொசாந், நெவின்ஸ்ராஜ், ஜனார்த்தன், டிறென்சியா ஆகியோரின் அன்புப் பேரனும், எர்லினின் (கனடா)அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

06, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4919384, 077 9170018

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லம்மா நடராசா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், அம்பத்தை, அளவெட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல் லம்மா(பெரியதங்கச்சி) நடராசா (கறுவல் தம்பி) நேற்று (18.12.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சு.நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, இராசரத்தினம், திருமதி செ. ராசலட்சுமி, திருமதி ஐ. சோதிலட்சுமி, காலஞ்சென்ற சந்திரன், திருமதி ச. சறோஜினி ஆகியோரின் அன்பு தாயும், காலஞ்சென்ற பொ. புவனேஸ்வரி, திருமதி சத்தியபாமா, காலஞ்சென்ற செல்லத்துரை, ஆ.ஐயாத்துரை, திருமதி ச. ஜெயக்குமாரி, சு.சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12..2013) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்காட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏறுக் கொள்ளவும்.

அம்பத்தை,
அளவெட்டி மத்தி. (42760)(10.14)

தகவல் :
குடும்பத்தினர்.

# சர்வதேச விசாரணைக்குள் சிக்கித் தவிக்கும்போதே ஆயர் பேரவை சிபார்சின் வெகுமதி அரசுக்குப் புரியும்

## மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

"சர்வதேச விசாரணைக்கு இலங்கை முகம்கொடுத்து சிக்கித் தவிக்கும் போதுதான் நீதி - உண்மையின் அடிப் படையில் கத்தோலிக்க ஆயர் பேரவை முன்வைத்த சுற்றுநிருப ஆவணத்தின் வெகுமதியை இந்த அரசு உணர்ந்து கொள்ளும்."

இவ்வாறு தெரிவித்தார் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப்.

இலங்கையின் அரசமைப்பில் மாற் றங்கள் ஏற்பட்டால்தான் நாட்டில் நல்லிணக்கம், சமாதானம் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள சுற்றுநிருப ஆவணத்தை இலங்கை அரசு நேற்றுமுன்தினம் அடியோடு நிராகரித்துள்ளது. விடுதலைப்புலிகளுக்கு ஆதர வாகச் செயற்பட்ட மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இடம்பெற்றுள்ள கத்தோலிக்க ஆயர் பேரவை முன்வைத்துள்ள யோசனைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை தமக்குக் கிடையாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மற்றவர்களின் யோசனைக்காக நாட்டின் அரசமைப்பை மாற்ற முடியாது என்றும், அரசமைப்புக்கு முரணாக அரசு ஒருபோதும் செயற்பட்டதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கருத்துகள் தொடர்பில் மன்னார் ஆயரிடம் நேற்று வினவியபோது அவர் தெரிவித்தவை வருமாறு:-

"இலங்கையின் எதிர்கால நலன் கருதித்தான் கத்தோலிக்க ஆயர் பேரவை சுற்றுநிருப ஆவணத்தை முன்வைத்தது. ஆனால், இதை அரசு தூக்கியெறிந்துள்ளதுடன் கண்டபடி விமர்சிக்கின்றது.

மனித நேயமற்றவர்கள் அரசில் இருப்பதனாலும், அவர்கள் வெளியிடும் இனவாதக் கருத்துகளினாலுமே நாட்டில் நல்லிணக்கம், சமாதானம், சுபீட்சம் ஏற்பட வாய்ப்பில்லாமல் உள்ளது.

ஐ.நாவில் சர்வதேச விசாரணைக்கு இலங்கை முகம் கொடுத்து சிக்கித் தவிக்கும் போதுதான் நீதி - உண்மையின் அடிப்படையில் கத்தோலிக்க ஆயர் பேரவை முன்வைத்த சுற்றுநிருப ஆவணத்தின் வெகுமதியை இந்த அரசு உணர்ந்து கொள்ளும்.

இலங்கை அரசால் ஒடுக்கப்பட்ட தமிழர்களின் நியாயமான - உண்மையான கோரிக்கைகளுக்காகவே நான் குரல் கொடுத்து வருகின்ற நிலையில், என்னை புலிகளின் ஆதரவாளர் என்று அரசு கூறுகின்றது. நான் ஒருபோதும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படவில்லை. ஆத்திரத்தில் விடுதலைப் புலிகள் எடுக்கும் சில முடிவுகளைக்கூட நான் கண்டித்திருக்கின்றேன். அவர்களுக்கு அறிவுரைகளைக் கூறியிருக்கின்றேன்.

நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானம், சுபீட்சம் நிலவி தமிழ் மக்களும் சிங்கள மக்கள் போல சகல உரிமைகளையும் பெற்று தன்மானத்துடன் வாழவேண்டும் என்பதையே நான் விரும்புகின்றேன்.

இலங்கையின் தற்போதைய அரசமைப்பு முரணானதாக உள்ளது. இதில் மாற்றங்கள் ஏற்பட்டால்தான் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படும் என்று தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் எதிர்பார்க்கின்றார்கள். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நெல்சன் மண்டேலாவின் நினைவுப்பேருரையில் தெளிவாகக் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் இன ஒடுக்குமுறையை வெள்ளையர்கள் கட்டவிழ்த்துவிட்ட போது சிறைச்சாலை சென்று மீண்டு வந்து ஜனாதிபதியாகத் தெரிவான நெல்சன் மண்டேலா நாட்டின் அரசமைப்பை உடனே மாற்றியமைத்தார். இதனால்தான் அங்கு கறுப்பின மக்களுக்கு மட்டுமன்றி அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரம் கிடைத்தது.

அதேபோல, இலங்கையிலும் தற்போதைய அரசமைப்பை மாற்றினால்தான் சிறுபான்மை இன மக்கள் மட்டுமல்ல, பெரும்பான்மை இன மக்களும் சுதந்திரம் பெற்று நிம்மதியுடன் வாழ்வார்கள் - என்றார். (த-சி)

# சுகாதார சேவை ஊழியர் இன்று நாடு தழுவிய பணிப்பகிஷ்கரிப்பு

கொழும்பு, டிசெ. 19

சுகாதார சேவை ஊழியர்கள் இன்று நாடளாவிய ரீதியில் நான்கு மணிநேரப் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர் என அகில இலங்கை சுகாதார ஊழியர் சங்கத்தின் தலைவர் ரி.ஜயலால் தெரி வித்துள்ளார்.

மத்திய அரசின் கீழ் உள்ள கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில பொது வைத்தியசாலை உட்பட மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் சகல வைத்திய சாலைகளின் ஊழியர்களும் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் பங்குகொள்ளவுள்ளனர்.

சம்பள நிலுவை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை, லேடிரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை, காசல் மகப்பேற்று வைத்தியசாலை, டி.சொய்சா மகளிர் வைத்தியசாலை என்பனவற்றிலுள்ள ஊழியர்கள் பகல் போசன வேளையில் மாத்திரம் தத்தமது வைத்தியசாலைகளின் முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

அத்துடன், அனைத்து வைத்திய சாலைகளின் ஊழியர்களும் நான்கு மணிநேர அடையாள வேலை நிறுத் தத்தில் ஈடுபடவுள்ளனர் என்றும் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (த-சி)

# வெள்ளை ஆமையை தேட சர்வதேச பொலிஸ் உதவி

கொழும்பு, டிசெ. 19

கொஸ்கொட பிரதேசத்திலிருந்து காணாமற்போன வெள்ளை நிற கடலாமை யைத் தேடுவதற்கு சர்வதேச பொலிஸாரின் உதவி கோரப்படும் என்று வனஜீவராசிகள் அமைச்சர் விஜித்த விஜய முனி சொய்சா தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வெள்ளை நிற கடலாமை மாலைத்தீவுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வலி.வடக்குக்கு

'சில குடும்பங்களில் உள்ள அனைத்து அங்கத்தவர்களும் இறந்துள்ளனர். அதனால் அவர்களின் பதிவுகளை மேற்கொள்ள முடியாது. உறவினர்களால் முழுமையாக இறந்தவர்களின் விவரங்களைக் கொடுத்தாலும் கிராம சேவையாளர்கள் ஏற்க மறுக்கின்றனர். அத்துடன் 1990 ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் 33 ஆயிரம் குடும்பங்கள் வசித்த நிலையில் தற்போது 9 ஆயிரத்து 999 குடும்பங்களே மீளத் திரும்பியுள்ளன. முழுமையாகத் தங்கள் பிரதேசங்களில் அவர்கள் அனைவரும் குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் இவ்வாறான கணக்கெடுப்புக்கள் நிகழுமாயின் அதன் மூலம் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும். எனவே இடம்பெயர்ந்த மக்கள் தமிழ்நாட்டிலும் கூட அகதி முகாம்களில் தற்போதும் உள்ளனர். இவர்கள் மீளத் திரும்பிய பின்னரே இழப்புக்கள் தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளவேண்டும்' என்று உறுப்பினர் வே.சண்முகநாதன்பிரேரணை கொண்டு வந்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பாகச் சபையில் விவாதம் நடத்தப்பட்டது. இதன் பிரகாரம் இந்தக் கணக்கெடுப்பு நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் இந்தத் தீர்மானத்தை மேலதிக நடவடிக்கையின் பொருட்டு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்துவதெனவும் உறுப்பினர் வ.முருகேசு முன்மொழிய உறுப்பினர் செ.கமலநாதன் வழிமொழிந்தார். சபையால் அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (த-5)

### இடம்பெயர்ந்தோர்

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்,9 ஆயிரத்து 905 குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளத்திரும்ப வேண்டியிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இந்தக் கூட்டம் இடம்பெற்ற பின்னர் வலி.வடக்கில் எந்தவொரு மீளத்திரும்புதலுக்கும் மக்கள் அனுமதிக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் நாடாளுமன்றத்தில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறித்த குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இடம்பெயர்ந்தவர்கள் மீளத்திரும்புதல் குறித்துத் தவறான தகவல்களைத் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

'வடக்கு மாகாணத்தில், யாழ். மாவட்டத்தில் 31 ஆயிரத்து 188 குடும்பங்களும், மன்னார் மாவட்டத்தில் 24 ஆயிரத்து 22 குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 15 ஆயிரத்து 981 குடும்பங்களும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 39 ஆயிரத்து 660 குடும்பங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 40 ஆயிரத்து 594 குடும்பங்களும் மீளத் திரும்பியுள்ளன.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 228 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 410 பேர் முகாம்களிலும் 4 ஆயிரத்து 550 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 355 பேர் நண்பர்கள் அல்லது உறவினர் வீடுகளிலுமாக மொத்தம் 5 ஆயிரத்து 778 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 765 பேர் மீளத் திரும்ப வேண்டியவர்களாகவுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் முகாம்கள் இல்லை. எனினும் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் 314 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 140 பேர் மீளத் திரும்ப வேண்டியவர்களாகவுள்ளனர்' என்று அமைச்சர் முரளிதரன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஆனால் கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற வலி. வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் 9 ஆயிரத்து 905 குடும்பங்கள் மீளத் திரும்ப வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் அமைச்சர் கூறிய தகவலுக்கும் வலி.வடக்கு பிரதேச செயலக அறிக்கைக்கும் வேறுபாடு உள்ளமை தெரியவந்துள்ளது. (த-5)

### இறுதிப்போரில்

வர்களைச் சுட்டுக் கொன்றதாக இவரது படைப் பிரிவின் மீது குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக சுமத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும், ஐ.நாவுக் கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக அவர் நியமிக்கப்பட்டிருந்தார். அமெரிக்காவில் போர்க் கல்லூரிப் பயிற்சிக்காகச் சவேந்திர சில்வாவை இலங்கை அரசு அனுப்பிய போதும் அதனை அமெரிக்கா ஏற்கமறுத்திருந்தது. அதேபோன்று அவரை தென்னாபிரிக்காவுக்கான பிரதித் தூதுவராக நியமிக்கும் முயற்சியும் பிசுபிசுத்துப் போயிருந்தது.

இந்த நிலையிலேயே கனடாவும் சவேந்திர சில்வாவுக்கு நுழைவிசைவை மறுத்துள்ளது. கனடாவில் நிகழ்வொன்றில் பங்குபற்றுவதற்காகச் சவீந்திர சில்வா அங்கு செல்ல முற்பட்ட நிலையில் இந்த நுழைவிசைவு மறுக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப்போரில் 57ஆவது படைப்பிரிவுக்குத் தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸுக்கு அண்மையில் ஆஸ்திரேலியாவும் நுழைவிசைவு மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### ஆளுநரின்

இதுவரை வரவு - செலவுத் திட்டம் வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்தினால், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு அனுப்பப்படவில்லை எனவும், இதனால் அது ஆளுநரின் ஒப்பத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் தெரிய வருகின்றது.

பேரவைச் செயலகத்தினால் வரவு செலவுத் திட்டம் இதுவரை அனுப்பி வைக்கப்படாமைக்கான காரணம் தொடர்பில் அறிவதற்காக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துடன் தொடர்பு கொண்ட போதும் அவர் பதிலளிக்கவில்லை. (த-5)

### தமிழ்க்

முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளிக்கப்பட்டது போல் இவர்களையும் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தி புனர் வாழ்வு அளித்திருக்க வேண்டும். பயங் கரவாதத்துக்கு துணைபோகமாட்டார்கள் என்றும், ஈழம் அமைக்க முயற்சிக்கமாட்டார்கள் என்றும் கூட்டமைப் பிடம் அரசு அறிவிப்பொன்றை பெற வேண்டும். இல்லையேல், அக்கட்சியைத் தடைசெய்யவேண்டும். யாழிலிருந்து இராணுவத்தை அகற்றுமாறு கூட்டமைப்பு கோருகின்றது. இன்று மேற்குலகில் புலி செயற்பாட்டாளர்கள் இருக்கின்றனர். தமிழ்நாட்டிலும் புலி ஆதரவாளர்கள் செயற் படுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரிவினைவாதக் கொள்கையை முன்னெடுக்கிறது. எனவே, அக்கட்சியின் ஆட்சி இருக்கும் வரை வடக்கிலிருந்து இராணுவத்தை அகற் றக்கூடாது. அவ்வாறு அகற்றுவதா னது ஈழத்துக்கு வழியமைக்கும் செயலாகும் - என்றார். (த-சி)

### 15,000 ஏக்கர்

கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத் துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத் தப்பட்ட அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்ததாவது:-

சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள் மூலம் மீள்குடியேற்றத்தைச் செய்யமுடியும் என்று அரசு அண்மையில் அறிவித்துள்ளது. இடம்பெயர்ந்த மக்களில் 95 சதவீதமானோர் ஏற்கனவே மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுவிட்டதாகவும், புனர்வாழ்வளிக்கப்பட்டுவிட்டதாகவும் ஜனாதிபதிகூட ஐ.நாவில் அறிவித்திருந்தார். ஆனால், உண்மை அதுவல்ல.

மீள்குடியேற்றம் தொடர்பாக ஐ.நா வினால் அண்மையில் விடுக்கப்பட்ட அறிக்கையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு முதலான மாவட்டங்களில் ஒரு இலட்சத்து 17 ஆயிரத்து 888 நபர்கள் இன்னும் நிரந்தரமாக மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, வடக்கில் மீளக் குடியேற்றப்பட்ட மக்கள் வீடுகள் இல்லாமல் அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் தங்கியிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கேப்பாபிலவு கிராமத்தி லிருந்து இடம்பெயர்ந்த மக்களை இராணுவத்தினர் செட்டிக்குளம் முகாமிலிருந்து வெளியில் எடுத்து கேப்பா பிலவு பகுதியில் அவர்களை மீளக்குடியேற்றாமல் சூரியபுலம் பகுதியில் கொண்டு சென்று விட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாது, மன்னார் மாவட்டத்தின் முள்ளிக்குளம், திருமுரு கண்டி, வலிகாமம் வடக்கு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியேறு வதை இராணுவத்தினர் தடுத்துள்ளனர். இவை பாரதூரமான பிரச்சினை யாகும். இதேநேரம், சம்பூரில் சுமார் 6 வருடங்களுக்கு முன்னர் அரசு ஏறக் குறைய 15ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை சுவீகரித்துள்ளது. அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்து வருகின்றனர். மின் உற்பத்திக்கு 500 ஏக்கர் காணி மட்டுமே அரசுக்குத் தேவைப்படுகிறது. ஆனால் 15 ஆயிரம் ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, சம்பூர் மக்கள் அவர்களது சொந்தக் காணிகளில் மீளக்குடியேறுவதற்கு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுக்கிறேன் - எனத் தெரிவித்தார். (த-சி)

### இராமேஸ்வரம்

டத்தை ஆரம்பித்துள்ளனர். ஏற்கனவே கடந்த திங்கட்கிழமை அவர்கள் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

எனினும் இந்த போராட்டத்துக்கு அதிகாரிகள் மதிப்பளிக்காத நிலையில், தங்களின் போராட்டத்தை உணவுத் தவிர்ப்பு போராட்டமாக நடத்த அவர்கள் ஆரம்பித்துள்ளனர். (த)

# வவுனியா லயன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்.டிசெ.19

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் லயன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த திங் கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)




முல்லைத்தீவு 591 ஆவது இராணுவப் படைப் பிரிவு நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற சென்.யூட் விளையாட்டுக்கழக அணியினர் விருந்தினர்களுடன்..... (த-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 19

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் - மனார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளந்தென்றல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (த-23)

# கடற்கரை கரப்பந்தாட்டம் ஜனவரியில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் முதன் முறையாக நடத்தும் கடற்கரை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளது. மேற்படி போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது விண்ணப்பப் படிவங்களை யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுக்கழகத்திலிருந்து ஒரு அணி மட்டுமே பங்கு பற்ற முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

# எல்லேயில் கனகபுரம் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 19

இலங்கை எல்லே சம்மேளனத்தினால் 'தேசத்தின் மகுடம்' என்னும் தொனிப்பொருளுக்கு அமைய நடத்தப்பட்ட கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையிலான எல்லே போட்டியின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை பரந்தன் மகா வித்தியாலய மைதானத் தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூநகரி பல்லவன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக அணி 12:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

இதில் சிறந்த வீரர்களாக கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த கணேசன், தங்கராசா ஆகியோர் தெரிவானார்கள். (த-23)

# வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

வலி.வடக்கு. டிசெ.19

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் முதற் தடவையாக இலங்கை உதைபந்தாட்ட தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்ட போட்டியை நடத்தவுள்ளது.

இதற்காக வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை வலிகாமம் லீக்கின் தலைவர் அல்லது செயலாளரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# மயிலிட்டி வள்ளுவன் தாச்சியில் வெற்றி

வலி.வடக்கு. டிசெ.19

யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் மின்னொளியில் நடத்தப்படும் தாச்சி சுற்றுப் போட்டியில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற போட்டியின் முடிவுகள் வருமாறு:-

மயிலிட்டி வள்ளுவன் விளையாட்டுக் கழகமும் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டதில் முதல் பாதியாட்டத்தில் வள்ளுவன் விளையாட்டுக் கழகம் 8:1 பழம் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் வள்ளுவன் விளையாட்டுக் கழகம் மைதானத்தில் ஆதிக்கம் செலுத்திய நிலையில் மீண்டும் 6:1 பழம் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஆட்ட நிறைவில் வள்ளுவன் விளையாட்டுக் கழகம் 14:2 பழம் என்ற அடிப்படையில் போட்டியில் வெற்றி பெற்றது. (த-86)

# சென்.ஜோன்ஸ் - கல்கிஸை தோமஸ் கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், டிசெ.19

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், கல்கிசை சென்.தோமஸ் கல்லூரிக்கும் இடையிலான நட்பு ரீதியான கிரிக்கெட் போட்டி சமநிலையில் இவ்வாட்டம் முடிவ டைந்தது.


கடந்த வெள்ளி, சனிக் கிழமைகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இவ்வாட்டம் இடம் பெற்றது.

முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 56.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் கபில்ராஜ் 49 ஓட்டங்களையும், துவாரகசீலன் 33 ஓட்டங்களையும், ஏபிரகாம், அனோஜன் தலா 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.தோமஸ் கல்லூரி அணி சார்பில் ரவிந்து திலகரெட்ண 5 இலக்குகளையும், கேரத் கமல் நாணயக்கார 2 இலக்குகளையும், சகான் விஜயசிங்க , தரிந்து ரட்ணாயக்க, சயன. டீசில்வா ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.

தமது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென்.தோமஸ் கல்லூரி அணியினர் 61.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றனர்.



இதில் டுலன்ச சில்வா 43 ஓட்டங்களையும், சணேஸ் டீமெல் 23 ஓட்டங்களையும் , மதுஷன் ரவிச்சந்திரகுமார் 20 ஓட்டங்களையும், கேல கமல் நாணயக்கார 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் துவாரகசீலன் 2 இலக்குகளையும், லோகதீஸ்வர் 5 இலக்குகளையும், கானாமிர்தன், யனுசன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் அணியினர் 22 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்ட நேரம் முடிவுற்றதால் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது.

இதில் சிந்துஜன் ஆட்டம் இழக்காமல் 9 ஓட்டங்களையும், கபில்ராஜ் 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.தோமஸ் கல்லூரி அணி சார்பில் கேரத் கமல் நாணயக்கார, தரிந்து ரட்ணாயக்க ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இதில் சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்.ஜோன்ஸ் கல் லூரி வீரர் கபில்ராஜ் தெரிவானார்.

சிறந்த பந்து வீச்சாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் லோகதீஸ்வரன் தெரிவானார்.

சிறந்த களத் தடுப்பாளராக சென்.தோமஸ் கல்லூரி வீரர் லகிறு ஒபாத்தா தெரிவா னார்.

ஆட்ட நாயகன் விருதை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் துவாரக சீலன் பெற்றார். (த-23)

"-"

**கபில்ராஜ் 49 ஓட்டங்களையும், துவாரகசீலன் 33 ஓட்டங்களையும், ஏபிரகாம், அனோஜன் 18 ஓட்டங்க ளையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.**

# தாச்சிப் போட்டி

வலி.வடக்கு. டிசெ.19

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் மின்னொளியில் நடத்தப்படும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை



பெறவுள்ள போட்டியில் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகம் மோதும். (த-86)

# உள்ளூராட்சி அணியை வென்றது கல்வி அமைச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 19

வட மாகாண அமைச்சுகளுக்கிடையிலான பெரு விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண்களுக்கான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் கல்வி அமைச்சு அணி சம்பியனானது. நேற்று புதன்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இதன் இறுதியாட்டம் இடம்பெற்றது.

இதில் உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்த்து கல்வி அமைச்சு அணி மோதிக் கொண்

ட

இ[illegible] அ[illegible]ச்சு அணி 12:8 என்ற புள்ளி அடி[illegible]டையில் வெ[illegible]ற்றி பெற்றது. (த-23)





# இலங்கை 'ஏ' அணியின் தலைவராக உபுல் தரங்க

இலங்கை கிரிக்கெட் 'ஏ' அணியின் தலைவராக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உபுல் தரங்க நியமிக்கப்பட்டுள்ளார். இந்தத் தகவலை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையின் படி, அடுத்தாண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை உபுல் தரங்க இலங்கை 'ஏ' அணியின் தலைவராகச் செயற்படவுள்ளார்.
இலங்கை மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட அணியின் நிச்சயப்படுத்தப்பட்ட ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் காணப்பட்ட உபுல் தரங்க, அண்மைக்காலத்தில் இலங்கை அணிக்காகத் தெரிவு செய்யப்படாத நிலையிலேயே தற்போது இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
உபுல் தரங்கவின் நியமனம் தவிர இலங்கை 'ஏ' குழாமுக்கான வீரர்களையும் இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

**அறிவிக்கப்பட்டுள்ள அணி:**
உபுல் தரங்க, உதார ஜெயசுந்தர, ஷெஹான் ஜெயசூரிய, மஹேல உடவத்த, பபசர வடுகே, அஞ்சலோ பெரேரா, மாதவ வர்ணபுர, தனுஷ்க குணதிலக, அஷன் பிரியஞ்சன, றொஷென் சில்வா, றொமேஷ் புத்திக, பானுக ராஜபக்ஷ, நிரோஷன் டிக்வெல்ல, கயான் மனிசான், சத்துரங்க டீ சில்வா, தரிந்து கௌஷால், சத்துர றன்டுனு, அகில தனஞ்சய, இஷான் ஜெயரத்ன, விமுக்தி பெரேரா, கனிஷ்க அல்விற்றிகல, லஹிரு கமகே, லஹிரு ஜெயரத்ன, சரித் ஜெயம்பதி. (த)



# பாகிஸ்தான் வீரர்கள் ஆத்திரம்

சம்பியன்ஸ் லீக் போட்டியில் பங்கேற்ற பாகிஸ்தான் அணி வீரர்களுக்கு குறைவான சம்பளம் வழங்கப்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. கடந்த சம்பியன்ஸ் லீக் போட்டி இந்தியாவில் நடந்தது.
இதில் பங்கேற்ற பைசலாபாத் உல்வ்ஸ் அணி வீரர்கள் தமக்கு, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை குறைவான சம்பளம் வழங்கியதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர். போட்டியில் பங்கேற்றதற்காக சம்பியன்ஸ் லீக் ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் பைசலா பாத் அணிக்கு 5 லட்சம் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டது. இது பாகிஸ் தான் ரூபா மதிப்பில் சுமார் 5 கோடி ரூபாவாகும். ஆனால்வீரர் களுக்கு தலா 6 லட்சத்து 75 ஆயிரம் ரூபா மட்டுமே சம்பளமாக வழங்கியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த வீரர்கள் சிலர் தமக்கான காசோலையை ஏற்காது திருப்பிஅனுப்பிவிட்டனர்.தங்களுக்குகூடுதலாகச்சம்பளம் வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள், தங்களுக்கு 5 லட்சம் டொலர் வழங்கப்பட்டாலும் வரியாக, ஒரு லட்சம் டொலர் கழிக்கப்பட்டு விட்டதாகத் என்று தெரிவித்துள்ளனர். (த)


# மகனுடன் கிரிக்கெட் விளையாடும் சச்சின்



சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றாலும், கிரிக்கெட் உணர்வுகளுடன் வாழ்ந்து கொண்டி ருப்பதாக தெரிவித்துள்ளார் சச்சின் டெண்டுல்கர். கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின், மகத்தான சாதனையுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.
இந்நிலையில் பொதுநிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில், நான் இனிமேல் இந்தியாவுக்காக கிரிக்கெட் விளையாடமாட்டேன் என்ற உணர்வு என்னை இன்னும் தாக்கவில்லை. எனக்குள் கிரிக்கெட் உணர்வுகள் இன்னமும் அப்படியேதான் உள்ளது. அது என்னை விட்டு இன்னும் போகவில்லை. இப்போது எனது மகனுடன் கிரிக்கெட் ஆடுகிறேன், நல்லவேடிக்கையாக உள்ளது.
கடந்த மாதத்துக்கு முன்பு வரை நான் மிகவும் பளு உடையவனாக இருந்தேன், என்னைச் சுற்றி நிறைய நடந்து கொண்டிருக்கும். ஆனால் இப்போது எல்லாமே இலகுவாகி விட்டது. எனது குடும்பத்தி னருடன் நிறைய நேரம் இருக்க முடிகிறது. அதற்காகத்தான் காத்திருந் தேன். இப்போதுதான் அது கிடைத்துள்ளது. தொலைக்காட்சி யில் கிரிக்கெட் பார்ப்பேன். அது நல்ல பொழுது போக் காக உள்ளது.
எனது மகனும் ஒரு கிரிக்கெட் வீரர், எனவே என்னை விட்டு கிரிக்கெட் எங்கும் போக வில்லை என்றே கருதுகிறேன் எனத் தெரிவித்துள்ளார். (த)

# வோர்ன்-ஹர்லே மீண்டும் பிரிவு

ஷேன் வோர்ன்-எலிசபெத் ஹர்லே இடையே இரண்டாவது முறை யாகப் பிரிவு ஏற்பட்டுள்ளதாம். ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழல் ஜாம்பவான் ஷேன் வோர்ன். இவருக்கும் இங் கிலாந்தின் மொடல் அழகி எலிசபெத் ஹர்லேயுக்கும் காதல் ஏற்பட் டது. இதற்காகத் தனது மனைவியை விவாகரத்துச் செய்தார் வோர்ன்.
எலிசபெத்துடன் லண்டனில் குடியேறத் திட்டமிட்ட வோர்ன், தனது மெல்போர்ன் வீட்டை விற்றார். இதனிடையே, வோர்ன்-எலிச பெத் இடையே கடந்த ஒக்ரோபரில் பிரிவு ஏற்பட்டதாகச் சமீபத்தில் செய்தி வெளியானது. இதன் பின் மீண்டும் இணைந்த இவர்களிடையே, மறுபடியும் பிரிவு ஏற்பட்டுள்ளதாம். இந்த செய்தி வெளியான பின் வோர்ன் வெளியிட்ட டுவிட்டர்' செய்தியில், கடந்த காலத்தில் நடந்ததை மறந்து விட வேண்டும். தொடர்ந்து மனதில் வைத்திருந்தால், அது எதிர்காலத்தை வீணடித்து விடும். நேற்று என்ன நடந்தது என்று பார்ப்பதை விட, நாளை என்ன நடக்கும் என எதிர்பார்ப்பது தான் வாழ்க்கையில் சிறந்தது.' எனத் தெரிவித்துள்ளாராம். (த)





# ஷில்லிங்போர்ட் மீண்டு வருவார்

போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஷில்லிங்போர்ட் விரைவில் மீண்டு வருவார், என அந்த அணியின் பயிற்சியாளர் கிப்சன் நம்பிக்கை தெரிவித்தார்.
மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் ஷில்லிங் போர்ட் மற்றும் சாமுவேல்ஸ் ஆகியோர் சமீபத்தில் இந்தியாவுக்கு எதிரான மும்பையில் நடந்த டெஸ்டில் பந்து வீசியபோது பந்தை எறிவதாக நடுவர்கள் புகார் கூறினர். இதன் பின், ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தில் இவர் களுக்கு பயோமெக்கானிக்கல்' முறையில் சோதனை நடந்தது. முடிவில். ஷில்லிங் போர்ட்டுக்கு பந்துவீச இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. சாமுவேல்ஸ் தவறு ஏதும் செய்யவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து கிப்சன் கூறுகையில், சோத னையின் முடிவு, எங்களின் எதிர்பார்ப்புக்கு நேர்மாறாக அமைந்துள்ளது. ஷில்லிங் போர்ட்டுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சாமுவேல்ஸுக்கு தண்டனை ஏதும் இல்லை. கடந்த பல ஆண்டுகளாக, இருவருமே தங்களது வாழ்வில் ஏற்றம், இறக்கத்தைச் சந்தித்துள்ளனர். ஷில்லிங்போர்ட் விரைவில் மீண்டு வருவார் என நம்புகிறோம்," என்றார். (த)

# உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சு அணியை வைத்துள்ளமை மகிழ்ச்சி



உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சு வரிசையைக் கொண்டிருப்பது அதிர்ஷ்டகரமானது என நியூசிலாந்து அணியின் தலைவர் பிரன்டன் மக்கலம் தெரிவித்துள்ளார். மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான தொடரை வெல்லும் எதிர்பார்ப்புடன் காணப்படும் நிலையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக டெஸ்ட் போட்டிகளில் தடுமாறிவரும் நியூசிலாந்து அணி டெஸ்ட் தரப்படுத்தலில் 8ஆவது இடத்தில் காணப்படுகிறது.

6ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக டெஸ்ட் தொடரில் பங்குபற்றிவரும் நியூசிலாந்து அணி, முதலாவது போட்டியில் வெற்றி தோல்வியற்ற முடிவைப் பெற்றுக் கொண்ட போதிலும், இரண்டாவது போட்டியில் சிறப்பான பந்துவீச்சால் வெற்றிபெற்றது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த பிரன்டன் மக்கலம், அண்மைய சில போட்டிகளை வைத்துப் பார்க்கும் போது நியூசிலாந்து அணி சிறப்பான திறமை வெளிப்பாடுகளை வெளிப்படுத்தி வருவதை அவதானிக்க முடிவதாகக் குறிப்பிட்டார்.

துடுப்பெடுத்தாடும் போது நியூசிலாந்து அணி அதிக ஓட்டங்களைப் பெறுவதாகக் குறிப்பிட்ட அவர், அது நியூசிலாந்தின் பந்து வீச்சாளர்களுக்கு வாய்ப்பாக அமைவதாகக் குறிப்பிட்டார். நியூசிலாந்தின் பந்துவீச்சாளர்கள் உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சாளர்களாகக் காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

# சச்சின் இல்லாததை ஏற்றாகத்தான் வேண்டும்



இந்திய அணிக்கு இனி நட்சத்திர வீரர் சச்சின் ஆடமாட்டார் என்பதை அணியிலுள்ள இளம் வீரர்கள் ஏற்றுக்கொண்டு விட்டனர். அவர் இல்லையென்றாலும் தத்தமது ஆட்டங்களில் கவனம் செலுத்தி சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதும் அவர்களுக்குத் தெரியும் என இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திர சிங் தோனி கூறியுள்ளார்.

கடந்த டெஸ்ட் போட்டி நடக்கும் போதே இனி வரும் சர்வதேச டெஸ்ட் போட்டிகளுக்கு சச்சின் எங்களுடன் இருக்க மாட்டார் என்பதை 100 சதவீதம் உணர்ந் திருந்தோம். அவர் உடன் இருப்பது நன்றாகத்தான் இருக்கும் ஆனாலும் அதையே நினைக்காமல் அடுத்து நடக்கப் போகும் விடயங்களில் கவனம் கொள்ள வேண்டும் என்பதும் எங்களுக்குத் தெரியும் என தோனி பத்திரிக்கையாளர்களிடன் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டுக்குப் பிறகு டெண்டுல்கர், டிராவிட், லக்ஷ் மண், கங்குலி ஆகிய நான்கு முக்கிய வீரர்கள் இல்லாமல் இந்தியா களத்தில் இறங்குவது இதுவே முதல் முறை. தாய் மண்ணில் அடுத்தடுத்து 6 டெஸ்ட் வெற்றிகளைப் பெற்றதன் தொடர்ச்சியாக இந்தியா இப்போது இந்த போட்டியை விளையாட இருக்கின்றது.

ஒவ்வொரு தொடரும் எங்களுக்கு புதிதான ஒரு ஆரம்பம்தான். நடந்ததை நினைத்துக் கொண்டிருப்பது தேவையற்றது. போட்டி நடக்கும் இடத்தின் சூழலிற்கேற்ப தயார் படுத்திக்கொண்டு முடிந்ததை சிறப்பாகச் செய்ய வேண்டும். இத்தகைய சவாலான சூழலில் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுவது அணியிலுள்ள இளம் வீரர்களுக்கு கற்றுக் கொள்ளக்கூடிய நல்ல அனுபவமாக இருக்கும். இது எங்களுக்கு சாதகமான விடயம் தான் என்றார் தோனி.

# சச்சினின் முழு உருவகேக்




கிறிஸ்மஸ் பண்டிகையை ஒட்டிப் பெங்களூரில் நடக்கும் கண்காட்சியில் சச்சின் டெண்டுல்கரின் முழு உருவ கேக் இடம்பெற்றுள்ளது.

பெங்களூரில் கிறிஸ்மஸ் பண்டிகையை யொட்டி ஆண்டு தோறும் கேக் கண்காட்சி நடைபெறும்.

இந்த ஆண்டு கேக் கண் காட்சியில் கிரிக்கெட் வீரர் டெண்டுல்கரின் முழு உருவ கேக் இடம்பெற்று உள்ளது. 8 முதல் 10 பேர்கள் சேர்ந்து 5 தினங்களில் டெண்டுல்கரின் முழு உருவக் கேக்கை வடிவமைத்துள்ளனர். ரசிகர்களை வெகுவாக கவர்ந்து வரும் இந்தக் கேக், 75 கிலோ சர்க்கரையால் தயாரிக்கப்பட்டுள்ளது. (த)

# கோஹ்லியின் சதம் கைகொடுக்க தடுமாறி மீண்டது இந்தியா





தென் ஆப்ரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய வீரர் விராட் கோஹ்லி, சதம் அடித்து அசத்தினார்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி, 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் ஜோகனஸ்பார்க்கில் நேற்று ஆரம்பமாகியது. நா ணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி தலைவர் தோனி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இந்திய அணிக்கு ஷிகர் தவான், முரளி விஜய் ஜோடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். ஆரம்பத்தில் தடுமாறிய ஷிகர் தவான், 13 ஓட்டங்களில் வெளியேறினார். நீண்ட நேரம் தாக்குப்பிடித்த முரளி விஜய் (6) ஏமாற்றினார்.

கோஹ்லி, புஜாரா ஜோடி இந்திய அணியை சரிவில் இருந்து மீட்கும் முயற்சியில் இறங்கியது. இருந்த போதும் புஜாரா (25) தேவையில்லாமல் ரன் அவுட்டானார். ரோகித் சர்மா (14) நிலைக்கவில்லை. ஒரு புறம் இலக்குகள் வீழ்ந்தாலும் போராடிய கோஹ்லி, டெஸ்ட் அரங்கில் 5வது சதம் (119) அடித்தார். அவர் ஆட்டமிழந்து வெளியேறியதை அடுத்து களம் புகுந்த டோனி ரகானேயுடன் இணைந்து அணியை கௌரவமான நிலைக்கு அழைத்துச் சென்றார்.

நேற்றைய முதல் நாள் ஆட்ட முடிவில், முதல் இன்னிங்சில் இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 255 ஓட்டங்களை எடுத்திருந்தது. ரகானே (43), தோனி (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இன்று போட்டியின் இரண்டாவது நாளாகும். (த-400)


**French Classes பிரெஞ் வகுப்புகள்**

French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

[illegible]

மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில் வரவும்
61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

உதயன்
advt@uthayan.com

**வெளிவந்துவிட்டது**

**க.பொ.த (சா/த) விஞ்ஞானம்**

**1000 பல் தேர்வு வினாக்களும் விடைகளும்**

**தரம் 10, 11 இற்கானது**

**ஆக்கம்: சி. தங்கவடிவேல்**

கிடைக்குமிடங்கள்:

1. அன்னை புத்தகசாலை -யாழ்ப்பாணம்
2. சாலினி புத்தகசாலை - அச்சுவேலி
3. சிதம்பரப்பிள்ளை புத்தகச்சோலை-நெல்லியடி
4. பொதிகை புத்தகசாலை - சாவகச்சேரி
5. அறிவு நதி புத்தகசாலை - கிளிநொச்சி
6. குறிஞ்சி புத்தகசாலை - விசுவமடு
7. கலைச்சோலை புத்தகசாலை-முள்ளியவளை
8. அறிவாலயம் புத்தக நிலையம் - வவுனியா

(42735) (10,6,3)


# சுயநலவாதி பீற்றர்சன்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியின் ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. 5 டெஸ்ட் கொண்ட இந்த தொடரில் 3 டெஸ்டில் தோற்று தொடரை இழந்தது. பேர்த்தில் நடந்த 3 ஆவது டெஸ்டில் 150 ஓட்டங்களால் தோற்றது.

ஆஷஸ் டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட மோசமான தோல்விக்காக இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சனை முன்னாள் வீரரும், தொலைக்காட்சி வர்ணனை யாளருமான ஜெப்ரி பொய்காட் கடுமையாக தாக்கியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

பீற்றர்சன் தனது இலக்கை மிகவும் எளிதாக இழந்தார். .

விக்கெட் காப்பாளர் பிரட் ஹாடின் கூறியபடி கிளார்க் களத்தடுப்பு வியூகம் அமைத்தார். இதையெல்லாம் அறியாமல் பீற்றர்சன் ஆடியதது ஆச்சரியமானது. அவரது மூளை மழுங்கிவிட்டது.

அவர் கவனமுடன் விளையாடவில்லை. இதைபார்க்கும்போது அவர் சுயநலவாதி என்பது தெரிகிறது.

இவ்வாறு பொய்காட் கூறியுள்ளார்.

பேர்த் டெஸ்டில் 2 ஆவது இன்னிங்ஸில் அவர் 45 ஓட்டங்களை எடுத்தார்.

3 டெஸ்டில் 6 இன்னிங்ஸிலும் சேர்த்து பீற்றர்சன் 165 ஓட்டங்களை எடுத்துள்ளார். சராசரி 27.50 ஆகும். அதிகபட்சமாக அடிலெய்ட் டெஸ்டில் 53 ஓட்டங்கள் எடுத்தார். (த- 400)


**கருத்தரங்குகள்**

* [illegible]
வெள்ளி (20/12),
சனி (21/12)
காலை 9.00 - 3.00 மணிவரை
கட்டணம் 500/=
* [illegible]
தெரிவு: சனி/ஞாயிறு 1.00 மணி
* [illegible]
சனி 1.00 மணி
* SLEAS ஞாயிறு 9.00 மணி
T.P: 075 4164564
யாழ்ப்பாணக் கல்லூரி [illegible]


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.